
# கல்கி




KALKI டிஸம்பர் 9, 1951 4 அண

## இக்கைகள் சுறுசுறுப்பாயிருக்கின்றன, ஆனால்...



## ...சுறுசுறுப்பான கைகளும் அழுக்கடைகின்றன !



அழுக்கடைந்த கைகள்

**மறைந்திருக்கும்**

**அபாயத்தைத்**

தாங்குகின்றன. !

அழுக்கில் கண்களுக்கு

புலப்படாத கிருமிகள் இருப்பதால்!

லைப்பாயினால் அடிக்கடி கழுவுங்கள்

# லைப்பாய் சோப்

*அழுக்கிலிருக்கும் கிருமிகளிலிருந்து*

*உங்களை காப்பாற்றுகிறது !*

L. 180-50 TM

# கல்கி பொருளடக்கம்


மலர் 11
இதழ் 19

1951 டிசம்பர் 9

கர ஸ்ரீ
கார்த்திகை 23




"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


ஜூபிடர்
ரிலீஸ்
காட்சி எழிலும்
கவர்ச்சி மிகுந்த
கதைப்போக்கும்
கொண்ட
கலைச்சித்திரம்
ஸ்த்ரீ ஸாகஸம்
தமிழ்
உரிமையாளர்கள் பெல் பிக்சர்ஸ்
சென்னை: ஸ்ரீ கிருஷ்ண சித்ரா மற்றும் தமிழ்நாடெங்கும் நடைபெறுகிறது

கல்கி

மலர் 11 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 19

# அபேட்சகரோ அபேட்சகர்!

புலியும் மானும் ஒரே தண்ணீர்த் துறையில் தண்ணீர் குடித்தன. ஓநாயும் ஆடும் எதிரும் புதிருமாக உட்கார்ந்து ஓட்டலில் காப்பி சாப்பிட்டன. சிங்கமும் பசுவும் கைகோத்துக் கொண்டு சினிமா பார்க்கச் சென்றன.—இப்படியெல்லாம் பழைய புராண யுகத்தில் உலகில் தர்ம ராஜ்யம் நடந்து கொண்டிருந்த போது நடைபெற்றனவென்று கேள்விப் பட்டிருக்கிறோம். மறுபடியும் இப்போது நம் கண் முன்னால் அத்தகைய நிகழ்ச்சிகள் நடப்பதைக் காண்கிறோம்.

"திரேதா யுகத்தில் இருந்தபடி வர்ணாசிரம தர்மத்தை மீண்டும் நிலைநாட்டுவேன்!" என்று கர்ஜித்தார் ஒருவர். "சாதிகளையும் சாதிக்கு அடிப்படையான ஸநாதன தர்மத்தையும் அடியோடு அழிப்பேன்" என்று கூச்சலிட்டார் இன்னொருவர். இருவரும் அந்யோன்யமாக அளவளாவிப் பேசினார்கள்.

"புண்ணிய பாரத நாட்டிலிருந்து முஸ்லிம்களை ஒழித்துக் கட்டுவேன்" என்றார் ஒருவர். "சாவதற்கு முன்னால் முஸ்லிம் மதத்தைச் சேர்ந்துவிட்டுத்தான் சாவேன்" என்றார் மற்றொருவர். இந்த இருவரும் ஒருவரோடொருவர் காதைக் கடித்துக் கொண்டு அந்தரங்கம் பேசினார்கள்.

பணக்காரர்களையும் முதலாளிகளையும் பூண்டோடு அழிக்கப் போவதாக அறைகூவியவர்கள் கொழுத்த பணக்கார முதலாளிக் கட்சியாருடன் ராஜி உடன்படிக்கை செய்து கொள்ள முயன்றார்கள்.

இப்படியெல்லாம் காங்கிரஸை முறியடிப்பதற்காக ஐக்ய முன்னணி ஏற்படுத்தப் பார்த்தார்கள். காங்கிரஸை எதிர்ப்பவர்களின் பலம் சிதறி விட்டால் காங்கிரஸ் அபேட்சகர்கள் ஜயித்து விடுவார்களோ என்ற கவலையினால்தான்.

இவ்வளவு முயற்சிகளும் நடந்த பிறகு,—பலர் தங்கள் அபேட்சைப் பத்திரங்களை வாபஸ் வாங்கிய பிறகு,—முடிவாக வெளியாகியிருக்கும் அபேட்சகர்களின் ஜாபிதாவைப் பார்த்தால் நமக்குக் கதி கலங்குகிறது: மூர்ச்சை போட்டு விழலாம் என்று தோன்றுகிறது.

"உலகிலேயே கண்டும் கேட்டுமிராத பிரம்மாண்டமான பொதுத் தேர்தல்" என்று சொல்லிக் கொண்டிருந்தோமே, அது ஒரு விதத்தில் உண்மையாகி விட்டது. தேர்தல்களில் இவ்வளவு ஏராளமான அபேட்சகர்கள் வேறு எந்த நாட்டிலும் நின்றது கிடையாது. இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளில் பிரபல கட்சிகளின் சார்பாக இருவர் அல்லது மூவர் அபேட்சகர்களாக நிற்பார்கள்; சுயேச்சையாக ஒருவர் அல்லது இருவர் நிற்பார்கள்.

நமது நாட்டிலோ,—நல்லது,—சென்னை நகரில் உள்ள தொகுதிகளில் நிற்கும் அபேட்சகர்களின் கணக்கை மட்டும் பாருங்கள் :—

| | |
|---|---|
| ஹார்பர் | 9 |
| திருவல்லிக்கேணி | 13 |
| மயிலாப்பூர் | 14 |
| சூளை | 14 |
| பெரம்பூர் | 8 |
| ஆயிரம் விளக்கு | 17 |

வெளி ஜில்லாத் தொகுதிகளிலும் ஏறக்குறைய நிலைமை இப்படித்தான் இருக்கிறது. ஆகவே அபேட்சகர்களின் தொகையைப் பொறுத்த வரையில் இது பிரம்மாண்டமான தேர்தல் என்பதில் சந்தேகமில்லை.

அபேட்சகர்களாக நிற்பவர்களின் பெயர்களைக் கொஞ்சம் கண்ணோட்டமாகப் பார்க்கும்போது நமக்குப் பிரமிப்பு உண்டாகிறது. "யாரோ? இவர் யாரோ? இந்தப் பெயரையுடைய புண்ணியவான் யாரோ? இத்தனை நாளும் எங்கே இருந்தாரோ? இப்போது எப்படி வந்து முளைத்தாரோ?" என்றெல்லாம் கேட்கும்படி நேரிடுகிறது.

பத்திரிகைகளில் வரும் விகடத் துணுக்குகள் உண்மையாகவே நடக்கின்றனவே என்றும் ஆச்சரியம் அடைகிறோம்.

"தேர்தலுக்கு நிற்கிறீரே! அதற்கு உமக்கு என்ன தகுதி!" என்று கேட்டால்,

"ஏன்! எனக்கு இரண்டு கால்கள் இருக்கின்றன; நிற்கிறேன்!" என்று பதில் வருகிறது.

"இரண்டு கால் எதற்கு ஐயா! ஒற்றைக்காலால் கூட நிற்கலாம்! இந்தத் துறையில் உமக்கு ஏதாவது அநுபவம் உண்டா!" என்று கேட்டால்,

"பேஷாக உண்டு; பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸுக்கு நின்று நின்று ரொம்ப அநுபவம் உண்டு" என்று பதில் வருகிறது.

வேறு எந்த விதமான தகுதியும் அநுபவமும் அவசியம் என்று பல அபேட்சகர்கள் கருதியிருப்பதாகத் தெரியவில்லை.

இந்த நிலைமையிலும் ஒரு நியாயம் இருக்கத்தான் இருக்கிறது. இந்தியாவில் முதல் முதலாகப் பரிபூரண ஜனநாயக ஆட்சி ஏற்பட்டிருக்கிறதல்லவா! ஆகையால் பைத்திய ஆஸ்பத்திரிக்கு வெளியில் உள்ளவர்கள் எல்லாரும் தாராளமாகத் தேர்தலுக்கு நிற்கலாம். யார் தடுக்க முடியும்!

தடுக்க முடியாதுதான்; தேர்தலுக்கு நிற்பது அவரவர்களுடைய ஜனநாயக உரிமை. அது போலவே அப்படி நிற்பவர்களுடைய யோக்கியதாம்சங்களை ஆராய்ந்து பார்த்து, அவர்களுடைய தகுதி என்ன, பழைய சேவை என்ன,—என்று கவனித்து வோட்டுக் கொடுப்பது பொதுமக்களின் ஜனநாயக உரிமையாகும்.

இப்படி ஒப்பிட்டுத் தராதரங்களை ஆராய்ந்து பார்க்கும் போதுதான் காங்கிரஸ் அபேட்சகர் ஜாபிதாவின் மேன்மை நன்கு புலனாகிறது.

• • •

அபேட்சகர்களின் ஜாபிதா எப்படித் தயாராயிற்று என்பதை இச்சமயம் நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். காங்கிரஸ் அபேட்சகர் ஜாபிதா தயாராவதற்கு ஒரு வருஷத்துக்கு முன்னிருந்து அதைப் பற்றிக் கிளர்ச்சி நடந்தது; வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. பண்டித ஜவாஹர்லால் நேரு முதல் உள்ளூர்த் தொண்டர் வரையில் அதைப் பற்றிப் பேசினார்கள்; பத்திரிகைகளில் பலரும் எழுதினார்கள். அபேட்சகர்களாய் இருப்பவர்களுக்கு இன்னின்ன யோக்கியதைகளெல்லாம் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

மாகாணக் கமிட்டிகள் முதலில் வடி கட்டி அபேட்சகர்களைச் சிபார்சு செய்தன. அவற்றின் பேரில் நாற்பதினாயிரம் கடிதங்கள் மத்திய பார்லிமெண்டரிக் கமிட்டிக்குப் போயின. மேலிடத்தார் மறுபடியும் வடிகட்டிக் காங்கிரஸ் அபேட்சகர்களை முடிவாகப் பொறுக்கி எடுத்தார்கள். எனினும் கடைசி நிமிஷத்திலே கூட அந்தந்தத் தொகுதிக்காரர்களின் விருப்பத்தை முன்னிட்டு மாறுதல்கள் செய்யப்பட்டன. சென்னையின் பிரபல பத்திரிகாசிரியர் ஒருவரை எப்படி ஒவ்வொரு தொகுதியாக நகர்த்திக் கொண்டு போய்க் கடைசியில் திண்டிவனத்திலே போட்டார்கள் என்கிற ஒரு விஷயத்தைப் பார்த்தாலே போதும்; காங்கிரஸ் அபேட்சகர் பொறுக்குவதில் எவ்வளவு ஆலோசனைகளும் புனராலோசனைகளும் செய்யப்பட்டிருக்கின்றன என்று தெரிய வரும்.

காங்கிரஸுடன் போட்டியிடும் மற்றக் கட்சிகளுக்கு இந்தத் தொல்லைகள் எல்லாம் இல்லை. ஆலோசனை புனராலோசனை ஒன்றும் இல்லை. வடிகட்டுவது என்ற பேச்சே கிடையாது. பொது ஜன அபிப்பிராயம் அதில் பிரவேசிப்பதற்கே இடமில்லை. அந்தக் கட்சிகளில் அபேட்சகர்களாக முன்வருகிறவர்களே மிகச் சிலர். வந்தவர்களையெல்லாம் போட வேண்டியதுதானே! போக்கு வண்டியில் வாடகை இல்லாமல் ஏறும்போது "மாடு வேகமாய்ப் போகுமா!" என்று யோசிக்க முடியுமா! கொம்புக்கு ஏன் பூண் கட்டவில்லை என்றுதான் கேட்க முடியுமா!

ஆகவே காங்கிரஸுடன் போட்டியிடும் மற்றக் கட்சிகள் சட்புட்டென்று அபேட்சகர்களைப் பொறுக்கி வெளியிட்டு விட்டன. சில கட்சிகளில் மொத்தம் ஐந்தாறு பேர்தான் அங்கத்தினர்; அவ்வளவு பேரும் அபேட்சகர்கள்! அவர்களுடைய யோக்கியதைகளைப் பரிசீலிப்பது யார்! சிபார்சு செய்வது யார்! முடிவு செய்வது யார்!

தனிப்பட்ட முறையில் நிற்கும் சுயேச்சை அபேட்சகர்களைப் பற்றியோ, சொல்லவேண்டியதே யில்லை. அவர்களுக்கு அவர்களே ராஜா, அவர்களே மந்திரி, அவர்களே பிரஜை; கடைசியாக அவர்களுக்கு வோட்டுக் கொடுப்பவர்களும் அவர்களேதான் என்று பல சுயேச்சை அபேட்சகர்களின் விஷயத்தில் முடியக்கூடும்!

இதற்குச் சில விதிவிலக்குகள் உண்டு என்பதை நாம் அறிந்திருக்கிறோம். திறமைசாலிகளும் அறிவாளிகளும் சுயேச்சை அபேட்சகர்களாகச் சில இடங்களில் நிற்கிறார்கள். இவர்களை விரல்விட்டு எண்ணி விடலாம். இப்படிப்பட்டவர்களும் காங்கிரஸ் அபேட்சகர்களாக நின்றிருந்தால் இவர்களுடைய அறிவாற்றல்கள் நன்கு பயன்படுமே தவிர தனிப்பட்ட முறையில் நின்று வெற்றி பெற்றாலும் ஒன்றும் சாதித்துவிட முடியாது.

காங்கிரஸ் அபேட்சகர்கள்மீது பொது மக்களுக்குப் பூரண பிடிப்பு உண்டு. தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அவர்கள் சரியாக வேலை செய்யவில்லையென்று வைத்துக் கொள்வோம். அவர்களைப் பற்றிப் புகார் செய்ய வசதிகள் உண்டு. மாகாண காங்கிரஸ் ஸ்தாபனத்துக்கு எழுதலாம்; மத்திய காங்கிரஸ் ஸ்தாபனத்துக்கு மனுச் செய்யலாம்; ஜவாஹர்லால் நேருவிடம் நேரில் முறையிடலாம். காங்கிரஸின் விலாசம் எல்லாருக்கும் தெரியும். ஜவாஹர்லால்ஜியின் விலாசமும் அனைவரும் அறிவார்கள்

ஆனால் மற்றக் கட்சி அபேட்சகர்கள் மீது பொது மக்களுக்குப் பிடிப்பு மிகச் சொற்பம். அவர்களைப்பற்றிக் குறைகள் இருந்தால் பொது மக்கள் யாருக்கு எழுதுவது! அந்தந்தக் கட்சி ஸ்தாபனங்களுக்கு விலாசம் கிடையாது; இருந்தாலும் பொதுமக்களுக்குத் தெரியாது.

சுயேச்சை அபேட்சகர்கள் விஷயம் இன்னும் மோசம். ஒரு சுயேச்சை அபேட்சகர் வெற்றி பெறுகிறதாக வைத்துக் கொள்வோம். அவர் சரியாக வேலை செய்கிறார், இல்லை என்று கேட்பது யார்! அவரைப் பற்றிய புகார் இருந்தால் அவரிடமேதான் சொல்லிக் கொள்ள வேண்டும். அவரும் 'கெட் அவுட்!' என்ற பதிலைத் தயாராக வைத்திருப்பார். அவரை யார் கேட்க முடியும்!

காங்கிரஸ் ஸ்தாபனம் பொதுஜன அபிப்பிராயத்தின் ஆதிக்யத்துக்கு உட்பட்டது என்பதை இந்தத் தேர்தலுக்கு அபேட்சகர்கள் பொறுக்கும் விஷயத்தில் பார்த்தோம். சில சில தொகுதிகளில் பழைய எம். எல். ஏ.க்கள் பொதுமக்களின் அதிருப்திக்கு உள்ளானார்கள். அப்படிப்பட்டவர்கள் இம்முறை விலக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் திரும்பி வரப் பிரம்மப் பிரயத்தனம்

# இதய பீடம்


அடாடா! நீங்கள் எல்லோரும் ஏன் இவ்வளவு சிரமப்படுகிறீர்கள்? நேருஜி ஏற்கெனவே இங்கே இருக்கிறாரே
ஸ்ரீமான் பொதுஜனம்
எனக்கே ஓட்டு
ஓட்டு எனக்கே
SHASTRY

செய்தும் பயன்படவில்லை! விலக்கப்பட்டவர்கள் விலக்கப்பட்டவர்கள்தான்!

காங்கிரஸ் பொதுமக்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட ஸ்தாபனம் என்பதற்கு இதைக் காட்டிலும் வேறு ருசு தேவையில்லை.

இந்தத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர்களாகப் பொறுக்கப்பட்டிருப்பவர்களில் சிலர் அவ்வளவு திருப்திகரமாக இல்லையென்றே வைத்துக் கொள்ளலாம். அவர்களுக்கு வோட்டுக் கொடுத்து இன்று அனுப்பிவிட்டு நாளை ஜவாஹர்லால்ஜியிடம் நாம் சொல்லிக் கொள்ளலாம். "ஐயா! நீங்கள் சொன்னதற்காக நாங்கள் காங்கிரஸ் அபேட்சகருக்கு வோட்டுப் போட்டோம். இவர் தகுந்தபடி வேலை செய்யவில்லை; இவர் நடத்தை சரியாயில்லை. இதற்குப் பரிகாரம் வேண்டும்!" என்று கேட்கலாம். தக்கபடி வற்புறுத்திக் கேட்டால் பரிகாரம் கிடைக்கும்.

ஆனால் மற்றக் கட்சிகளின் விஷயத்திலோ, சுயேச்சை அபேட்சகர் விஷயத்திலோ என்ன பரிகாரம் கிடைக்கும்! பரிகாரம் தேடுவது குட்டிச் சுவரில் போய் முட்டிக் கொள்வதாகவே முடியும்.

* * *

காங்கிரஸ் அபேட்சகர்களின் ஜாபிதாவையும் மற்றக் கட்சிகளின் ஜாபிதாவையும் சுயேச்சை அபேட்சகர் ஜாபிதாவையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது காங்கிரஸ் அபேட்சகர்களின் ஜாபிதா மிகச் சிறந்து விளங்குகிறது. பாரபட்சமின்றிப் பார்ப்பவர்களுக்கு இதில் சந்தேகமே ஏற்படாது. தேச பக்தர்களும், தேசத் தொண்டு செய்தவர்களும், தியாக சீலர்களும், திறமைசாலிகளும், ஒழுக்கத்தில் மிக்கவர்களும், அறிவாற்றல் படைத்தவர்களும் காங்கிரஸ் ஜாபிதாவிலே காணப்படுகிறார்கள். பொதுஜன ஊழியர்கள் என்று நாடு முழுதும் நன்கறிந்த பெயர்கள் காங்கிரஸ் ஜாபிதாவிலேதான் அதிகமாகக் காணப்படுகின்றன.

காங்கிரஸின் சார்பாக நிற்பவர்கள் நம்முடைய மாபெருந் தலைவர்களின் ஆக்ஞைக்கு அடங்கி, காங்கிரஸ் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடந்து கொள்ளக் கூடியவர்கள்.

பொதுஜன அபிப்பிராயத்தின் ஆதிக்கத்துக்கு உட்பட்டு, பொது மக்களின் விருப்பத்தை நிறைவேற்றக் கூடியவர்களும் காங்கிரஸ் அபேட்சகர்கள்தான்.

ஆகையால், வரப்போகும் பொதுத் தேர்தலில் வோட்டுரிமை பெற்ற ஒவ்வொருவரும் வாக்குச் சாவடிக்குத் தவறாமல் சென்று, இரட்டை மாட்டுச் சித்திரமுள்ள பெட்டியில் வோட்டைப் போட்டு விட்டு வர வேண்டும். இதுவே தற்சமயம் நாம் பிறந்த நாட்டுக்கு நாம் செய்யக் கூடிய மேலான கடமையாகும்.

## "எஜமானர்களைப் படிப்பியுங்கள்!"

சென்னை நகரின் ஓரத்தில் உள்ள ஒரு தென்னந்தோப்பில் 'இந்நாட்டு மன்னர்'களில் இருவர் உட்கார்ந்து இளைப்பாறிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் இன்னொருவரைப் பார்த்து, "என்டாப்பா! மறுபடியும் இந்த வோட்டுத் தொல்லை வந்திடுச்சே! 'எனக்கு வோட்டுப் போடு' 'எனக்குப் போடு' என்று வந்து தொந்தரவு செய்யறானுங்களே!" என்றார்.

"ஆமாம்; வேலையில்லாத வெட்டி ஆள்கள் வேறே என்ன செய்வாங்க!" என்றார் மற்றவர்.

"நீ யாருக்கு வோட்டுப் போடப் போறே!" என்று முதல் ஆசாமி கேட்டார்.

"போன தடவைதான் காங்கிரஸ்காரனுக்குப் போட்டோம்; ஒன்றும் பிரயோசனம் இல்லையே! இந்தத் தடவை வெள்ளைக்காரனுக்குத்தான் போடப் போறேன்!" என்றார் இரண்டாவது 'இந்நாட்டு மன்னர்'.

இந்த நாட்டை ஆளும் வோட்டர்களின் அரசியல் அறிவு இவ்வளவு இலட்சணத்தில் இருக்கிறது. முதல் ஆளின் கேள்வி "வோட்டு என்பது ஒரு பெருந் தொல்லை" என்ற அபிப்பிராயத்தைக் காட்டுகிறது. இரண்டாவது ஆளின் பதில் இந்த தேசத்தில் இன்னமும் வெள்ளைக்காரன் இருக்கிறான், காங்கிரஸோடு போட்டி போடுகிறான் என்று எண்ணிக் கொண்டிருப்பதைக் குறிப்பிடுகிறது. சென்ற நாலு வருஷத்தில் இந்த தேசத்து ஆட்சி முறையில் நடந்திருக்கும் மாறுதல் ஒன்றும் அவன் கவனத்துக்கு வரவேயில்லை. வெள்ளைக்காரன் பாரத நாட்டுக்குச் சுதந்திரம் கொடுத்து விட்டுப் போய் விட்டதாகவே அவன் அறியவில்லை.

சென்னை நகரின் ஓரத்தில் வசிப்பவர்களின் அரசியல் ஞானம் இப்படியிருக்குமானால், வெளியூர்களிலே, ரயிலும் மோட்டாரும் எட்டாத நாட்டுப்புறக் கிராமங்களிலே, — மக்களின் அரசியல் அறிவு எப்படியிருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை.

இந்நாட்டை ஆளும் 'மன்னர்'களின் நிலை இப்படியே இருந்து வந்தால், மறுபடியும் வெள்ளைக்காரன் ஆட்சியே வந்தாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆங்கிலேய வெள்ளைக்காரனுக்குப் பதில் அமெரிக்க வெள்ளைக்காரனோ, ருஷ்ய வெள்ளைக்காரனோ வந்து சேர்வான். வெள்ளைக்காரனில் எந்த வெள்ளைக்காரனாயிருந்தால் என்ன! எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி! எதுவும் வீட்டை எரிக்கத்தான் செய்யும் அல்லவா!

ஆகையினால்தான் இந்நாட்டு அறிவாளிகளில் சிலர் "சமது எஜமானர்களைப் படிப்பியுங்கள்!" என்று அடிக்கடி கதறிக் கொண்டிருக்கிறார்கள். சென்ற வாரத்தில் ஸ்ரீ அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் டில்லி சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் அவ்வாறு பேசியிருக்கிறார்.

ஆனால் 'எஜமானர்களைப் படிப்பிப்பது எப்படி?' என்பதுதான் முக்கியமான கேள்வி.

மக்களிடையே அரசியல் அறிவு உண்டாவதற்கும், வளர்வதற்கும், நிலைத்து நிற்பதற்கும் முதலில் எழுத்தறிவு வேண்டும். எழுத்தறிவு ஏற்பட்ட பிறகு அது நிலைத்து நிற்பதற்கு வழி கண்டுபிடிக்க வேண்டும்.

நாடெங்கும் புத்தகசாலைகள் ஏற்படுத்துவதன் மூலமாகவே இந்நாட்டு மன்னர்களைப் படிப்பிக்க முடியும்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு புத்தகசாலையாவது இருக்க வேண்டும்; ஒவ்வொரு பட்டணத்திலும் பல புத்தகசாலைகள் ஏற்பட வேண்டும்.

சென்னை மாகாணத்தில் நம் இராஜ்ய சர்க்கார் வருஷத்திற்கு ஏழு கோடி ரூபாய் ஆரம்பக் கல்விக்காகச் செலவழிக்கிறார்கள்; இதைப் பெருமையுடன் அடிக்கடி சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் இந்த ஏழு கோடி ரூபாயில் தற்போது ஆறு கோடி ரூபாய் வீண் என்பது ஆதார பூர்வமான உண்மை. ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் பிள்ளைகளில் ஏழில் ஒரு பையன் வீதமே உயர்தரப் பள்ளிக்குப் போகிறான். மற்ற ஆறுபேரும் மூன்றாவது, நாலாவது, ஐந்தாவது வகுப்புகளுடன் நின்று விடுகிறார்கள். பின்னர் இரண்டு வருஷத்திலிருந்து ஐந்து வருஷத்திற்குள் எழுத்தறிவை அடியோடு மறந்து விடுகிறார்கள். பிறகு கையெழுத்துப் போட மட்டுந்தான் இவர்கள் எழுத்தறிவு பயன்படுகிறது. புத்தகம் படிக்க முடியாது; படித்துத் தெரிந்து கொள்ள முடியாது. கடிதம் எழுத முடியாது; வந்த கடிதத்தைப் படிக்க முடியாது.

ஆகவே ஏழு கோடி ரூபாயில் ஆறு கோடி ரூபாய் வீண் விரயம் என்று சொல்வதில் தவறில்லையல்லவா!

அந்த ஆறு கோடியும் பயன்பட வேண்டுமானால் ஆரம்பப் பள்ளிக்கூடங்களோடு நிற்கும் பிள்ளைகளுக்கு மேலும் தொடர்ந்து ஏதாவது படித்துக்கொண்டிருக்க வசதி ஏற்படுத்த வேண்டும். புத்தகசாலைகளின் மூலமாகத்தான் இந்த வசதியை அளிக்க முடியும்.

அம்மாதிரியே வயது வந்தோருக்கு எழுத்தறிவு அளிப்பதற்காக ஒரு முயற்சி நடைபெறுகிறதே, அதற்காக லட்சக் கணக்கில் செலவு செய்கிறார்களே,—அந்த முயற்சியினால் கிடைத்த பலன் ஏற்படுவதற்கும் புத்தகசாலைகள் அவசியம். இல்லாவிட்டால் ஆறு மாதம் சிரமப் பட்டுக் கற்றுக் கொண்ட எழுத்தறிவை அடுத்த ஆறு மாதத்தில் இழந்து விடுவார்கள்.

தமிழ் நாட்டில் தற்சமயம் சுமார் 900 புத்தகசாலைகள் இருக்கின்றன. இவை உண்மையில் 'புத்தகசாலை'கள் என்ற பெயருக்கே தகுதியற்றவை. மிகப் பெரும்பாலானவற்றில் முன்னூறு நானூறு புத்தகங்கள்தான் இருக்கின்றன. ஒரு அலமாரி அல்லது இரண்டு அலமாரிக்குள் அடங்கிவிடும். இவற்றில் பெரும்பாலான புத்தகங்கள் கிராமத்து மக்களால் படிக்க முடியாதவை; படிக்கத் தகுதியற்றவை.

மேனாடுகளில் லட்சக்கணக்கான புத்தகங்கள் மைல் கணக்கில் அடுக்கி வைத்திருக்கும் புத்தகசாலைகளைப் பற்றிப் படிக்கிறோம். அவற்றுடன் நம் கிராம புத்தகசாலைகளை ஒப்பிட்டால் நாம் அவமானத்தினால் தலையைத் தொங்கப் போட்டுக் கொள்ள வேண்டியதுதான்.

தமிழ் நாட்டிலுள்ள மொத்தம் இரண்டரைக் கோடி ஜனங்களுக்குக் குறைந்த பட்சம் உடனடியாகப் பதினாயிரம் புத்தகசாலைகள் வேண்டும்.

ஒவ்வொரு புத்தகசாலையிலும் குறைந்த பட்சம் பதினாயிரம் நல்ல தமிழ்ப் புத்தகங்கள் இருக்க வேண்டும். பழைய இலக்கியம், புதிய இலக்கியம், சரித்திரம், பிரயாணம், பொருளாதாரம், அரசியல் அறிவை வளர்க்கும் நூல்கள், விஞ்ஞான அறிவை வளர்க்கும் நூல்கள், மக்களுக்குப் படிப்பில் ருசியை வளர்க்கும் கதைகள், நாடகங்கள், காவியங்கள்—இவையெல்லாம் தகுந்த அளவில் ஒவ்வொரு புத்தகசாலையிலும் இருக்க வேண்டும்.

உண்மையில் இத்தகைய ஒரு புத்தகசாலைத் திட்டம் காங்கிரஸ் ஐந்து வருஷ திட்டத்தில் சேருவதற்குரிய முக்கியம் வாய்ந்தது. நம் எஜமானர்களை, இந் நாட்டு மன்னர்களை, அதாவது வோட்டர்களைப் படிப்பிக்க வேண்டிய காரியம் அல்லவா! ஆனால் இந்த விஷயம் எப்படியோ நம் மாபெரும் தலைவர்களின் கவனத்தைக் கவரவில்லை. அவர்களுடைய கவனத்துக்குக் கொண்டுவருவது ஆர்வமுடையவர்களின் கடமை.

* * *

சென்னைச் சட்டசபையில் சில காலத்துக்கு முன்னால் புத்தகசாலைச் சட்டம் நிறைவேறியது. இச் சட்டத்தின்படி நகரசபைகளும் பஞ்சாயத்துக்களும் புத்தகசாலை வரி வசூல் செய்யத் தொடங்கிவிட்டார்கள். கணிசமான தொகையும் சேர்ந்துவிட்டது. ஆனால் பணத்தைச் செலவழிக்க வகை தெரியவில்லை. புதிதாகப் புத்தக சாலைகள் ஏற்படவில்லை. பழைய புத்தகசாலைகளும் அபிவிருத்தி அடையவில்லை.

பணம் வசூலித்து வைத்திருக்கும் அதிகாரிகள் "புத்தகசாலைகளுக்கு ஏற்ற தமிழ்ப் புத்தகங்கள் கிடைக்கவில்லை!" என்கிறார்கள்.

புத்தகப் பிரசுரகர்த்தர்களைக் கேட்டால், "புத்தகங்கள் நிறைய விற்பனையானால்தானே நல்ல புத்தகங்களை நாங்கள் ஏராளமாக வெளியிட முடியும்!" என்கிறார்கள்.

பைத்தியம் தெளிந்தால் கலியாணம் ஆகும், கலியாணம் ஆனால் பைத்தியம் தெளியும் என்றவாறாகத்தான் நிலைமை இருக்கிறது.

* * *

நிகழும் டிசம்பர் மாதம் 25உ 26உ களில் சென்னைமா நகரில் டாக்டர் ஆர். எம். அளகப்பச் செட்டியார் அவர்களின் தலைமையில் புத்தகாலய மகாநாடு ஒன்று கூட்டப்படுகிறது.

அம் மகாநாட்டில் மேலே கூறிய பிரச்னைகளைப் பற்றி யோசித்துப் பரிகாரம் கூறப்படும் என்று எதிர்பார்க்கிறோம்.

அம் மகாநாட்டுக்குத் தமிழ் நாட்டில் இப்போது நடந்து வரும் புத்தக சாலைகளின் நிர்வாகிகள் பிரதிநிதிகளை அனுப்பி ஒத்துழைக்க வேண்டும். சர்க்கார் மான்யம் பெற்றோ, பெறாமலோ இது வரை புத்தக சாலைகள் நடத்தி வருவோர் எல்லாரும் மேற்படி மகாநாட்டில் ஊக்கம் கொள்ள வேண்டும். மற்றும் புத்தகாலய இயக்கத்தில் ஆர்வம் உள்ளவர்கள் அனைவரும் விஜயம் செய்ய வேண்டும். புத்தகப் பதிப்பாளர்களும் நூலாசிரியர்களும் பூரணமாக ஒத்துழைக்க வேண்டும்.

தேர்தல் மும்முரத்தில் ஈடுபட்டிருக்கும் அரசியல் பிரமுகர்கள்கூடத் தங்கள் 'எஜமானர்களைப் படிப்பிக்கும்' இவ் வியக்கத்தில் சிறிது சிரத்தை காட்டுவது மிகையாகாது.

புத்தகாலய மகாநாடு சிறப்பாக நடைபெற வேண்டுமென்று விரும்புகிறோம். புத்தகாலய இயக்கம் தமிழ் நாட்டில் வேரூன்றி வளர்ந்து கப்புங் கிளையும் விட்டுப் படர்ந்து நாடெங்கும் புத்தகாலய மயமாக விளங்கும் நல்ல நாளை எதிர்பார்க்கிறோம்.

மகாநாட்டைக் குறித்து மேலும் விவரம் தெரிந்து கொள்ள விரும்புவோர், காரியதரிசி, புத்தகாலய மகாநாடு, 'எவர்கிரீன்'. தியாகராஜ நகர் என்ற விலாசத்துக்கு எழுதக் கோருகிறோம்.

# பொன்னியின்



# செல்வன்

கல்கி

அத்தியாயம் 48

## 'கலபதி'யின் மரணம்

குதிரை மீது வந்த பெண்மணி யார் என்பது இளவரசருக்கு உடனே தெரிந்து போயிற்று. குதிரை நின்ற இடத்தை நோக்கி அவர் விரைந்து சென்றார். அவருடன் பூங்குழலியும் போனாள். மற்றவர்களும் சற்றுத் தூரத்தில் தயங்கித் தயங்கிப் போனார்கள்.

ஊமை ராணி அதற்குள் குதிரையிலிருந்து இறங்கி விட்டாள். பின்னால் கூட்டமாக வந்தவர்களைச் சற்றுக் கவலையுடன் பார்த்து விட்டுப் பூங்குழலியிடம் சமிக்ஞை பாஷையில் ஏதோ சொன்னாள். "பெரியம்மா காட்டில் ஏதோ அதிசயத்தைப் பார்த்திருக்கிறாள். அந்த இடத்துக்கு நம்மை வரும்படி அழைக்கிறாள்!" என்றாள். இளவரசர் அக்கணமே போவதென்று தீர்மானித்து விட்டார். மற்றவர்களும் தம்முடன் வரலாமா என்று கேட்கச் சொன்னார். ஊமை ராணி சிறிது யோசித்து விட்டு, சம்மதத்துக்கு அறிகுறியாகத் தலையை அசைத்தாள்.

போகும்போது எல்லோரும் அவள் ஏறி வந்த குதிரையைப் பற்றியே பேசிக்கொண்டு போனார்கள். அது அரபு நாட்டிலிருந்து வந்த அற்புதமான உயர் ஜாதிக் குதிரை. இந்த மூதாட்டிக்கு எப்படிக் கிடைத்தது? சமீப காலத்தில் இந்தப் பிரதேசத்தில் சைன்யம் எதுவும் வந்து இறங்கவில்லை; போர் ஒன்றும் நடக்கவில்லை. அப்படியிருக்கும் போது இக்குதிரை இந்தப் பெண்மணிக்கு எப்படிக் கிடைத்திருக்க முடியும்?

தொண்டைமானாற்றின் முகத்துவாரத்தின் அருகில் சோழ நாட்டுக் கப்பல் ஒன்று கரை தட்டிப் புதைந்திருந்ததைப் பார்த்தோம். அங்கிருந்து சிறிது தூரம் வரையில் இலங்கைத்தீவின் கரை தென் கிழக்குத் திசையாக வளைந்து நெளிந்து சென்றது. அடிக்கடி கடல் நீர் பூமிக்குள் புகுந்து சிறிய நீர் நிலைகளையும் பெரிய நீர் நிலைகளையும் உண்டாக்கியிருந்தது. இத்தகைய வளைகுடா ஒன்றுக்குள்ளிருந்துதான் வந்தியத்தேவன் முதலியவர்கள் அன்று காலையில் பார்த்த கப்பல் வெளியே வந்து கடலில் சென்றது.

இப்போது ஊமை ராணி தென் கிழக்குத் திசையிலே அவர்களை அழைத்துக் கொண்டு சென்றாள். அடர்ந்த காட்டுக்குள்ளே புகுந்து சென்றாள். போகப் போக, இளவரசரின் ஆர்வம் அதிகமாயிற்று. ஏதோ ஒரு முக்கியமான சம்பவம் நடந்திருக்க வேண்டும்; இல்லாவிட்டால் இவ்வளவு தூரம் நம்மை இம்மூதாட்டி அழைத்துப் போக மாட்டாள் என்று எண்ணினார். திடீரென்று அச்சம்பவம் அவர்களுடைய கண் முன்னால் வந்து நின்றது!

காட்டில் சிறிது இடை வெளி ஏற்பட்டதும் நீர் நிலை ஒன்று தெரிந்தது. அதன் கரையில் மனிதர்கள் சிலர் இறந்து கிடக்

தார்கள். பிணங்களின் நாற்றத்தோடு காய்ந்து போன மனித இரத்தத்தின் நாற்றமும் கலந்து வந்தது. எத்தனையோ போர்க்களங்களின் அநுபவம் பெற்ற அந்த மனிதர்களுக்கு உயிரில்லா மனித உடல்களும் காய்ந்த இரத்தமும் புதிய அநுபவங்கள் அல்ல. எனினும், ஏதோ அதிசயமான, மர்ம பயங்கரமான, காரியம் இங்கே நடந்திருக்கிறது என்ற எண்ணம் எல்லாருடைய மனதிலும் ஆர்வத்தோடு அருவருப்பையும் உண்டாக்கியது.

அருகிலே சென்று பார்த்தால் உயிரற்றுக் கிடந்த உடல்கள் எல்லாம் தமிழ் நாட்டு மாலுமிகளின் உடல்கள் என்று தெரிய வந்தது. "சீக்கிரம்! சீக்கிரம்! யாருக்காவது இன்னும் உயிர் இருக்கிறதா என்று பாருங்கள்!" என இளவரசர் கூவினார். அவருடன் வந்தவர்கள் ஒவ்வொரு உடலுக்கு அருகிலும் சென்று பரிசோதிக்கத் தொடங்கினார்கள்.

இளவரசரை ஊமை ராணி மறுபடியும் கையினால் சமிக்ஞை செய்து அழைத்துப் போனாள். உடல்கள் கிடந்த இடத்துக்குச் சிறிது தூரத்துக்கப்பால் இருந்த மரத்தடிக்கு அழைத்துப் போனாள். அந்த மரத்தடியில் ஒரு கோர ஸ்வரூபம் சாய்ந்து படுத்திருந்தது. படுத்திருந்தவன் மனிதன்தான். ஆனால் அதை நம்புவது கஷ்டமாயிருந்தது. உடம்பெல்லாம் காயங்கள். மண்டையில் பட்டிருந்த காயங்களிலிருந்து இரத்தம் முகத்தில் வழிந்து மிகப் பயங்கரமாகச் செய்திருந்தது. ஒவ்வொரு கணமும் மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அம்மனிதனுடைய முகத்தில் இளவரசரைக் கண்டதும் மலர்ச்சியின் சிறிய அறிகுறி தோன்றியது. அவன் வாய் திறந்து ஏதோ பேச முயன்றான். ஆனால் அவன் வாயிலும் இரத்தமாயிருந்தபடியால் அவனுடைய முகத்தின் கோரம் அதிகமாயிற்று.

இளவரசர் பரபரப்புடன் அவன் அருகில் போய் உட்கார்ந்தார். "சீக்கிரம் தண்ணீர் கொண்டு வாருங்கள்!" என்று கத்தினார்.

அம்மனிதன், "வேண்டாம், இளவரசே! சற்று முன்னால்தான் இந்தப் பெண்மணி தண்ணீர் கொடுத்தாள். அவள் அச்சமயம் வராதிருந்தால் இதற்குள் என் உயிர் பிரிந்திருக்கும். ஐயா! தங்களுக்குத் துரோகம் செய்ய வந்ததின் பலனை இங்கேயே அநுபவித்து விட்டேன். மறு உலகில் இதற்காக மறுபடியும் கடவுள் என்னைத் தண்டிக்க மாட்டார்" என்றான்.

இளவரசர் அவன் குரலைக் கேட்டதும் முகத்தை உற்றுப் பார்த்தார், "ஆ! கலபதி!* இது என்ன பேச்சு! இதெல்லாம் எப்படி நடந்தது? எனக்கு நீர் என்ன துரோகம் செய்வதற்காக வந்தீர்? அதை நான் நம்பவே முடியாது!" என்றார்.

"ஐயா! தங்கள் உத்தம குணத்தினால் அப்படிச் சொல்கிறீர்கள். பழுவேட்டரையர்களின் சொற்படி தங்களைச் சிறைப்படுத்திக் கொண்டு போக வந்தேன். இதோ கட்டளை!" என்று சொல்லி, மடியிலிருந்து ஓலை ஒன்றை எடுத்துக் கொடுத்தான், சாகுந்தறுவாயில் இருந்த கலபதி.

ஓலையைக் கண்ணோட்டமாக இளவரசர் ஒரு வினாடியில் பார்வையிட்டார். "இதில் உமது துரோகம் என்ன? சக்கரவர்த்தியின் கட்டளையைத்தானே நிறைவேற்ற வந்தீர்? அதையறிந்து நானே விரைந்து ஓடி வந்தேன். அதற்குள் இந்த விபரீதங்கள் எப்படி நேர்ந்தன? சீக்கிரம் சொல்லுங்கள்!" என்றார்.

"சீக்கிரம் சொல்லத்தான் வேண்டும். இல்லாவிட்டால் அப்புறம் சொல்லவே முடியாது!" என்றான் கலபதி. பிறகு அவன் அடிக்கடி தட்டுத்தடுமாறிப் பின்வரும் வரலாற்றைக் கூறினான் :—

சக்கரவர்த்தியின் கட்டளையைப் பெற்றுக் கொண்டு, கலபதி இரண்டு கப்பல்களுடன் நாகப்பட்டினத்திலிருந்து கிளம்பினான். அந்த வேலை அவனுக்குப் பிடிக்கவில்லைதான். ஆயினும் சக்கரவர்த்தியின் கட்டளையை மீற முடியாமல் புறப்பட்டான். புறப்படும்போது பழுவேட்டரையர்கள் அவனிடம் கண்டிப்பாகச் சில கட்டளைகளை இட்டிருந்தார்கள். அதாவது இலங்கையை அடைந்ததும் தனியான இடத்தில் கப்பல்களை நிறுத்திக் கொண்டு இளவரசர் எங்கே இருக்கிறார் என்று முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். பிறகு அவரை நேரில் சந்தித்துச் சக்கரவர்த்தியின் ஓலையைக் கொடுக்க வேண்டும். அதற்கு முன்னால் சேநாதிபதி கொடும்பாளூர் வேளாருக்கு இந்தச் செய்தி தெரியக் கூடாது. இளவரசரிடம் கட்டளையைக் கொடுத்த பிறகு அவராக வந்தால் சரி, இல்லாவிட்டால் பலவந்தமாகச் சிறைப்படுத்தியாவது கொண்டு வர வேண்டும்......இவ்

* அந்நாளில் சேனைத் தலைவனைத் 'தளபதி' என்று அழைத்தது போல் மரக்கலத் தலைவனைக் 'கலபதி' என்று அழைத்தார்கள்.

விதம் சொல்லித் தங்கள் அந்தரங்க ஆட்கள் சிலரையும் பழுவேட்டரையர்கள் கலபதியுடன் சேர்த்து அனுப்பினார்கள்.

கலபதி மனதில் பெரிய பாரத்துடனேயே புறப்பட்டு வந்தான். அவன் ஏறியிருந்த கப்பல் மாலுமிகளில் பலருக்கு எதற்காக இலங்கை போகிறோம் என்பது தெரிந்திருக்கவில்லை. இதனால் அவனுடைய மனவேதனை அதிகமாகியிருந்தது. அவர்களிடம் எப்படிச் சொல்வது என்று தயங்கினான். கப்பல்களைத் தொண்டைமானாற்றின் முகத்துவாரத்தில் கொண்டு போய் நிறுத்திய பிறகு கலபதி இன்னும் சில மாலுமிகளோடு காங்கேசன் துறைக்குப் போனான். இளவரசர் அப்போது எங்கே இருக்கிறார் என்று விசாரித்து வருவதற்காகத்தான். தென்னிலங்கையின் உட்பகுதியில் இளவரசர் பிரயாணம் செய்து கொண்டிருப்பதாகக் காங்கேசன் துறையில் தெரிந்து கொண்டு திரும்பி வந்தான்.

கலபதி திரும்பி வருவதற்குள்ளே மாலுமிகளுக்கு விஷயம் தெரிந்து விட்டது. பழுவேட்டரையர்களின் அந்தரங்க ஆட்கள் சிலர் இருந்தார்கள் அல்லவா? அவர்கள் மூலம் பிரஸ்தாபம் ஆகிவிட்டது. கலபதி திரும்பி வந்ததும் மாலுமிகள் கூட்டமாகச் சேர்ந்து கொண்டு கலபதியிடம் கேட்டார்கள். "பொன்னியின் செல்வரைச் சிறைப்படுத்திக் கொண்டு போகவா நாம் வந்திருக்கிறோம்?" என்று வினவினார்கள். கலபதி உண்மையைக் கூறினான். "நாம் இராஜாங்க சேவையில் இருப்பவர்கள். சக்கரவர்த்தியின் கட்டளையை நிறைவேற்ற வேண்டியவர்கள்" என்றான். "எங்களால் அது முடியாது. இது சக்கரவர்த்தியின் கட்டளையும் அல்ல; பழுவேட்டரையர்களின் கட்டளை" என்றார்கள்.

"பின்னே நீங்கள் என்னதான் செய்யப் போகிறீர்கள்?" என்று கலபதி கேட்டான்.

"மாதோட்டம் சென்று இளவரசருடன் சேர்ந்து கொள்ளப் போகிறோம்."

"மாதோட்டத்தில் இளவரசர் இல்லையே?"

"இல்லாவிடில் சேனாபதி கொடும்பாளூர் வேளாரிடம் சரண் அடைவோம்."

கலபதி அவர்களுக்கு எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் பயனில்லை. கலபதியுடன் நிற்பதற்குப் பழுவேட்டரையர்களின் அந்தரங்க ஆட்கள் உள்படச் சுமார் பத்துப் பேர்தான் சம்மதித்தார்கள். பத்துப் பேரை வைத்துக் கொண்டு இருநூறு பேரை என்ன செய்ய முடியும்?



"சரி; அப்படியானால் இப்போதே போய்த் தொலையுங்கள்! பின்னால் வருகிறதையும் அநுபவித்துக் கொள்ளுங்கள்! என்னால் இயன்றவரையில் என் கடமையை நான் செய்வேன்!" என்றான் கலபதி.

மாலுமிகளில் பலர் இரண்டு கப்பல்களில் ஒன்றைச் செலுத்திக் கொண்டு மாதோட்டம் போகலாம் என்று உத்தேசித்தார்கள். மற்றும் சிலர் அதை ஆட்சேபித்தார்கள். ஆகவே கப்பலிலிருந்து இறங்கித் தரை மார்க்கமாகவே புறப்பட்டார்கள். புறப்படும் அவசரத்தில் அவர்கள் ஏறியிருந்த கப்பலுக்கு நங்கூரம் பாய்ச்சவில்லை. கப்பல் நகர்ந்து நகர்ந்து சென்று கரைதட்டி உடைந்து மண்ணில் புதைந்து விட்டது.

இதற்குப் பிறகு கலபதி மற்றொரு கப்பலுடன் அங்கேயிருக்க விரும்பவில்லை. காங்கேசன் துறையில் அவன் ஒரு செய்தி கேள்விப்பட்டிருந்தான். சில நாளைக்கு முன்பு முல்லைத் தீவுக்குப்



பக்கத்தில் அரபு நாட்டுக் கப்பல் ஒன்று உடைந்து மூழ்கிவிட்ட தென்றார். அதிலிருந்து தப்பிப் பிழைத்த மூர்க்க அராபியர்கள் சிலர் அந்தப் பக்கத்தில் திரிந்து கொண்டிருந்ததாகவும் சொன்னார்கள். எனவே, கரை தட்டிப் புதைந்த கப்பலுக்குப் பக்கத்தில் இன்னொரு கப்பலையும் நிறுத்தி வைக்க அவன் விரும்பவில்லை. நன்றாயிருந்த கப்பலை அங்கிருந்து அப்புறப்படுத்திக் கொண்டு போனான். கடல் அடுத்தபடியாகப் பூமிக்குள் சென்றிருந்த குடாவில் கொண்டு போய் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தினான்.

பின்னர் கலபதி தன்னுடன் இருந்த மாலுமிகளுடன் கரையில் இறங்கி மேலே செய்ய வேண்டியதைப்பற்றி அவர்களிடம் கலந்து ஆலோசித்தான். அவன் மட்டும் தனியாகச் சென்று இளவரசரிடம் கட்டளையைச் சேர்ப்பிப்பதாகவும் அதுவரையில் மற்றவர்கள் கப்பலைப் பத்திரமாகப் பாதுகாத்து வர வேண்டும் என்றும் சொன்னான்.

மாலுமிகள் தங்கள் கவலைகளைக் கலபதியிடம் தெரிவித்துக் கொண்டார்கள். அவர்களுக்குக் கலபதி தைரியம் கூறிக் கொண்டிருக்கும் போதே மயிர்க்கூச்சு எடுக்கும்படியான பயங்கரக் கூச்சல்களைப் போட்டுக் கொண்டு சில மனிதர்கள் அவர்களைச் சூழ்ந்து கொண்டு தாக்கினார்கள். அவர்கள் அரபு நாட்டார் என்பது தெரிந்தது. தமிழ் மாலுமிகள் அச்சமயம் இந்தத் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. சண்டைக்கு ஆயத்தமாகவும் இருக்கவில்லை. கையில் கத்திகளும் வைத்திருக்கவில்லை. எனினும் தீரத்துடன் போராடினார்கள். போராடி எல்லாரும் உயிரை விட்டார்கள்.

"இளவரசே! நான் ஒருவன் மட்டும் மரண காயங்களுடன் ஓடி ஒளிந்து உயிரைக் காப்பாற்றிக் கொண்டேன். நடந்தது என்ன வென்பதை யாருக்காவது சொல்ல வேண்டும் என்பதற்காகவே இதுவரையில் உயிரை வைத்துக் கொண்டிருந்தேன். இளவரசே! தங்களையே நேரில் பார்த்துச் சொல்லும்படியான பாக்கியம் எனக்குக் கிட்டிவிட்டது. தங்களுக்கு நான் துரோகம் செய்ய எண்ணியதற்குப் பலனையும் அநுபவித்துவிட்டேன். பொன்னியின் செல்வரே என்னை மன்னித்து விடுங்கள்!" என்றான் கலபதி.

"கடமையை ஆற்றிய கலபதியே! உம்மை எதற்காக நான் மன்னிக்கவேண்

டும்? போர்க்களத்தில் உயிரை விடும் வீரர்கள் அடையும் வீர சொர்க்கம் ஒன்று இருந்தால் அதற்கு நீரும் அவசியம் போய்ச் சேர்வீர்! சந்தேகம் இல்லை!" என்று சொல்லி இளவரசர் அக் கலபதியின் தீயெனக் கொதித்த நெற்றியைத் தடவிக் கொடுத்தார்.

கலபதியின் கண்களிலிருந்து அப்போது பெருகிய கண்ணீர் அவன் முகத்தில் வழிந்திருந்த இரத்தத்தோடு கலந்தது.

மிக்க சிரமத்துடன் அவன் தன் கைகளைத் தூக்கி இளவரசரின் கரத்தைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

இளவரசரின் கரம் கலபதியின் கண்ணீரால் நனைந்தது. அவருடைய கண்களிலும் கண்ணீர் துளித்தது.

சிறிது நேரத்துக்கெல்லாம் கலபதியின் உயிர் அவன் உடலை விட்டுப் பிரிந்தது.

## அத்தியாயம் 49

# கப்பல் வேட்டை

கலபதியின் உடலையும் மாண்டுபோன மற்ற மாலுமிகளின் உடல்களையும் சேர்த்து வைத்து உலர்ந்த மரக்கட்டைகளை அடுக்கித் தகனம் செய்தார்கள்.

தீ மூட்டி எரியத் தொடங்கிய போது இளவரசர் முகத்தில் கண்ணீர் பெருகிக் கொண்டிருப்பதைச் சேநாதிபதி பூதி விக்கிரமகேசரி கவனித்தார்.

"ஐயா! இந்தப் பாதகர்களின் சாவுக்காகவா கண்ணீர் விடுகிறீர்கள்? தங்களைச் சிறைப்படுத்த வந்த துரோகிகளுக்குக் கடவுளே தக்க தண்டனை அளித்து விட்டார். தாங்கள் ஏன் வருந்த வேண்டும்?" என்றார்.

"சேநாபதி! இவர்கள் துரோகிகள் அல்ல; இவர்களுடைய மரணத்துக்காகவும் நான் வருத்தப்படவில்லை. சோழ நாட்டுக்கு இவ்வளவு பொல்லாத காலம் வந்து விட்டதே என்று வருந்துகிறேன்" என்றார்.

"பொல்லாத காலம் பழுவேட்டரையர்களுடனேயே வந்து விட்டது. இப்போது புதிதாக ஒன்றும் வரவில்லையே!"

"புதிதாகத்தான் வந்திருக்கிறது. கலபதியின் கட்டளையைக் கப்பல் மாலுமிகள் மீறுவது என்று வந்துவிட்டால் அதைக் காட்டிலும் ஒரு ராஜ்யத்துக்குக் கேடு வேறு என்ன இருக்க முடியும்? சேநாபதி! இது ஒரு சிறிய அறிகுறிதான்! இதைப் போலவே சோழ ராஜ்யம் எங்கும் பிளவுகள் ஏற்படுமோ என்று அஞ்சுகிறேன்! அப்படி ஏற்பட்டால் விஜயாலய சோழர் அஸ்திவாரமிட்ட இந்த மகாராஜ்யம் சின்னாபின்னமாகி விடுமே! இந்தக் கேடு என்னாலேயா நேர வேண்டும்? மகாபாரதக் கதை கேட்டிருக்கிறேன். துரியோதனன் பிறந்தபோது நரிகளும் ஓநாய்களும் பயங்கரமாக ஊளையிட்டன என்று பாரதம் சொல்லுகிறது. நான் பிறந்த போதும் அப்படி நரிகளும் ஓநாய்களும் பயங்கரமாக ஊளையிட்டிருக்க வேண்டும்!" என்றார் இளவரசர்.

"ஐயா! தாங்கள் இந்த உலகில் ஜனித்த போது என்னென்ன நல்ல சகுனங்கள் ஏற்படலாமோ அவ்வளவும் ஏற்பட்டன. தங்கள் ஜாதகத்தைக் கணித்த சோதிடர்கள்..."

"போதும், சேநாபதி! போதும்! இந்தப் பேச்சைக் கேட்டுக் கேட்டு என் காது புளித்து விட்டது. என் ஜாதக விசேஷம் இருக்கட்டும். நாம் பிரிய வேண்டிய காலம் வந்து விட்டது. சேநாதிபதி! தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கப்பல்களிலிருந்து கலபதியின் கட்டளையை மீறிச் சென்ற மாலுமிகள் தங்களிடம் வந்தால் தாங்கள் அவர்களைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது. உடனே சிறைப்படுத்தி அவர்களைத் தஞ்சைக்கு அனுப்பவேண்டும்."

"இளவரசே! கலபதி கூறியதை மட்டுமே நாம் கேட்டோம். மாலுமிகளின் கட்சி என்னவென்று நாம் கேட்கவில்லை. ஒரு பக்கத்துப் பேச்சை மட்டும் கேட்டு எப்படித் தீர்மானிக்க முடியும்? அது நீதிக்கும் தர்மத்துக்கும் உகந்ததா? தாங்கள் என்னுடன் வாருங்கள். அந்த மாலுமிகள் வந்ததும் அவர்கள் சொல்வதையும் கேட்டு முடிவு செய்யுங்கள்..."

"ஐயா! அது சாத்தியமில்லை. தங்கள் உசிதம் போல் செய்யுங்கள். நான் இனி ஒரு கணமும் இங்கே தாமதிக்க முடியாது. உடனே புறப்பட வேண்டும். படகுக் காரன் எங்கே?" என்று கேட்டார்.

"எங்கே புறப்பட வேண்டும், இளவரசே! படகுக்காரன் எதற்கு?"

"இதைப் பற்றித் தாங்கள் கேட்கவும் வேண்டுமா? வந்தியத்தேவனை ஏற்றிச் செல்லும் கப்பலுக்குத் தான் நானும்

போக வேண்டும். அந்த வீராதிவீரன் எனக்காக வல்லவோ அராபியர் வசப் பட்ட கப்பலில் ஏறிப் பயங்கரமான அபாயத்துக்கு உள்ளாகி யிருக்கிறான்? அவனை நான் கை விட்டுவிடக் கூடுமா? ஏற்கெனவே நான் செய்துள்ள பாவங்கள் போதா வென்று சிநேகத் துரோகம் வேறு செய்ய வேண்டுமா...?"

"ஐயா! தாங்கள் ஒரு பாவமும் நான் அறிந்து செய்ததில்லை. தாங்கள் சொன்னாலும் உலகம் ஒப்புக் கொள்ளாது. வந்தியத்தேவன் வெறும் முரடன். முன் யோசனை சிறிதும் இல்லாதவன். அவனாக வருவித்துக் கொண்ட அபாயத்துக்குத் தாங்கள் எப்படிப் பொறுப்பாக முடியும்? இதில் சிநேகத் துரோகம் என்ன? இளவரசே! எங்கிருந்தோ தெறிகெட்டு வந்த ஒரு வாலிபனைத் தங்கள் சிநேகிதன் என்று கொண்டாடுவதே எனக்குப் பிடிக்கவில்லை. சம நிலையில் உள்ளவர்கள் அல்லவோ சிநேகிதர்கள் ஆக முடியும்?"

"சேனாபதி! வீண் பேச்சில் காலங் கடத்த நான் விரும்பவில்லை. அவன் என் சிநேகிதன் இல்லா விட்டாலும் நன்றி என்பதாக ஒன்று இருக்கிறதல்லவா? வள்ளுவர் முதல் பெரியோர்கள் அனைவரும் சொல்லி யிருக்கிறார்களே? 'சோழ குலத்தார் நன்றி மறவாதவர்கள்' என்ற புகழ் என்னால் கெட்டுப் போக விட மாட்டேன். இந்த நிமிடமே புறப்பட்டுச் சென்று அந்தக் கப்பலைத் தேடிப் பிடிப்பேன்......"

"எப்படிப் புறப்படுவீர்கள், எங்கே தேடுவீர்கள், இளவரசே!"

"நீங்கள் வந்த படகில் ஏறிக் கொண்டு புறப்படுவேன்......"

"முயலை வைத்துக் கொண்டு புலி வேட்டையாட முடியுமா? ஆழ்கடலில் செல்லும் மரக்கலத்தை இச் சிறிய படகில் ஏறித் துரத்திப் பிடிக்க முடியுமா? பிடித்த பிறகுதான் என்ன செய்வீர்கள்?"

"படகில் ஏறிப் போவேன். படகு உடைந்தால் மரக்கட்டையைப் பிடித்து நீந்திக் கொண்டு போவேன். வந்தியத்தேவனை ஏற்றிச் செல்லும் கப்பல் ஏழு கடல்களுக்கு அப்பால் சென்றாலும் அதைத் துரத்திக் கொண்டு போய்ப் பிடிப்பேன். பிடித்த பிறகு என் நண்பனைக் காப்பாற்ற முடியாவிட்டால் நானும் அவனோடு உயிரையாவது விடுவேன்......படகுக்காரன் எங்கே?"

இவ்விதம் சொல்லிக் கொண்டே இளவரசர் நாலாபுறமும் திரும்பிப் பார்த்தார். படகுக்காரனுடன் ஒரு பக்கமாக நின்று பூங்குழலி பேசிக் கொண்டிருந்ததைக் கவனித்தார். அருகில் ஊமை மூதாட்டியும் நின்றாள். அவர்கள் இருந்த இடத்தை நோக்கி விரைந்து போனார்.

சமீபத்தில் சென்றதும் பூங்குழலி கண்ணில் நீர் ததும்ப அப்படகுக்காரனுடன் ஆத்திரமாக ஏதோ பேசிக் கொண்டிருந்தாள் என்று தெரிந்தது.

"ஆகா! இது என்ன? இன்னொரு உட் கலகமா?" என்றார் இளவரசர்.

படகுக்காரன் திடீர் என்று இளவரசர் காலில் விழுந்தான். "இளவரசே! தெரியாமல் பாதகம் செய்துவிட்டேன். பணத்தாசையால் செய்துவிட்டேன். மன்னிக்க வேண்டும்!" என்று கதறினான்.

"இது என்ன?......பூங்குழலி! எல்லாருமாகச் சேர்ந்து என்னைப் பைத்தியமாக்கி விடுவார்கள் போலிருக்கிறதே? நீயாவது விஷயம் என்னவென்று சொல்லக் கூடாதா?"

"இளவரசே! இத்தனை நேரம் சொல்ல வெட்கப்பட்டுக் கொண்டு சொல்லவில்லை. இவன் என் தமையன். தங்களைக் கொல்லுவதற்காக வந்த இரண்டு பாவிகளையும் இவன்தான் கோடிக்கரையிலிருந்து படகில் ஏற்றிக் கொண்டு வந்தான். அவர்கள் சொற்படியேதான் இவன் இதுவரை இங்கே காத்துக் கொண்டிருந்தான். அவர்களை இன்று காலையில் மறுபடியும் படகில் ஏற்றி நாம் பார்த்த கப்பலில் கொண்டுபோய் விட்டானாம்! தங்கள் நண்பரும் அதிலேதான் ஏறியிருக்கிறார்......" என்றாள்.

"பிரபு! என்னை வெட்டிக் கொன்று விடுங்கள்! அவர்கள் அத்தகைய துஷ்டர்கள் என்று எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் செய்திருக்க மாட்டேன். என்னைத் தங்கள் கையாலேயே கொன்று விடுங்கள்!" என்றான் படகுக்காரன்.

"அப்பனே! இச்சமயம் உன் உயிர் எனக்கு விலைமதிப்பில்லாத பொருள். வா, போகலாம்! அந்தக் கப்பலிலேயே என்னையும் கொண்டுபோய் ஏற்றி விடு. எனக்கு நீ செய்த கெடுதலுக்கு அது தான் பரிகாரம். புறப்படு, போகலாம்!" என்றார் இளவரசர்.

கடற் கரையோரத்தில் சென்றதும் கரையில் கிடந்த படகைப் படகோட்டி தண்ணீரில் இழுத்து விட்டான். இளவரசர் கடலைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார். "அதோ கப்பல் இன்னும் தெரிகிறது! பிடித்து விடலாம்!" என்றார்.

சேநாபதியும் தூரத்தில் தெரிந்த கப்பலைக் கூர்ந்து பார்த்தார்.

"இளவரசே! பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று!" என்றார்.

"என்ன என்ன? தங்களிடமிருந்து கூட நல்ல வார்த்தை வருகிறதே!"

"நம் கண்ணுக்குத் தென்படுவது தாங்கள் நினைக்கிறபடி வந்தியத்தேவனை ஏற்றிச் செல்லும் கப்பல் அல்ல. பார்த்திபேந்திரனுடைய கப்பல். திருகோணமலைப் பக்கமிருந்து வருகிறது. நாம் இருக்கும் திசையை நோக்கி வருகிறது. தெரியவில்லையா?"

"ஆம், ஆம்! அப்படியானால் மிகவும் நல்லதாய்ப் போயிற்று. பார்த்திபேந்திரர் வேறு ஏதோ நோக்கத்துடன் வருகிறார். ஆயினும் நல்ல சமயத்தில் வருகிறார். சிங்கத்தைக் கொண்டே சிறுத்தையை வேட்டையாடலாம்!......ஆனால் அந்தக் கப்பல் இங்கே வரும் வரையில் நான் காத்திருக்கப் போவதில்லை. படகில் சிறிது தூரம் சென்று எதிர்கொள்கிறேன்......"

"இளவரசே! தங்களுடன் படகில் வருவதற்கு......"

"ஐயா! நீங்கள் ஒருவரும் என்னுடன் வர வேண்டியதில்லை. இங்கேயே நின்றால் எனக்குப் பெரிய உதவி செய்ததாக எண்ணிக் கொள்வேன்......திருமலை! உனக்குங் கூடத்தான் சொல்கிறேன். உனக்குத்தான் கடல் என்றால் தயக்கமாயிற்றே?"

"ஆம், ஐயா! நானும் பின் தங்குவதாகவே இருந்தேன். இலங்கைத் தீவில் இருக்கும் வரையில் தங்களைப் பார்த்துக் கொள்ளும்படி தான் எனக்குக் கட்டளை. முதன் மந்திரி மதுரையில் இருக்கிறார். அவரிடம் போய் இங்கு நடந்தவற்றைச் சொல்ல வேண்டும்......"

"அப்படியே செய்! பூங்குழலி! நீயும் இங்கே நிற்க வேண்டியதுதான். உன் தமையனைப் பற்றிக் கவலைப்படாதே. நான் பார்த்துக் கொள்கிறேன். நீ வந்த படகை எங்கேயோ விட்டிருப்பதாகச் சொன்னாயல்லவா? அதில் ஏறி இனி உன் வழியில் போகலாம். நீ எனக்குச் செய்த உதவியை என்றும் மறக்க மாட்டேன்...சேச்சே! கண்ணீரைத் துடைத்துக் கொள்! பார்க்கிறவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்கள்?"

இவ்வாறு கூறி விட்டு இளவரசர் ஊமை ராணியின் அருகில் சென்று அவளுடைய பாதத்தைத் தொட்டு வணங்கப் போனார். அந்த மூதாட்டி அவரைத் தடுத்து நிறுத்தி உச்சி மோந்து ஆசீர்வதித்தாள்.

அடுத்த நிமிஷம் இளவரசர் கடலில் ஆயத்தமாக நின்ற படகில் பாய்ந்து ஏறிக் கொண்டார்.

கரையில் இருந்தவர்கள் படகைப் பார்த்துக் கொண்டே நின்றார்கள்.

இளவரசரும் போகின்ற படகிலிருந்து அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

எல்லாரையும் பொதுவாகப் பார்த்தாலும் அவருடைய கண்கள் பூங்குழலியின் கண்ணீர் வழிந்த முகத்திலேயே நிலைத்து நின்றது. அதிசயம்! அதிசயம்! தூர விலகிப் போகப் போக, உருவங்கள் சிறியனவாக வேண்டுமல்லவா? கரையில் இருந்த மற்றவர்களின் உருவங்கள் சிறியனவாகித்தான் வந்தன. ஆனால் பூங்குழலியின் முகம் மட்டும் வரவரப் பெரிதாகிக் கொண்டேயிருந்தது. இளவரசரின் அருகில் நெருங்கி வந்து கொண்டேயிருந்தது.

இளவரசர் உடம்பைச் சிலிர்த்துக் கொண்டார். கண்களை வேறு பக்கம் திருப்பினார். முதல் நாள் இரவு கண்ட கனவில் ஒரு நிகழ்ச்சி அவர் மனக்கண் முன் வந்தது. இளைய பிராட்டி குந்தவை "தம்பி! உனக்காக இங்கே வானதி காத்திருக்கிறாள் என்பதை மறந்து விடாதே!" என்று கூறிய மொழிகள், கடல் அலைகளின் இரைச்சலுக்கிடையில் தெளிவாக அவருடைய காதில் கேட்டன.

அட்டைப்பட விளக்கம்

அந்தக் கட்டிடத்தில், அழகே உருவான ஒரு நங்கை இருப்பதாகவும், அவளுக்குப் பைத்தியம் என்றும் சிலர் சொன்னார்கள். இன்னும் சிலர் அவள் ஊமை என்று சொன்னார்கள். இன்னும் சிலர் அந்த இரண்டையும் மறுத்து அந்த இளம் பெண்ணுக்குப் பைத்தியம் இல்லை என்றும், வயதான ஸ்திரீ ஒருத்திக்குத்தான் பைத்தியம் என்றும் சொல்லிக் கொண்டார்கள்.

அந்த மர்ம வீட்டுக்குச் செல்ல நேர்ந்த இளைஞன் அந்த இளம் பெண்ணின் இதயத்தில் எப்படி இடம் பெற்றான்! அந்த இளம் பெண் அவனோடு என்ன பேசினாள் என்பதெல்லாம் மர்மமான விஷயங்கள். மேற்படி மர்மங்களெல்லாம் "கல்கி"யில் வெளியாகும் புதிய தொடர்கதையான "ராஜாளி மட"த்தில் ஆரம்பமாகியிருக்கின்றன.

உலகம் தெரியாத அந்த இளம் பெண்ணின் வாழ்க்கையில் கவிந்து கொண்ட சோகம் கண்ணீராக வெளிப்படுகிறது. வாழ்க்கையில் அவளுக்கு நேர்ந்து விட்ட கொடுமையே அவளது பெரிய தாயாராகத் தோற்றம் எடுத்திருக்கிறது. இந்தக் காட்சியும் அந்த மர்ம வீடான ராஜாளி மடமும் தான் இந்த இதழ் அட்டையை அலங்கரிக்கின்றன.

# ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரஸ்வாமி

## 61. மத்ஸ்யாசனம்

குளம், குட்டைகளில், நதிக்கரைகளில் மீன்கள் இருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவைகள் அழுக்குகள், எச்சில், கோழை முதலியவை கிடைத்தால் லட்டு போல் விழுங்கிவிடும். புழு, பூச்சி, முதலியவைகளை அவைகள் ஹல்வா போலத் தின்னும். புண் கால்களைக் கண்டால் விடாது. கொத்திக் கொத்திச் சூழும். சிலர் இதற்காகவே புண்ணுள்ள கால், கைகளை ஜலத்தில் மீன்களிருக்குமிடம் பார்த்து வைத்திருப்பார்கள். மீன்கள் நன்றாய்க் கொத்திச் சாப்பிட்டால், புண்கள் சீக்கிரம் ஆறும் என்பர். இயற்கை அவைகளுக்கு என்ன சக்திதான் அளித்திருக்கின்றதோ தெரியவில்லை! இவைகளிலுள்ள பயங்கரக் கிருமிகள், மீன்களை மட்டும் ஒன்றும் செய்வதில்லை போலும். குண்டு குண்டாய்க் குஷியாய்த் திரிந்து கொண்டிருக்கும். மீன்கள் உள்ள குளம், குட்டைகள் சுத்தமாய் இருக்கும் என்பர்.

நல்ல பெயரைத்தான் யோகிகள் இந்த ஆசனத்திற்கு அளித்திருக்கின்றனர். மத்ஸ்யாசனம்! மத்ஸ்யம் என்றால் மீன். மத்ஸ்யாசனம் என்றால் மீனைப்போல் இருக்கும் ஆசனம் என்று பொருள். இது பார்ப்பதற்கு மீனைப்போன்ற உருவம் இல்லாவிட்டாலும், குணத்தில் மீனைப் போன்றதே. உடலில் பிரவேசிக்கும் தொற்று நோய்க் கிருமிகளை, பூச்சிகளை, அழுக்குகளை இந்த மத்ஸ்யாசனம் எனும் மீன் கபளீகரித்து, உடலெனும் தடாகத்தை எப்பொழுதும் சுத்தமாய் வைத்திருக்கும். என்ன அற்புதமான ஆசனம்!

ஜலத்தில், பத்மாசனம் போட்டுப் படுத்து, இரண்டு கைகளைத் தலையின்மேல் கட்டிக்கொண்டால், மணிக் கணக்காய் மீனைப்போல் ஜலத்தில் மிதக்கலாம்.

தொற்று நோய்கள் பலவிதத்தில் தொற்றுகின்றன. சில சருமத்தின் மூலமாகத் தொற்றும். சில ஆகாரம், குடி நீர் மூலமாகத் தொற்றும். சில காற்றின் மூலமாக நாம் சுவாசிக்கும்போது தொற்றும்.


காற்றின் மூலமாகத் தொற்றும் வியாதிகளில் க்ஷயம் மிகப் பயங்கரமானது. சாப்பாட்டு மூலமாகவும் தொற்றலாம். க்ஷயம் என்றால் எல்லோரும் நடுங்குவர். அவ்வளவு பயங்கரமானது. க்ஷயம்! இதுவும் சரியான பெயர்தான். க்ஷயம் என்றால் குறைவு. க்ஷயத்தால் பிடிக்கப்பட்டவர்கள் குறைவுபட்ட மனிதர்களே. அவர்கள் மீண்டும் நிறை மனிதர்களாக உலகில் வாழவே முடியாது. அக்ஷயப் பாத்திரத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். எடுக்க, எடுக்கக் குறையாது என்பர். அவ்வகையான அக்ஷயப் பாத்திரத்தை நாம் கண்ணால் பார்த்ததில்லை. எல்லாம் படித்த அளவில்தான். ஆனால் க்ஷய பாத்திரத்தை (க்ஷய ரோகிகளை) நாம் எங்கும் பார்க்கலாம்.

க்ஷயமுள்ள ஒருவன் விடும் மூச்சில் அக்கிருமிகள் நிறைந்திருக்கும். அவனுடைய எச்சிலில் நிறைந்திருக்கும். அவனுடைய கோழையில் கோடிக் கணக்காய்க் கலந்திருக்கும். அவர்களுடன் பழகுகிறவர்களுக்கு, இந்த வியாதி சீக்கிரம் தொற்றுவதற்கு இவைகளே காரணம். அவர்களுடன் பேசும் போது, அவர்களுடைய மூச்சின் மூலமாய்த் தொற்றலாம். அவர்கள் உபயோகிக்கும் பாத்திரங்களை உபயோகிக்கும் போது தொற்றலாம். அவர்கள் கோழையை உமிழ்ந்தால் அதிலுள்ள கிருமிகள் காற்றில் பறந்து தூரத்திலுள்ளவர்களுக்கும் தொற்றலாம். அவர்களுடன் கூட ஒரே அறையில் படுத்து உறங்கினாலும், அவர்கள் மூச்சினால் காற்று அசுத்தப்பட்டு, கிருமிகள் கலந்து, அக்காற்றையே அவ்வறையிலுள்ளவர்கள் சுவாசிப்பதினாலும் தொற்றலாம். இவ்வளவு சுலபமாய்த் தொற்றக்கூடிய சுபாவமுள்ள இப் பயங்கர நோயைத் தடுக்க என்ன செய்கிறோம்! என்ன செய்ய முடியும்! இதற்கு அழகான புள்ளி விவரங்களை அரசாங்கமே தந்திருக்கின்றது.

இந்த க்ஷயரோகம் நாளுக்கு நாள் நமது நாட்டில் பயங்கரமாய்ப் பரவி வருகின்றதாம். மலேரியாவிற்கு அடுத்தபடியாக, மக்கள் இந்த வியாதியால் பீடிக்கப் படுகின்றார்களாம். நமது நாட்டில் இந்த வியாதியால் மட்டும் வருடம் ஒன்றுக்கு ஐந்து லக்ஷம் பேர் மரணமடைகிறார்களாம். இருபத்து ஐந்து லக்ஷம் பேர் இவ்வியாதியால் பீடிக்கப்பட்டிருக்கிறார்களாம். சர்க்கார் புள்ளி விவரங்களுக்கு அகப்படாதவர்கள் எத்தனை லக்ஷம் பேர் இருப்பார்களோ! இவர்களுக்கு சுமார் 4000 சிகிச்சை சாலைகள் வேண்டுமாம். அப்பொழுதுதான் ஐந்து லக்ஷம் வியாதியஸ்தர்களையாவது வைத்துச் சிகிச்சை அளிக்க முடியுமாம். (மற்றவர்கள் என்ன ஆவதோ!) ஆனால் தற்சமயம் நமது நாட்டில் இருப்பதோ 119 சிகிச்சை சாலைகளும், 12,000 படுக்கைகளும் தானும். இதற்காக 15 வருஷ திட்டமிட்டுப் பல கோடிக்கணக்கான ரூபாய், கட்டடத்திற்காகவும், படுக்கைகளுக்காகவும், கருவிகளுக்காகவும், மருந்துகளுக்காகவும், டாக்டர்கள், நர்ஸுகளுக்காகவும் வேண்டும் என்று கணக்கு கொடுத்திருக்கின்றனர். இந்தக் கணக்கைப் பார்க்கப் போனால், செல்வத்தில் கொழுத்த அமெரிக்காவும், தனது தேசத்திற்காகச் செலவிடும் ராணுவச் செலவையும் மிஞ்சிவிடும் போல் இருக்கிறது. இந்த ஒரு வியாதியைத் தடுப்பதற்கே இவ்வளவு என்றால், மற்றுமுள்ள வியாதிகளைத் தடுக்க எவ்வளவு ஆகும்! மற்றும் ஏனைய அரசாங்கச் செலவுகளுக்கு என்ன செய்வது! இவைகளை எல்லாம் சமாளிக்க இன்னும் என்னென்ன வரிகள் போடவேண்டி வருமோ! ஏழை பாரதம் இவைகளையெல்லாம் கனவு கண்டு கொண்டிருக்க வேண்டியதுதான்.

வியாதிகள் மலிந்து, அவைகளைப் போக்க ஆஸ்பத்திரிகள், படுக்கைகள், மருந்துகள் முதலியவைகளைப் பெருக்குவதற்குப் பதிலாக, தடுப்பு முறையை மேற்கொண்டாலே எவ்வளவோ குறைத்து விடலாம்.

பெருகி வரும் ஜனங்கள், பல இடங்களில் பொதுவாய்க் கூடுகின்றனர். அதைத் தடுக்கவும் முடியாது. அப்படிக் கூடும் இடங்கள் பல உண்டு. அவைகளில் முக்கியமானது ஹோட்டல்கள். இவைகள் மக்கள் வாழ்க்கையில் மிக இன்றியமையாததாகி விட்டன. எதிர் காலத்தில் இன்னும் முக்கியத்துவம் பெறக்கூடிய தொழில்களில் இதுவும் ஒன்று. ஆனால் தற்காலத்தில் ஹோட்டல்கள்




அதிகாரம் என்னும் கடிவாளம் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சின்னக் கட்சிகளின் கையில் சிக்கிக் கொண்டால் பாரத தேசம் நிர்மூலமாகி விடும்.

முக்கியமாய்த் தொற்று நோய்களைப் பரவச் செய்யும் சாலைகளாக இருக்கிறதென்றால் மிகை யாகாது. இங்கு சாப்பிட்ட பாத்திரங்களைச் சுத்தம் செய்யும் முறையை நேரில் ஒரு தடவை பார்த்து விட்டால், மறுபடியும் அவ்விடங்களில் சாப்பிடப் பிரியப்பட மாட்டார்கள். கோபப் படுவதில் என்ன பயன்! வருந்தத் தக்க உண்மை! கண்ணுள்ள ஒவ்வொருவரும் காணலாம்.

உதாரணமாக ஒன்றைச் சொல்ல விரும்பு கிறேன். கண்காட்சி சாலை ஒன்றிற்குச் சென்றிருந் தேன். கடைகளை அப்படியே சுற்றிப் பார்த்துக் கொண்டு வரும்போது ஒரு கடையில் ஜனங்கள் விழுந்தடித்து நெருக்கிக் கொண்டு நின்றார்கள். மேலே பார்த்தேன். 'டீ ஸ்டால்' என்று இருந் தது. 'சரி, இத்தனை பேரும் இதற்காகத்தான் நெருக்குகிறார்கள். இந்தக் கடையை ஒரு தரம் சுற்றிப் பார்க்கலாம்' என்று சென்றேன். அதன் பின்புறம் வரும்போது ஒரு காட்சியைக் கண் டேன். மனம் பதறிற்று! உள்ளம் துடித்தது! ஜனங்கள் சாப்பிட்ட அழகான கப்பும் ஸாஸர் களும் கூடையில் வைத்து அங்கு வந்தன. அங் கிருப்பவன் அவைகளை ஒரு தொட்டியில் முக்கி, முக்கி எடுத்து வைத்துக் கொண்டிருந்தான். இன்னும் சற்று நெருங்கி எதில் அப்படி முக்கு கிறான் என்று பார்த்தேன். தொட்டியில் பாதி அளவு காப்பி இருந்தது! இது என்ன! காப்பி யிலும் யாராவது கழுவுவார்களா! உண்மையில் அது காப்பி அல்ல, ஜலம்தான். காப்பி, டீ, சாப்பிட்ட கோப்பைகளை அதில் முக்கி முக்கி அந்த ஜலமும் காப்பியைப் போல் ஆகிவிட்டிருந் தது. பிறகு மற்றொரு ஆள், அந்த முக்கின கோப்பைகளை வழக்கமாய் துடைக்கும் அழுக்குத் துண்டினால் துடைத்துத் தட்டில் அடுக்கி வைத் துக் கொண்டிருந்தான். அந்தக் கோப்பைகளில் தான் முன் பக்கம் வந்து, காப்பியும், டீயும் நிறைத்து ஜனங்கள் சுவைத்து, சுவைத்துக் குடித்துக் கொண்டிருந்தனர். இம்மாதிரி எத் தனையோ சொல்லிக் கொண்டு போகலாம். கையில் தூக்கித் திரியும் டீக்காரன் முதல், நாகரீகமான மோபைல் காண்டீன் அதாவது நடமாடும் ஹோட்டல்கள் வரை இதேதான். இவர்களுக்கு மந்திரத்தில் ஆகாச கங்கை வருமோ என்னவோ! சில இடங்களில் ஜலம் சாப்பிட்ட பாத்திரத்தைக் கழுவவும் மாட்டார்கள். உள்ளே நடப்பதை யார் அறிவார்! அறிந்தாலும் தைரிய மாய்க் கேட்பவர் யார்! கேட்டு அவமானப் படுபவர் யார்! ஏதோ பசிக்குக் கிடைத்ததைச் சாப்பிட்டு விடுகிறோம். சுத்தம் சுகாதாரம் எல் லாம் யார் கண்டார்கள்!

எத்தனை க்ஷயரோகிகள் அந்தப் பாத்திரங்களை உபயோகித்திருக்கலாம்! இவர்களை யெல்லாம் எக்ஸ்ரே பிடித்துப் பார்த்து ஹோட்டல்காரர்கள் உணவு அளிக்க முடியுமா! அவசர, அலங்கோல வாழ்வில் இவைகளெல்லாம் சாத்தியமா! இவை களுக்கெல்லாம் என்ன பரிகாரம்! ஜனங்களுக்குத் தான் விமோசனம் எப்படி!

சமீபத்தில் சுகாதார இலாகாவே ஒரு அறிக் கையை வெளியிட்டிருந்தது. சுகாதார அதி காரிகள் திடீரென்று ஒரு பிரபலமான ஹோட்ட லில் நுழைந்து அங்கு சுத்தம் செய்து வைத்திருந்த கோப்பையைச் சோதித்தார்களாம். அதில் ஒட்டி யிருந்த ஜலத் துளிகளில், சாக்கடை ஜலத்தில் இருப்பதைவிட அதிகமாக விஷக்கிருமிகள் இருந் தனவாம். என்னே பயங்கரம்! பொது ஜனங்கள் அவைகளில் தான் சாப்பிடுகின்றனர். க்ஷயரோகம் பரவக் கேட்க வேண்டுமா! (தொடரும்)

# பஜகோவிந்தம்



**சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்**

## 4

படிப்பு மோகம், பண மோகம், பெண் மோகம், இம் மூன்றும் மனிதனை மோசம் செய்யும் என்று சொல்லிய பிறகு பொதுவாக வாழ்க்கையின் தன்மையை நான்காவது பாட்டில் சொல்லுகிறார். நீரின்மேல் மிதக்கும் தாமரை யிலையை நம்பி அதன்மேல் நிற்கும் நீர்த்துளியின் நிலைமையே வாழ்க்கையின் சுகம் என்கிறார். தாமரை யிலையின் மேலுள்ள நீர்த்துளியானது துள்ளி யதிர்ந்து நிலையற்று அலைவது போல் மனிதன் உள்ளம் அலைகிறது. சபலமே அதன் நிரந்தரப் பான்மை. நோயால் உடல் பீடிக்கப் பட்டு, பற்றுக்களால் உள்ளமும் பீடிக்கப்பட்டு மனித வாழ்க்கை எல்லா வகையிலும் துயரத்தில் மூழ்கி நிற்கிறது. உலகத்தில் நாம் அடையும் பொருளெல்லாம் துக்கத்தோடு கலந்தே நிற்கிறது. ஒரு பொருளை அடைந்தோமென்றால் உடனே அதைப் பற்றிக் கவலையும் சிந்தனையும், அந்தப் பொருளை இழக்கும் பயமும் துக்கமும் கூடவே வந்து சேருகின்றன. தேகத்தைப் பீடிக்கும் வியாதிகளுக்கோ கணக்கில்லை. உள்ளத்தைத் துன்புறுத்தும் பற்றுக்களுக்கும் அந்தப் பற்றுக்களா லுண்டாகும் கவலைகளுக்கும் அளவேயில்லை. பற்றுக்களாலும் அபிமானத்தாலும் நாம் அடைவது சுகம்போல் காட்டினாலும் உண்மையில் சுகமன்று, கவலையும் துயரமுமே. முதலை வாயில் சிக்கிய யானை 'ஆதிமூலமே!' என்று கதறி அபயமடைந்தது போல் வியாதி—அபிமானம் என்ற இரட்டை முதலைக்கு இரையாகச் சிக்கி நிற்கும் நாமும் பகவானைச் சரணடைவோம்.

ஆயுள் முழுதும் தீராத் துயரம்.
நோயும் நொடியும் உடலை வாட்ட
பற்றும் வாட்ட மதிகெட்ட மனத்தை
சற்றும் ஒழியாது ஆசை மேல் ஆசை.
தாமரையிலை நீர்த்துளி போல்
சாம்வரை யலைச்சல் சுகமொன் றில்லை
சஞ்சல மன்றிச் சாந்த மென்பது
கொஞ்சமு மில்லையிது மக்கள் வாழ்க்கை.

* * *

நளினீ தளகத ஜலமதி தரலம்
தத்வத் ஜீவித மதிசய சபலம்
வித்தி வ்யாத்யபிமான க்ரஸ்தம்
லோகம் சோகஹதம் ச ஸமஸ்தம்

## 5

இவ்வாறெல்லாம் சொல்லி வாழ்க்கையிலுள்ள உண்மையான சுகத்தை ஏன் குறைக்கப் பார்க்கிறீர் என்று கேட்கிறான் அறிவில்லாப் பேதை. சுற்றிலும் உள்ள பந்துக்களைப் பார். அவர்கள் என் பேரில் எவ்வளவு பிரியம் வைத்து சுகம் தருகிறார்கள்! இது பொய்யா? மனைவியைப் பார். அவள் என்னிடம் வைத்திருக்கும் அன்பு ஒன்றே போதாதா வாழ்க்கைத் துன்பங்களுக்கு விலை? ஏன்

---

नलिनीदलगतजलमतितरलं
तद्वज्जीवितमतिशयचपलम् ।
विद्धि व्याध्यभिमानग्रस्तं
लोकं शोकहतं च समस्तम् ॥

இதையெல்லாம் கணக்கிடாமல் எல்லாம் மோகம் மோகம் என்கிறீர்?

இதற்குப் பதில் சங்கரர் பாடுகிறார்:

பலமுள்ள போது சம்பாத்திய சக்தி.
சம்பாத்தியமுள்ளவரை பந்து பாந்திய பக்தி.
வருமான முள்ளமட்டும் பரிவாரக் கூட்டம்
கிழவனாய்ப் படுத்தபின் விழுந்தோடிக்கலையும்,
மூதேறிப் போனால் ஏதென்பா ரில்லை.

*　　　*　　　*

யாவத்வித்தோ பார்ஜன சக்த:
தாவந் நிஜ பரிவாரோ ரக்த:
பஸ்சாத் ஜீவதி ஜர்ஜர தேஹே
வார்த்தாம் ப்ருச்சதி கோபினகேஹே

சொந்தம், சுற்றம், பரிவாரம் என்பதெல்லாம் சம்பாதிக்கும் சக்தி உனக்கிருக்கும் வரையிலே தான். அது தீர்ந்து போய் இனி உன்னால் உதவ முடியாது என்று கையை விரித்ததும் பந்துக்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போவார்கள். இவ்வாறு சங்கரர் எச்சரிப்பது பந்துக்களைக் குறை கூறியவாறு அல்ல. இயற்கையின் தன்மையை எடுத்துக் காட்டுகிறார்.

பொருளற்ற பொருளையே பற்றிக் கொண்டு நிற்காதே என்கிறார். பற்ற வேண்டிய பொருள் ஒன்றே; அது கோவிந்தன் திருவடி. அதை மறந்து விட்டு நிலையற்ற பொய்யைப் பற்றிக் கொண்டு துயரத்தைத் தேடிக் கொள்ளாதே என்கிறார். உன்னிடம் அவர்கள் பெறக்கூடிய நன்மையைப் பொறுத்து நிற்கிறது, சுற்றத்தாரின் அன்பும் யோக க்ஷேம விசாரணையும். நீ மூதுமை அடைந்து சம்பாதிக்கும் சக்தி அழிந்ததும் அவர்கள் உன்னை விட்டுச் செல்வார்கள். தற்போது ஜனங்கள் உன்னைச் சுற்றி நிற்பதைப் பார்த்து மோசம் போகாதே என்கிறார். எங்கே எந்த ஊரில் எந்தக் குடும்பத்தைப் பார்த்தாலும் சங்கரர் சொல்லும் உண்மையை ஐயந் திரக் காணலாம்.

यावद्वित्तोपार्जनशक्तः ।
तावन्निजपरिवारो रक्तः ।
पश्चाज्जीवति जर्जरदेहे
वार्त्ता पृच्छति कोऽपि न गेहे ॥

# கல்யாண குணங்கள்



இதோ இருக்கிறாரே, இவர்தான் ஸ்ரீமான் பராங்குசம் பிள்ளை. இப்படி இருக்க வேண்டிய இவர் அன்று ரொம்பவும் சோர்வு தட்டிய முகத்துடன் காணப்பட்டார்.

சாதாரணமாக அவர் ரொம்பவும் உற்சாகமாக இருக்கும் பேர்வழி. வாயில் ஒரு கன்னத்தில் புகையிலை உருண்டையை ஒதுக்கிக்கொண்டு தமது பவள இதழை இலேசாகத் திறந்து, "என்ன ஸார், ஷேமமா?" என்று தலையைச் சற்று மேலே அண்ணாந்து கேட்கும் பாவனையே வெகு அழகாக இருக்கும். அன்று அப்படியொன்றும் காணவில்லை. கன்னம் எல்லாம் ஒட்டியிருந்தது. உதடுகள் வெளிறியிருந்தன. முகத்தில் சுறுசுறுப்பில்லை. கையில் ஒரு தடியைப் பிடித்துக் கொண்டு முகத்தில் விரக்தி பாவம் கொஞ்சத் தெருவில் மெள்ள வந்து கொண்டிருந்தார்.

அந்தச் சமயம் அவர் நண்பர் ஹநுமந்தராவ் எதிரில் வந்தார். "என்ன பிள்ளைவாள், ஒருமாதிரி சோர்ந்தாற்போலிருக்கிறீர்களே, என்ன காரணம்?" என்று குசலம் விசாரித்தார் ஸ்ரீமான் ஹநுமந்தராவ்.

"அதை ஏன் கேட்கிறீர்கள், போங்கள். இந்தப் புகையிலை போடும் வழக்கம் நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. முன்னெல்லாம் ஒரு நாளைக்கு நாலு தடவை போட்டால் போதும் என்றிருந்தது போய் நாற்பது தடவை போடுவது என்று நேர்ந்து விட்டது. இது எனக்கே தாங்கவில்லை. ஆகவே புகையிலை வழக்கத்தை நிறுத்தி விடுவோம் என்று நேற்றிலிருந்து புகையிலை போடாமல் இருக்கிறேன். அது என்னடா என்றால் ஒரே அடியாகப் பைத்தியம் பிடித்தாற் போலிருக்கிறது. எந்தக் காரியத்திலும் மனசு பற்றமாட்டேன் என்கிறது. இடுப்பில் கட்டிக்கொள்ள வேண்டிய வேஷ்டியைத் தலையில் கட்டிக் கொள்ளுகிறேன். தலையில் கட்டிக்கொள்ள வேண்டியதைக் காலில் கட்டிக் கொள்ளுகிறேன். காலில் மாட்டிக் கொள்ளவேண்டிய செருப்பைக் கையில் எடுத்துக் கொள்கிறேன். வீட்டிலிருந்தால் ஆபீசுக்கு ஓடவேண்டும் போல் தோன்றுகிறது! ஆபீஸிலிருந்தால் வீட்டுக்குப் போக வேண்டும் என்று தோன்றுகிறது. என்ன கஷ்டம் போங்க......" என்று அங்கலாய்த்தார் பராங்குசம் பிள்ளை.

இதைக் கேட்டதும் ஹநுமந்தராவ் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. "பிள்ளைவாள்! எனக்குப் புகையிலை போடுகிற பழக்கமே கிடையாது. ஆனாலும் நீங்கள் சொன்ன அத்தனை கல்யாண குணங்களும் என்னிடமிருக்கின்றனவே! இதற்கு என்ன சொல்கிறீர்கள்?" என்றார் ஹநுமந்தராவ்.—வெங்கு

# மியூஸிக் அகாடமி, மதராஸ்

## 25 வது ஆண்டு விழா — நிகழ்ச்சிகள்

21-12-51 முதல் 1-1-52 வரை — சுந்தரேசுவரர் ஹால், மயிலாப்பூர்

வெள்ளி 21-12-51 மாலை 5-30 மணிக்கு மேன்மை தங்கிய மைசூர் மகாராஜா அவர்கள் திறந்து வைப்பார்கள்.
செம்பை வைத்யநாத பாகவதர் அவர்கள் தலைமை வகிப்பார்கள்.
கச்சேரி 6-30 மணி: பாலம் ராமமூர்த்தி, தனலக்ஷ்மி, கனகாம்புஜம்

●

| | பி. எஸ். ஹைஸ்கூல் ஹாலில் | சுந்தரேசுவரர் ஹாலில் | |
|---|---|---|---|
| | மாலை 3 முதல் 4-15 வரை | மாலை 5-15 முதல் 8-15 வரை | இரவு 9-15 முதல் 11-15 வரை |
| 22-12-51<br>சனி | செம்பை நாராயணன்<br>திருக்கோடிக்காவல் கிருஷ்ணமூர்த்தி<br>வி. நாகராஜன் | டி. கே. பட்டம்மாள்<br>திருவாரூர் சுப்ரமணியம் & ருக்குமணி<br>கிருஷ்ணபுரம் வைத்யநாதன் | தேவகோட்டை நாராயண ஐயங்கார்<br>கல்யாணகிருஷ்ண பாகவதர்-வீணை<br>டி. என். சுந்தரேசய்யர்<br>காரைக்குடி முத்து ஐயர் |
| 23-12-51<br>ஞாயிறு | பரசல பொன்னம்மாள்<br>கோமளவல்லி ஸ்ரீநிவாசன் & வி. எஸ். ஜானகி | செம்மங்குடி<br>பாப்பா, மணி அய்யர்<br>கோதண்டராம ஐயர் | டி. கே. ராதாகிருஷ்ணன் —புல்லாங்குழல்<br>டி. கே. ராமசந்திரன்<br>மகாதேவன் |
| 24-12-51<br>திங்கள் | டி. கே. ஜெயராமன்<br>கும்பகோணம் ஸ்ரீநிவாசன் & பி. ஸ்ரீநிவாசன் | குமாரி கமலா —பரதநாட்டியம் | அண்ணாஸ்வாமி பாகவதர்-ஹரிகதா<br>துரோபதை மானசம்ரக்ஷணம் |
| 25-12-51<br>செவ்வாய் | நெடுனூரி கிருஷ்ணமூர்த்தி<br>கோவை தெக்ஷிணாமூர்த்தி<br>பி. பி. ஸ்ரீகண்டன் | எம். எஸ். சுப்புலக்ஷ்மி<br>டி. என். சுந்தரேசய்யர்<br>மாவேலிக்கரா கிருஷ்ணன்<br>கோதண்டராம அய்யர் | — |
| 26-12-51<br>புதன் | டி. எம். தியாகராஜன்<br>டி. என். சுந்தரேசய்யர்<br>முருகபூபதி | மதுரை மணி அய்யர்<br>கோவிந்தராஜுலு<br>ரகு | துவாரம் வெங்கடசாமி நாயுடு —பிடில்<br>ராமநாதபுரம் ராகவன் |
| 27-12-51<br>வியாழன் | கல்பகம் ஸ்வாமிநாதன்-வீணை<br>திருவனந்தபுரம் ஹரிகரன் & வி. ரெங்கநாதன் | மகாராஜபுரம்<br>செளடய்யா<br>முருகபூபதி | ஏ. நாராயண அய்யர் —கோட்டு வாத்தியம்<br>திருச்சி ராகவன் |
| 28-12-51<br>வெள்ளி | டி. ஆர். பாலசுப்ரமணியன்<br>பாப்பா<br>ரகு | ஆலத்தூர் சகோதரர்கள்<br>ஆர். கே. வெங்கட்ராம சாஸ்திரி, பழனி<br>ஆவுடையார் கோவில் ஹரிஹர பாகவதர் | பண்டிட் ரத்தன் ஜங்கார் —ஹிந்துஸ்தானி |
| 29-12-51<br>சனி | ராமநாதபுரம் கிருஷ்ணன்<br>ராஜமாணிக்கம் பிள்ளை<br>பழனி | அரியக்குடி<br>பாப்பா<br>மணி அய்யர் | ஆவுடையார்கோவில் ஹரிஹர பாகவதர்—ஜலதரங்கம்<br>லால்குடி ஜயராமன்<br>திருவாரூர் நாகராஜன் |
| 30-12-51<br>ஞாயிறு | டி. விஸ்வநாதன் —புல்லாங்குழல்<br>மாஸ்டர் சந்திரசேகரன்<br>டி. ரெங்கநாதன் | ஜி. என். பி.<br>கிருஷ்ணன்<br>பழனி<br>வில்வாத்ரி | பிருந்தா, முக்தா<br>அபிராமி<br>தஞ்சாவூர் ராஜமய்யர் |
| 31-12-51<br>திங்கள் | கே. வி. நாராயணஸ்வாமி<br>கிருஷ்ணன்<br>மணி அய்யர் | பால சரஸ்வதி —பரதநாட்டியம் | திருவெண்காடு சுப்ரமணிய பிள்ளை-நாதஸ்வரம்<br>கோவிந்தராஜ பிள்ளை - தவில் |
| 1-1-52<br>செவ்வாய் | சதஸ் மாலை 3-30 | செம்பை வைத்யநாத பாகவதர்<br>ராஜமாணிக்கம் பிள்ளை<br>மணி அய்யர், வில்வாத்ரி | — |

ஆதரவாளருக்கும் நன்கொடையாளருக்கும் ஸ்பெஷல் ஸீட் வசதிகள்: 6, வடக்குமாட வீதி, மயிலாப்பூரில் விண்ணப்பிக்கவும்
ஸீஸன் டிக்கெட்டுகள்: ஸ்பெஷல் ரிசர்வ்டு ரூ. 70. பிட் ரூ. 60.
டெய்லி: சொற்ப ஸீட்டுகளே இருப்பதால் அகாடமி ஆபீஸில் மட்டும் புக் செய்யப்படும்.
முதல் வகுப்பு ரூ. 25. இரண்டாவது வகுப்பு ரூ. 15. ரிசர்வேஷன் ரூ. 5.

டிக்கெட்டுகள் கீழ்க்கண்ட இடங்களில் கிடைக்கும்:
மியூஸிக் அகாடமி ஆபீஸ், 115-E, மௌப்ரீஸ் ரோடு, மதராஸ்-14. ரஸிக ரஞ்சனி சபா, மதராஸ்-4
ஸௌத் இந்தியா மியூஸிக் எம்போரியம், 3, பிராட்வே. மெடிகல் ஹால், பாண்டி பஜார், தி. நகர்.
இரவு நிகழ்ச்சிகளுக்குப் பிரத்யேகமாக பஸ் போக்குவரத்துக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது

# அன்பின் உருவம்

'அம்புஜம்'



இரவு மணி இரண்டு இருக்கும். அந்நேரத்தின் இளந் தென்றலில் செண்பக மலர்களின் வாசனை சுகமாக வீசியது. என் மனம் மூழ்கிய இரவில் அடைந்த அமைதியால் நிறைந்திருந்தது. கடமையை முடித்து விட்ட திருப்தியில் நான் தெருக்களூடே நடந்து சென்று கொண்டிருந்தேன்.

இருண்ட தெருக்களூடே நடந்து வெட்ட வெளிக்கு வந்து விட்டேன். விஸ்தாரமான 'காம்பௌண்'டுக்குள் அமைந்திருந்த அந்தப் பெரிய கட்டிடத்தைக் கண்டதும் சற்று நின்றேன், பழகிய தோஷத்தால்தான் போலும்! எத்தனை நாட்களை அங்கு நான் கழித்திருக்கிறேன்! ஒரு நாளா, இரண்டு நாளா? இரண்டு வருஷங்கள் அல்லவா அங்கு நான் வாழ்ந்திருக்கிறேன்! அந்தக் கட்டிடத்தின் ஒவ்வொரு மூலை முடுக்குடனும் நான் நன்கு பழகியிருக்கிறேன். அந்த வாசற்படிக் கட்டுகள், அந்த வேப்பமரத்தடி எல்லாம் எனக்குப் பழைய நினைவுகளை உண்டாக்குகின்றன.

குறையுள்ளவர்களுக்கு நோய் வருவது அதிசயமில்லை. எவ்விதக் குறையுமின்றி, நல்ல ஆரோக்கியத்துடன் ஆனந்தமயமான இல்வாழ்க்கையிலிருந்த எனக்கு அந்தக் கொடிய எலும்புருக்கி நோய் வந்தது அதிசயம்தான். எனக்கு அந்த வியாதியின் அறிகுறி இருப்பதாக அறிந்த அன்று நான் பட்ட வேதனை! அப்பப்பா! சொல்லி முடியாது.

என்மீது எல்லாரும் இரக்கம் கொண்டிருப்பார்கள். ஆனால் எனக்கு என் அருமைக் கணவரின் மீது அளவில்லாத இரக்கம் தோன்றியது. என் சுண்டு விரலுக்கு ஒரு சிறு தீங்கு வந்தாலும் பொறுக்காத அவர் இந்த அதிர்ச்சியை எப்படித் தாங்குவார்?

ஆஸ்பத்திரியில் சேர்ந்த முதல் நாள் கட்டிலில் படுத்தபோது நான் விம்மி விம்மி அழுதேன். ஒவ்வொரு விம்மலும் நான் 'க்ஷய ரோகி' 'க்ஷயரோகி' என்று சொல்வதுபோல் எனக்கே தோன்றியது. அழுகை ஓய்ந்ததும் மனவேதனையின் பளு சற்றுக் குறைந்தது. 'இந்த நோய் என்ன, நிரந்தரமாகவா நம்முடன் இருந்துவிடப் போகிறது? வியாதியின் அறிகுறி இருப்பதாகத்தானே டாக்டர் கூறினார்? தகுந்த சிகிச்சை செய்து கொண்டால் வியாதி பறந்து விடுகிறது. நம் கணவரின் அன்பும் ஆதரவும் சேர்ந்தே நம்மைக் குணப்படுத்திவிடுமே' என்று என்னை நானே தேற்றிக் கொண்டேன்.

வியாதி தீராமல் முற்றி விட்டால்? என் மனக்கண் முன் ஒரு காட்சி விரிந்தது: மனைவியின் வெளுத்த முகத்தைக் கண்டு அடித்துக் கொண்டு புலம்புகிறான் ஒரு மனிதன். அடடா, அது என் கணவர் போல் அல்லவா தோன்றுகிறது? அடுத்த காட்சி: ஒரு திருமணம். மணமகன் என் கணவர்: மணமகள் அறிமுகமில்லாத ஒரு பெண்! ஐயோ, இந்தக் காட்சியை என்னால் தாள முடியவில்லையே! இரண்டு மூன்று தடவை கண்ணை நன்றாகக் கசக்கித் துடைத்துக் கொண்டேன். அந்தக் காட்சி மறுபடியும் தோன்றக் கூடாதே என்கிற அச்சத்தில்!

இரண்டு மூன்று நிமிஷங்களில் மனக்கண் முன்பு இவ்வளவு துரிதமாக ஒரு நாடகம்! ஆனால் வாழ்க்கையில்..........வாழ்க்கையை அணு அணுவாக அனுபவித்தல்லவா தீர்க்க வேண்டியிருக்கிறது!

★

மாலை தோறும் என் கணவர் என்னைக் காண வருவார். எவ்வளவுதான் சகஜமாகப் பேச முயன்றாலும் அவரால் முடியாது. முகபாவம் அவர் மன வேதனையைக் காட்டி விடும். எனக்காவது நான் தேறி விடுவேன் என்ற நம்பிக்கை இருந்தது. அவருக்கு அதுவும் இல்லை.

"கமலா, உனக்கு ஏன் இந்த வியாதி வர வேண்டும்?" என்று அடிக்கடி புலம்புவார்.



"நீ இன்று காலை டாக்டரிடம் மருந்து சாப்பிட்டேன் என்று சொன்னாயே! அதற்குள் ஏன் பஸ்ஸில் போகிறாய்?"

"டாக்டர் சொல்லியபடி மருந்து பாட்டிலைக் குலுக்காமலேயே சாப்பிட்டு விட்டேன். அதற்காகத்தான் பஸ்ஸில் போகிறேன்!"

"எனக்கு எதற்காக வந்தது? அதன் காரணத்தைக் கண்டுபிடித்து விட்டீர்களா?" என்று வேடிக்கையாகக் கேட்பேன்.

"இன்னும் பழைய மாதிரியே இருக்கிறாய். இப்படிப்பட்ட அபாயகரமான நிலைமை வந்தும் உன் ஹாஸ்யம் உன்னை விட்டு நீங்கவில்லையே!" என்பார் அவர்.

"ஓஹோ! பழைய மாதிரி போய் புது மாதிரி வரவேண்டும் என்கிற ஆசையா உங்களுக்கு? ரொம்ப நாளாகும் போலிருக்கிறதே! நான் வேண்டுமானால், மருந்தை எல்லாம் கொட்டிவிட்டு அந்த நிலை சீக்கிரம் வர உதவட்டுமா?" என்று நான் சற்றுக் குறும்பாகவே கேட்கும்போது அவர் முகம் அப்படியே வாடிவிடும்.

"கமலா, அம்மாதிரி நிலை வருமென்று உண்மையாகவே நினைக்கிறாயா?" என்று தழுதழுக்கும் குரலில் கேட்பார். பிறகு அவரைச் சமாதானம் செய்து வீட்டுக்கு அனுப்புவதற்குள் எனக்குப் போதும் போதும் என்றாகிவிடும்.

★

ஆயாக்களின் கீழ்த்தரமான சம்பாஷணைகளுக்கும் நர்ஸ்களின் சிடுசிடுப்பான வசவுகளுக்கும் இடையே என் வாழ்க்கை நடந்து கொண்டிருந்தது. சூரியோதய வேளையில் அந்த வேளைக்கே உரித்தான உற்சாகத்தில் வியாதி சற்றுக் குறைந்ததுபோல் தோன்றும். தூரத்து ஆலைகள், சுறுசுறுப்பும் திறமையும் மிக்க மக்களை அழைக்க சங்கு ஊதும்போது, என்னையும் உலக விவகாரங்களில் கலந்து கொள்ள இயற்கை அழைப்பதுபோல் தோன்றும். அப்போது என் உடல் சிலிர்க்கும். இளம் வெய்யிலில் உலாவிக் கொண்டும் வேப்பமரத்தடியில் இளைப்பாறிக் கொண்டும் கொஞ்சம் அமைதியோடு பொழுதைக் கழித்தபின் மறுபடியும் படுக்கைக்கு வர வேண்டியதுதானே!

ஆ! அந்த நாட்களில் நான் அனுபவித்த தனிமை வேதனை சொல்லி முடியாது! மாலைச் சந்திப்பிற்குப் பின் என் கணவர் அப்பால் அகன்றவுடன் என்னைத் தனிமை வேதனை கவ்விக் கொள்ளும். இருள் சூழ்ந்ததும் இரவு வேலைக்கு வந்த நர்ஸ்கள் அப்போதைய சினிமாப் படங்களைப் பற்றித் தங்களிடையே விமரிசனம் செய்து கொள்வார்கள். அவர்கள் பேசும்போது நான் நடைப் பிணமாகி விட்டதை நன்கு உணருவேன்.

பருவங்கள் மாறுவது போல் என் வியாதியும் சற்றுக் குறையும்; உடனே அதிகமாகி விடும். சில நாட்களில் நன்றாகக் குணமாகி விட்டது போல் தோன்றும். மறுபடியும் சிறுகச் சிறுக வளர்ந்து விடும். என் வியாதியின் தன்மைக் கேற்ப என் கணவரின் முகபாவமும் மாறும். அவர் வதனத்தில் உண்மையான மலர்ச்சிக்கே இடமில்லாமல் போய் விட்டது.

கடைசியில் அந்தநாளும் வரத்தான் செய்தது. அன்பான இரண்டு உயிர்களைப் பிரித்த புண்ணியத்தைக் காலதேவன் கட்டிக் கொண்டான். இணையைப் பிரிந்த பறவை போல் என் கணவர் துடிதுடித்தார். அதை நான் பார்த்துக் கொண்டே இருந்தேன்; உடல் இல்லாத உருவத்துடன்! என்னால் அவரைத் தேற்ற முடியவில்லை!

வீட்டையும் குடும்பத்தையும், கணவரையும் அவர் அன்பையும் அறவே மறந்து இருள் வெளியில் சுற்றிக் கொண்டிருந்தேன்.

★

மாதங்கள் சில சென்றதும் எனக்குச் சிறிது துணிவும் திறனும் தோன்றின. சித்தப் பிரமை பிடித்தவர் போலிருந்த என் கணவரைத் தேற்ற என் வீட்டுக்குச் சென்றேன். நான் வழக்கமாக உட்காரும் அனைவடி நாற்காலியில் அமர்ந்து பெரிது செய்யப்பட்டிருந்த என் படத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார் அவர். அவருடைய மோகன முகம் களையற்று இருந்தது. கன்னங்களில் கண்ணீர் கறை விட்டிருந்தது. நான் பல தடவையும் அன்புடன் கோதிய அவருடைய அழகிய கிராப் சீர் செய்யப் படாமல் கலைந்து கிடந்தது. எனக்கு வந்த அழுகையை அடக்கிக் கொண்டு அவர் நடவடிக்கைகளைக் கவனிக்க ஆரம்பித்தேன்.

அப்போது நடுநிசி. மணி பன்னிரண்டரை இருக்கும். அந்த வேளையில்தானே உருவமில்லாத என்னைப் போன்றவர்கள் உலாவத் துணிவார்கள்! பட்டப் பகலிலும் இனிய மாலை வேளைகளிலும் நாங்கள் வெளியே கிளம்ப முடியுமா?

என் கணவர் மெல்ல எழுந்து மேஜைப் பக்கம் வந்தார். நான் உபயோகித்த 'ட்ராய'

ரைத் திறந்தார். அதில் என் சாமான்கள் ஒழுங்காக வைக்கப் பட்டிருந்தன. என் பேனா, என் டைரி, என் சீப்புக் கண்ணாடி, வளையல் பெட்டி, ரிப்பன்கள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டார். அதைக் கண்டதும் என் துக்கம் பீறிக் கொண்டு கிளம்பி ஒரு விம்மலாக வெடித்தது. திடுக்கிட்டுத் திரும்பினார் என் கணவர். நான் ஒதுங்கினேன். சுற்று முற்றும் பிரமையுடன் பார்த்து விட்டு மறுபடியும் 'ட்ராய'ரைக் குடைய ஆரம்பித்தார். என்னுடைய சின்னஞ் சிறு போட்டோ ஒன்று அவர் கையில் கிடைத்தது. அதை மார்புடன் அணைத்துக் கொண்டு 'சுசீ, சுசீ!' என்று மெல்ல முணு முணுத்தார் அவர். மெல்லிய குரலில் முனகியபடியே கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தார். நான் மௌனமாக வேதனைப் பட்டுக் கொண்டிருந்தேன். அருகில் நான் இருப்பதை அறியாமல் இவர் இப்படி அழுகிறாரே!

ஐந்து நிமிஷங்களுக்கு மேல் இந்தத் துயர நிலை நீடிக்கவே என்னால் பொறுக்க முடியவில்லை. மனசைத் திடப்படுத்திக் கொண்டு, ''இதோ, நான் இருக்கிறேனே!'' என்றேன். துள்ளிக் குதித்தார் என் கணவர். ''சுசீலா, நீ எப்படி இங்கே வந்தாய்?'' என்று பெருங் கூச்சலிட்டார். அடுத்த அறையில் உறங்கிக் கொண்டிருந்த அவர் தாயும் சகோதரியும் ஓடோடியும் வந்து அவரைத் தாங்கிக் கொண்டு 'என்ன விஷயம்?' என்று பதறினார்கள். என் ஆசைக் கணவரின் உடல் ஓரேயடியாக உதறிக் கொண்டிருந்தது. ''சுசீலா வந்தாள். சுசீலா இங்கே வந்தாள்!'' என்பதைத் தவிர அவர் வாயிலிருந்து வேறு ஒரு வாக்கியமும் வெளிவரவில்லை. அப்போது அவரது தோற்றம் ஒரு பைத்தியக்காரனைப் போல் இருந்தது.

அவரை இந்தக் கோலத்தில் காணவா நான் இத்தனைச் சிரமப்பட்டு ஓடி வந்தேன்? அவரைச் சமாதானப்படுத்த முடியாததுடன் மேலும் துன்புறச் செய்து விட்டோமே என்ற வருத்தத்துடன் ஓரே ஓட்டமாக அந்த இடத்தை விட்டு ஓடினேன்.

மேலும் சில மாதங்கள் சென்றன. ருசி கண்ட பூனை போல் ஒரு தடவை என் கணவரைப் பார்த்த ஆசையில் தினந்தோறும் அங்கே போக ஆரம்பித்தேன். ஆனால் வாயை மட்டும் பத்திரமாகப் பூட்டி வைத்துக் கொண்டேன். அவருடன் பேச வேண்டும் என்ற ஆசை வளர்ந்தது. ஒரு யோசனை எனக்குத் தோன்றிற்று. கனவில் பேசியதால்தானே அன்று அப்படிக் கலாட்டா ஆயிற்று? கனவில் பேசினால் என்ன? ஆம்; அதுதான் சரி.

கனவில் பேசச் சரியான சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி யிருந்தேன். அவர் ஒரு மன



மோகனக் கனவில் மகிழ்ந்திருந்தார். ஓர் அருமையான பூந்தோட்டத்தில் அமர்ந்து வானத்து நட்சத்திரத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார். திடீரென்று அந்த நட்சத்திரத்தின் இடத்தை நான் ஆக்கிரமித்துக் கொண்டேன். அவர் ஆவலுடன் என்னை வெறித்துப் பார்த்தார்.

“ராஜா, என்னை மறந்து விட்டீர்களா?” என்ற அசட்டுத் தனமான கேள்வி கேட்டு விட்டு என்னை நானே கடிந்து கொண்டேன். “மறந்து விடுங்கள்” என்று தேறுதல் சொல்ல விரும்பிய நான் இப்படியா ஒரு கேள்வி கேட்பது? இனி என்னை மறந்தால் தானே அவருக்கு வாழ்வில் அமைதி கிட்டும்!

என் யோசனை முடியவில்லை. அதற்குள் ‘வீல்’ என்று கத்திக்கொண்டே விழித்துக் கொண்டார் அவர். முன்போலவே அவர் உடல் உதறல் எடுத்தது. “சுசீலா!” என்ற அவர் கதறலைக் கேட்டு ஓடி வந்தனர் அவர் தாயும் சகோதரியும். “அந்தப் பாவி இவனைச் சும்மா விடமாட்டேன் என்கிறாளேடி! விழித்திருந்தாலும் வந்து பயமுறுத்துகிறாள். தூங்கினாலும் கனவில் வந்து பயமுறுத்துகிறாள்!” என்று என் மாமியார் புலம்பினாள்.

“அம்மா, யாரைப் பாவி என்கிறாய்?” என்று கர்ஜித்த என் கணவரின் கண்களில் தாண்டவமாடிய வெறியைக் கண்டு என் நாத்தனார் முறு முறுத்தாள். “அம்மா, அண்ணாவுக்கு ‘ஹிஸ்டீரியா’போல் தோன்றுகிறதே! அவனை மெல்லத்தான் சமாதானம் செய்ய வேண்டும். அவசரப்படக் கூடாது!”

என் கணவருக்கு ஹிஸ்டீரியா! அதுவும் என்னால்! என்னை என்னவோ பண்ணுகிறதே! அவருடன் பேச வேண்டும். அவரைத் தேற்றவேண்டும் என்று விரும்பி வந்த இரு தடவையும் எனக்குத் தோல்வியாகி விடவே அந்தப் பக்கமே தலைகாட்டக் கூடாதென்று தீர்மானம் செய்தேன். அவரை நான் மறந்துவிட வேண்டும். அப்போது தான் அவருக்கு க்ஷேமம் உண்டாகும். இவ்விதம் தீர்மானம் செய்த நான் எல்லையற்ற ஆகாய வெளியில் காற்றுடன் கலந்துவிட முயற்சி செய்து கொண்டிருந்தேன்.

*

சில மாதங்கள் சென்றன. அவரை மறந்து விடுவது அவ்வளவு சுலபமாக இல்லை. ஆகாய வெளியில் மிதந்து கொண்டிருந்த நான் ஒரு நாள், ரோகிணியுடன் கொஞ்சிக் கொண்டிருந்த சந்திரனைக் கண்டேன். என் மனம் என் வீட்டை நோக்கி ஓடியது. அங்கே ஒரு அறையில்......கொசுவலை கட்டிய கட்டிலில் அவர் படுத்திருக்கும் காட்சி தெரிந்தது. யோசனைக்கு இடம் கொடுக்காமல் என் வீட்டை நோக்கி ஓடினேன். வீட்டை நெருங்கியதும் தடுமாற்றமடைந்தேன். முந்திய தடவைகளைப் போல் அசந்தர்ப்பமாக ஏதாவது நடந்து விட்டால் என்ன செய்வது? இந்தத் தடவை அவருடன் பேசக்கூடாது. அவருடைய அன்பு வடிவத்தைக் கண்ணாரக் கண்டு விட்டுத் திரும்பிவிட வேண்டியது தான்.

நான் எதிர்பார்த்ததுபோல் அவர் தன்னறையில் இல்லை. ஆவலுடன் அடுத்த அறைக்கு ஓடிய என் கவனம் தாயும் மகளுமாக நடத்திய சம்பாஷணையில் சென்றது.

“காலம் சரியானால் நல்லது. இப்போது தான் அவன் மனம் மாற ஆரம்பித்திருக்கிறது. ‘கல்யாணமாகியும் பிரும்மசாரி’ என்றபடி இருந்து விடுவானோ என்று பயந்து விட்டேன். இரண்டாவது கல்யாணத்திற்குத் தான் எளிதில் சம்மதித்தானே! என்னவெல்லாம் தந்திரம் செய்யும்படி நேர்ந்து விட்டது!” என்றாள் என் மாமியார்.

“புது மன்னியிடம் அன்பு காட்ட ஆரம்பித்ததைவிட அவன் பழைய மன்னியை மறந்து விட்டதுதான் அதிசயம். விவாகமான புதிதில் அண்ணா ஏக்கமுற்றிருந்ததைப் பார்த்து அவன் சுசீலாவை மறக்கவே மாட்டான் என்று நிச்சயித்தேன். ஒரு மாதமாகவே அவன் கொஞ்சம் கொஞ்சமாக மாறி வருகிறான். இன்று சினிமாவுக்கு இரண்டாவது ஆட்டத்திற்கு மன்னியை அழைத்துப் போவதாக அவன் கூறியபோது என்னால் அவன் வார்த்தையை நம்பவே முடியவில்லை!” என்றாள் என் நாத்தனார்.

"எப்படியாவது எல்லாம் சரியானால் போதும்" என்றாள் மாமியார்.

நான் ஏழு பாதாளத்தில் விழுவதுபோல் உணர்ந்தேன்! அவர் என்னை மறந்து விட்டார்! இனிமேல் எனக்கு இங்கே என்ன வேலை? நான் திரும்பினேன், அவரை அறவே மறந்துவிட வேண்டும் என்ற தீர்மானத்தை இன்னும் திடப்படுத்திக் கொண்டு.

அந்த நாட்கள் மிகவும் கடுமையானவை. என் உயிருக் குயிரானவர் என்னை மறந்து விட்டார். நானும் அவரை மறந்துவிட முயற் சித்தும் பலன் கிட்டவில்லை. அவருடைய பழைய அன்பு மொழிகளை நினைத்து ஆனந்தப்பட்டுக் கொண்டிருக்கும் போதே அவருடைய தற்போதைய துரோகச் செயல் நினைவுக்கு வந்துவிடும். அவர்மேல் கோபப் படவும் என்னால் முடியாது. இப்படிப் பல காலம் தவித்தேன் நான். பிறகு எனக்கு அறிவு உதயமாயிற்று. அவருடைய சந்தோஷம் தானே என் லட்சியம்? அவர் என்னை நினைத்துக் கொண்டு வருந்துவதால் எனக்கு என்ன லாபம்? நான் திரும்பிப் போய் அவரை அடையவா போகிறேன்? அவரை நொந்து கொண்டதற்குப் பிராயச் சித்தமாக என் வீடு சென்று, அவர்கள் இருவரையும்—என் கணவரையும் அவருடைய புது மனைவியையும் — மனதார வாழ்த்தி விட்டு வர விரும்பினேன்.

இந்தத் தடவையும் நான் எதிர்பாராத ஒரு காட்சியைத்தான் கண்டேன். என் கணவரின் புது மனைவி — ஆ! அவள் எவ்வளவு அழகாக இருந்தாள்! நிலவுபோன்ற அவள் முகமும் அன்பு மிக்க விழிகளும்தான் என் கணவரின் பழைய அன்பை மறக்கச் செய்தன போலும்! அவள் அழகில் நான் மயங்கி நின்றபோது திடீரென்று, மெல்ல ஆடத் தொடங்கினாள் அவள். கார்மேகம் போன்ற கூந்தல் அவிழ்ந்து தொங்க, கண்களை மூடியவாறே ஆட ஆரம்பித்தாள் அவள். அவள் எதிரே உட்கார்ந்திருந்த பூசாரி வேப் பிலையை அடித்துக்கொண்டே ஏதேதோ முணுமுணுக்க ஆரம்பித்தான்.

இதைப் பார்த்து நான் திகைத்து நிற்கையில் அங்கு கூடியிருந்த பெண்களின் பேச்சு எனக்கு விஷயத்தைத் தெளிவு படுத்தியது. அவளைப் பேய் பிடித்திருக்கிறதாம்! அந்தப் பேய் நான்தானாம்! என்ன அநியாயம்! நான் இதுவரை அவளைப் பார்த்ததுகூடக் கிடையாதே! இப்போது நான் இங்கே வந்ததுகூட அவர்களை வாழ்த்தத்தானே! நான் என் கணவரின் நன்மையை விரும்பி என்ன செய்தாலும் எனக்குக் கெட்ட பெயர் தான் வருகிறது. அன்று என்னால் என் கணவருக்கு 'ஹிஸ்டீரியா' வந்ததாம். அவர் ஒரு விதமாகத் தேறி, மனம் மாறி, மறு விவாகம் செய்து கொண்டு கொஞ்சம் கொஞ்சமாகக் குடும்பத்தில் அக்கறை காட்ட ஆரம்பித்த சமயம், நான் அவருடைய இரண்டாவது மனைவியைப் பிடித்து ஆட்டுகிறேனாம்!

நானோ அவருடன் நன்றாக வாழக்கொடுத்து வைக்கவில்லை. அவருடைய வாழ்க்கையைப் பரிபூரணமாக்க முடியாமல் இறந்து தொலைந்தேன். இன்னொரு பெண்ணாவது அவருடைய மண வாழ்க்கையைச் சோபிக்கச் செய்தால் நான் ஏன் பொறாமை அடையப் போகிறேன்! அவர் மகிழ்ச்சியாக இல்லையே என்றுதானே நான் துயரப்பட்டுக் கொண்டிருந்தேன்!

நான் இருந்த இடத்தில் இன்னொரு பெண்! நான் உயிருடன் இருந்தபோது இதை நினைத்துப் பார்த்திருப்பேனா! காலம் மாறிவிட்டது. நானும் அதைச் சகஜமாக நினைக்க ஆரம்பித்திருக்கிறேன்.

அன்று—என் கணவர் மறுவிவாகம் செய்து கொண்டதை அறிந்த அன்று — நான் என் வீட்டுக்குச் சென்றதை நினைத்துப் பார்த்தேன். வீடு முற்றிலும் புதுமையாக இருந்தது. நான் இருந்தபோது இல்லாத பல சௌகரியங்களும் அலங்காரங்களும் இருந்தன. அதைக் கவனித்த என் மனசுக்கு என்னவோ போலிருந்தது. 'இளையாள் மோகம்' என்ற பழம் பசலிகளின் வார்த்தை எனக்கு அருவருப்பாக இருக்கும். ஆனால் அதை அங்கே அன்று பிரத்யட்சமாகக் கண்டேன். அழகிய புது மனைவி அவருடைய கருத்தைக் குடும்பத்தின் பால் நன்றாகத் திருப்பிவிட்டாள் என்று நினைத்து நினைத்து நான் பொறாமைப் பட்டேன்.

என் பொறாமைதான் அந்தப் பெண்ணின் சௌக்கியத்தை பாதித்து விட்டதோ!

இந்த எண்ணம் என் மனசை மிகவும் புண்படுத்தியது.

இதுபற்றிப் பல நாட்கள் மனதைக் குழப்பிக் கொண்டிருந்து விட்டு ஓர் இரவு என் கணவரின் கனவில் திடீரென்று தோன்றினேன். அவர் திடுக்கிட்டார். ஆனால் அவர் பார்வையில் ஆவல் இல்லை. அவர் பதறவுமில்லை. காலம்தான் மாறிவிட்டதே!

"சுசீ!" என்றார் நிதானமாக. நான் காரியத்திலேயே கண்ணாகப் படபடப்புடன் ஆரம்பித்தேன்: "என்னை எல்லோரும் தவறாக நினைத்து விட்டீர்கள்! உங்கள் மனைவி மீது எனக்கு என்ன கோபம்? நான் ஏன் அவளைப் பேயாகப் பிடிக்கிறேன்......" இதைச் சொல்லிக் கொண்டிருந்த போதே எனக்கு அழுகை வந்து விட்டது.

"சுசீலா! நான் உன்னை மறந்து மறு விவாகம் செய்து கொண்டதில் உனக்குக் கோபம்; இல்லையா? நானும் அவ்வளவு எளிதில் உன்னை மறந்துவிடவில்லையடி! இப்போதும்......" என்றார் என் கணவர்.

"நீங்கள் என்னை மறந்து மறுபடியும் வாழ்க்கையில் ஈடுபட வேண்டும் என்பது தான் என் விருப்பம்."

"அப்போது கமலாமீது உனக்குப் பொறாமையே இல்லையா?"

"இல்லவே இல்லை. அதைத் தெரிவிக்கத் தான் இங்கே வந்தேன். கமலாவுக்கு இதைத் தெரியப் படுத்துங்கள். அவள் இன்னும் சில மாதங்களில் தாயாகப் போகிறாள் என்று தெரிகிறது. இந்தச் சமயத்திலா நான்......சரி, தந்தையாகப் போகும் உங்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்" என்று சொல்லிவிட்டு நான் கிளம்பினேன்.


"நில் சுசீலா! உன்னைப் பேய் என்கிறார்களே! நீ தெய்வம் அல்லவா? உன் எண்ணத்தைத் தெரிந்து கொண்டால் உடனே கமலாவின் உடம்பு குண மாகிவிடும்!"

"நிலை இழந்த அவள் மனசில் பதியும்படி இதைப் பன்முறை சொல்லுங்கள். அவள் வியாதி பறந்து விடும். மனப் பிரமையால் தானே அவள் இந்நிலைக்கு வந்திருக்கிறாள்!" என்று சொல்லி விட்டு, ஒரு காலத்தில் எனக்கே சொந்தமாக இருந்த அவர் அன்பு உருவத்தின் அழகைக் கண்ணாரப் பருகிவிட்டு வேகமாகத் திரும்பினேன்.

*

இந்த க்ஷய ரோக ஆஸ்பத்திரிக் கட்டடம் என்னை இத்தனை நேரம் பழைய நினைவுகளில் லயிக்கும்படி செய்து விட்டது. என்னுடைய உண்மையான மன நிலையை என் கணவருக்குத் தெரிவித்து விட்டு இப்போதுதான் வந்து கொண்டிருக்கிறேன். கடமையைச் செய்து விட்ட திருப்தியில் என் மனம் நிறைந்திருக்கிறது. கமலா குணமடைந்து விடுவாள்! என் கணவரின் வாழ்க்கையில் ஆனந்தம் நிரம்பும்!

இனி எனக்கு என்ன குறை? பாசங்களற்று விட்ட நான் காற்றோடு காற்றாகக் கலந்து விடுவேன். அதன்பின் ஒரே அமைதி!





இன்ஸ்பெக்டர்:—நீ திருடினாயா?

குற்றவாளி:—சத்தியமாக இல்லை!

இன்ஸ்:—அப்படியானால் நீ அந்த வீட்டின் பின் பக்கமாக வெளியே ஓடுவானேன்?

குற்ற:—முன் பக்கம்தான் ஒரு போலீஸ்காரன் நின்று கொண்டிருந்தானே?


அவனுக்கு ஒரு கம்பீரத்
தோற்றமளிக்கும்
வாச்சை
கொடுங்கள்...
ஒரு ஒமேகா வாச்சை பரி
சளிப்பது பெருமைய
டையத்தக்கதாகும்.
OMEGA
இந்தியாவில் பூர்ண ஏஜண்டுகள்:—
சார்ல்ஸ் அப்ரெக்ட், D-5 கிளைவ் பில்டிங்ஸ், கல்கத்தா
269, ஹார்ன்பி ரோடு, பம்பாய்.




கந்தப்பன் காலையில் எழுந்ததும் வயல் வேலைகளைக் கவனிக்கப் போய் விடுவான். அப்போதெல்லாம் அவன் மனைவி அவனுக்குச் சாப்பாடு எடுத்துச் செல்வாள். அன்றைக்கு அவளுக்கு உடம்பு சரியில்லை. ஆகையினால், கந்தப்பன், "இன்று நீ சாப்பாடு எடுத்துக்கொண்டு வரவேண்டாம். நமது பெண் மூத்தவளிடம் சாப்பாட்டைக் கொடுத்தனுப்பு. அவளுக்கு வழி தெரிவதற்கு நான் என் வழி நெடுகத் தானியங்களைப் போட்டுக் கொண்டே போகிறேன். அதைப் பார்த்து வழியைப் பிடித்துக் கொண்டு அவள் வந்து சேரட்டும்!" என்று சொன்னான்.

கந்தப்பனின் மூத்த மகள் அப்பாவுக்குச் சாப்பாட்டை எடுத்துக்கொண்டு போனாள். கொஞ்ச தூரம் போனதும், தானியங்களைப் பறவைகள் கொத்தித் தின்றுவிட்டபடியால், அவளுக்கு வழி தெரியவில்லை. தனக்குத் தோன்றிய வழியில் போனாள். போனாள், போனாள், போய்க் கொண்டேயிருந்தாள். வயலும் வரவில்லை. வரப்பும் வரவில்லை. எங்கேயோ அடர்ந்த காட்டு வழியில் போய் விட்டாள். அவளுக்குக் கை, கால் சோர்ந்து விட்டது. இதற்குள் இருட்டிப் போய் விட்டது. சமீபத்தில் தெரிந்த ஒரு சின்ன வீட்டுக்கு அவள் போய்ச் சேர்ந்தாள். கதவைத் தட்டினாள். உடனே கதவு திறந்து கொண்டது. "வா, உள்ளே வா!" என்று யாரோ அழைக்கும் குரல் கேட்டது. அவள் உள்ளே போனாள்.

அங்கே தாடியுடன் ஒரு கிழவன் இருந்தான். அவன் எதிரே மூன்று கிளிகள் இருந்தன.

அந்தக் கிளிகளைப் பார்த்துக் கிழவன் "இந்தப் பெண்ணுக்கு இங்கே இடம் கொடுக்கலாமா?" என்று கேட்டான்.

"ஓ, பேஷாக!" என்று கிளிகள் கூறின.

உடனே அந்தப் பெண் உள்ளே சென்று கை, கால், முகம் கழுவிக் கொண்டு, தன் அப்பாவுக்கு என்று எடுத்து வந்த சாப்பாட்டைச் சாப்பிட்டு விட்டு வந்தாள்.

"நான் எங்கே படுத்துக் கொள்ளுவது?" என்று கேட்டாள். கிழவன் மாடியறையைக் காட்டினான். அவள் மாடிக்குப் போனாள்.

அப்பொழுது அந்த மூன்று கிளிகளும் "எங்களையெல்லாம் விட்டு விட்டு நீ மட்டும் தானே சாப்பிட்டாய்?" என்று ஏக்கத்தோடு கேட்டன. அந்தப் பெண் அதைக் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. மாடிக்குப் போய் அங்கிருந்த கட்டிலில் படுத்துக் கொண்டு, வெகுதூரம் நடந்து வந்த அலுப்பில் தூங்கி விட்டாள். அடுத்த நிமிஷம் தாடிக்காரக் கிழவன் அங்கே வந்து ஏதோ மந்திரம் ஜபித்தான். அவள் மாயமாய் மறைந்து போய் விட்டாள்.

வயலுக்குப் போன கந்தப்பன் அன்று பகல் வேளைச் சாப்பாடு வராமற் போகவே பசியினால் தவித்துப் போனான். பட்டினியாகவே வீட்டுக்கு வந்து சேர்ந்தான். வந்ததும் வராததுமாக மனைவியைக் கோபித்துக் கொண்டான். பிறகு உண்மை தெரிந்தது. பக்கத்து ஊரில் அவளுக்குத் தங்கையிருக்கிறாள். ஒரு வேளை தன் மூத்த மகள் அங்கு தான் போயிருப்பாள் என்று நினைத்தான்.

மறு நாள் வயலுக்குப் புறப்படும்போது இரண்டாவது மகளைச் சாப்பாடு கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்தான். போகும் வழியில் பட்டாணியைப் போட்டுக் கொண்டு போவதாகச் சொல்லி விட்டுச் சென்றான்.



கந்தப்பனின் இரண்டாவது மகள் சாப்பாடு எடுத்துக் கொண்டு சென்றாள். கந்தப்பன் போட்டுக் கொண்டு போன பட்டாணியெல்லாம், பறவைகள் கொத்திவிடவே தீர்ந்து போயின.

இரண்டாவது பெண்ணும் வழி தவறி நெடுந்தூரம் போய், மாலை வேளையில் அந்தக் கிழவனின் குடிசையை அடைந்தாள். குடிசையின் கதவைத் தட்டினாள். கதவு திறந்து கொண்டது. அவள் உள்ளே போனாள்.

அந்தப் பெண் உள்ளே போனதும் சாப்பாட்டு மூட்டையை அவிழ்த்துச் சாப்பிட ஆரம்பித்தாள். கிளிகள், "ஏ பெண்ணே, நீ மாத்திரம் சாப்பிட்டுவிட்டால் போதுமா?" என்று கேட்டன.

அந்தப் பெண்ணும் பொருட்படுத்தவில்லை. தான் பாட்டுக்குச் சாப்பிட்டு விட்டு, படுப்பதற்கு இடம் தேடினாள். கிழவன் மாடி அறையைக் காட்டிக் காண்பித்தான். மாடியில் போய்ப் படுத்தாள் அந்தப் பெண். கிழவன் பின்னாலேயே சென்று மந்திரம் ஜபித்தான். உடனே அந்தப் பெண் மறைந்து விட்டாள்.

அன்றைக்கும் சாப்பாடு வராததால் கந்தப்பன் பட்டினியாக வீட்டுக்கு வந்தான்.

மறுநாள் கடைசிப் பெண் சுந்தரியிடம் சாப்பாடு கொண்டுவரச் சொல்லி விட்டு அவனுக்கு வழி தெரிவதற்காகக் கடலையைப் போட்டுக் கொண்டே போனான்.

சுந்தரி சாப்பாட்டை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள். கொஞ்சதூரம் சென்றதும் அவளுக்கும் வழி தவறிவிட்டது. ஆனால் அவள் தன் சகோதரிகளைப் போல் அவசரப்பட்டு மனசுக்குத் தோன்றிய வழியில் போய் விடவில்லை. நின்று யோசனை செய்து, வழியில் சிலபேரைக் கேட்டுத் தன் தகப்பனிடம் போய்ச் சேர்ந்தாள். அவனுக்குச் சாப்பாடு போட்டு விட்டுச் சுந்தரி வீட்டுக்குப் புறப்பட்டாள். அப்பொழுது திடீரென்று ஒரு கொடிய காற்று வீசியது. திக்குத் திசை தெரியவில்லை சுந்தரிக்கு. இருட்டிப் போனதும் அந்தக் குடிசையின் அருகே வந்து சேர்ந்தாள். குடிசையின் கதவு திறந்தது. "உள்ளே வா!" என்று அழைப்பு வந்தது.

கிழவன் அவளுக்குப் பழமும் பாலும் கொடுத்து உபசரித்தான். அவள் அவற்றை மூன்று கிளிகளுக்கும் கொடுத்துத் தானும் சாப்பிட்டாள். கிழவன் மாடிக்குப் போய்ப் படுத்துக் கொள்ளும்படி சொன்னான்.

சுந்தரி மாடிக்குப் போய்ப் படுத்துக் கொண்டாள். அவளுக்குத் தூக்கம் வரவில்லை. அக்கா இருவரும் என்ன ஆனார்கள் என்ற கவலையிலேயே மூழ்கியிருந்தாள்.

பாதி ராத்திரியில் கிழவன் அங்கு வந்து மந்திரம் ஜபித்தான். கட்டிலிலிருந்து தான் மட்டும் தனியாகக் கிளம்பி எங்கோ போவது போல் இருந்தது அவளுக்கு. அப்பொழுது அவள் பக்கத்தில் கட்டிலில் யாரோ உட்கார்ந்து அவள் கையைப் பிடித்துக் கொண்ட மாதிரி யிருந்தது. ஆச்சரியத்துடன் பார்த்தாள். அவள் பக்கத்தில் ஒரு ராஜகுமாரன் இருந்தான்.

"சுந்தரி, பயப்படாதே! கிழவரிடம் இருந்த மூன்று கிளிகளில் ஒருவன்தான் நான். மற்றவர் என் அண்ணன்மார்கள். ஒரு மந்திரவாதியின் மந்திரத்தால் இந்த உருவத்தை யடைந்தோம். பல பெண்கள் வருவார்கள். அவர்களுள் ஒருத்தியால் அது நீங்கும் என்றான் அந்த மந்திரவாதி. கிழவர் என் தகப்பனார்" என்றான் ராஜகுமாரன்.


சுந்தரிக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. "அப்படியானால் என் அக்கா இருவரும் இங்கே தான் இருக்கிறார்களா?" என்று கேட்டாள் சுந்தரி.

"இங்கே வந்த பெண்களெல்லாரும் எழுந்து விடுவார்கள். அவர்களுள் உன் அக்கா இருவரும் இருக்கிறார்களா, பார்!" என்றான் ராஜகுமாரன்.

அடுத்த நிமிஷம், அந்த வீடு மறைந்து அங்கே ஒரு பெரிய மாளிகை உண்டாயிற்று.

உடனே எத்தனையோ பெண்மணிகள் அங்கே தோன்றினார்கள். அவர்களுக்கு மத்தியில் தன் அக்கா இருவரையும் பார்த்ததும் சுந்தரிக்கு ஆனந்தம் தாங்கவில்லை.

மறுநாளே மூன்று ராஜகுமாரர்களும் கந்தப்பனுடைய மூன்று பெண்களையும் மணந்து கொண்டனர். பெண்களைக் காணாமல் வருத்தப் பட்டுக்கொண் டிருந்த கந்தப்பனையும் அவன் மனைவியையும் பிரமாத அரச மரியாதைகளுடன் மாளிகைக்கு வரவழைத்தார்கள். அப்புறம் அவர்கள் ஆனந்தத்துக்குக் கேட்க வேண்டுமா?



பக்தி பரவசம் அவனுக்கு....பிள்ளைப் பற்று அவளுக்கு....
இரண்டும் மோதிடும் போது படத்தில் கட்டுத்திறக்குக் கட்டம்
உள்ளத்தை குலுக்கும் உணர்ச்சி பெருக்கு......



ராயல்

# சுதர்ஸன்

தமிழ் நாட்டின் முன்னணி நட்சத்திரங்கள்
**சின்னப்பா, கண்ணாம்பா,** யோகமங்களம்.
**பாலையா. லலிதா** நடித்தது..

டைரக்ஷன் : சுந்தரராவ் நட்கர்னி & A.S.A. சாமி  ஸ்டுடியோ : சென்ட்ரல், கோயமுத்தூர் - வாஹினி, சென்னை

இப்பொழுது நடைபெறுகிறது

சென்னை காஸினோ - பிராட்வே - சரஸ்வதி

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மதுரை | - | சிந்தாமணி | திண்டுக்கல் | - | ரோஜா மஹால் | எர்ணாகுளம் | - | மேனகா |
| திருச்சிராப்பள்ளி | - | ராஜா | மாயவரம் | - | சுந்தரம் | கொல்லம் | - | லக்ஷ்மி |
| கோயமுத்தூர் | - | ராஜா | புதுச்சேரி | - | கமர்ஷியல் | ஆலப்புழை | - | ஸ்ரீ கிருஷ்ணா |
| சேலம் | - | அம்பிகா | விருதுநகர் | - | சென்ட்ரல் சினிமா | பெங்களூர் | - | சிவாஜி, கேம்பா |
| திருநெல்வேலி | - | ராயல் | தென்காசி | - | பாக்யலக்ஷ்மி | | | கோடா & ரூப் மஹால் |
| தஞ்சாவூர் | - | ஜூபிடர் | பழனி | - | விக்டரி டூரிங் | மைசூர் | - | ஒப்பேரா |
| தூத்துக்குடி | - | காரனேஷன் | திருவனந்தபுரம் | - | நியூ தியேட்டர் | ராபர்ட்ஸன்பேட் KGF | - | கிருஷ்ணா |

இதர இடங்களில் விரைவில் எதிர்பாருங்கள்.

ராயல் டாக்கீ டிஸ்டிரிபியூட்டர்ஸ், மதுரை, விஜயவாடா, பெங்களூர்.

# வம்புச் சாவடி

எஸ். வி. எஸ்.

ஊருக்கு ஊர் வம்புச் சாவடிகள் உண்டு. அந்த வம்புச் சாவடிகள் சில ஊர்களில் குளக்கரையாக இருக்கும்; சில ஊர்களில் ஆற்றங் கரையாக இருக்கும். இன்னும் சில ஊர்களில் தெருத் திண்ணையாக இருக்கும்; அல்லது தெரு முச்சந்தியாகவும் இருக்கும். இந்த வம்புச் சாவடிகளில் அகில உலக அரசியலிலிருந்து, அடுப்பங்கரை வரைக்கு முள்ள அத்தனை விஷயங்களும் அடிபடும். நாலு பேர் கூடினால் பேச்சு, மகத்தான விஷயத்தில் ஆரம்பித்து மகா மட்டமான விஷயத்தில் வந்து முடிந்தாலும் முடியலாம். அல்லது, மகா மட்டமான விஷயத்தில் ஆரம்பித்து மகத்தான விஷயத்தில் முடிந்தாலும் முடியலாம். இப்படி ஆரம்பித்து இன்னபடிதான் முடியவேண்டும் என்று திட்ட வட்டமான சட்டம் ஏதும் வம்புச் சாவடி மகாநாட்டுக்குக் கிடையாது. சிற்சில சமயம் ஏதோ ஒரு விஷயம்பேசிக் கொண் டிருக்கும்போது, "அது கிடக்கட்டும் ஐயா, இதற்கு என்ன சொல்கிறீர்?' என்று ஒரு அங்கத்தினர் ஆரம்பித்து, பேச்சின் போக்கை வேறு திசைக்குத் திருப்பினாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

இந்த வம்புச் சாவடியில் அங்கத்தினராவ தற்குப் பட்டம் வேண்டியதில்லை; பதவி வேண்டியதில்லை. சந்தா வேண்டியதில்லை; நன்கொடை வேண்டியதில்லை. கடவுள் கொடுத்த வம்பளக்கும் திறன் இருந்தால் போதுமானது. இதோ பாருங்கள், அன்று எங்கள் ஊர் வம்புச் சாவடியில் நிகழ்ந்த நிகழ்ச்சிக் குறிப்பை.

"எனக்கு என்னமோ ஸார், அன்றைக்கு ஜவாஹர்லால் நேரு செய்த பிரசங்கத்திலே ஒரு விஷயம் ரொம்ப ரொம்பப் பிடித்தது!" என்றார் குப்பண்ணா ரொம்ப உற்சாகமாக.

"எதைச் சொல்றேன்?" என்றார் ஸ்ரீமான் ராமண்ணா!

"அதுதான் ஸ்வாமி, நம்ம தேசத்திலே ஒரு பிரச்னை, இரண்டு பிரச்னையல்ல— முப்பது கோடிப் பிரச்னையிருக்கு என்றார் பாரும், அதைச் சொல்லுகிறேன்! நூற் றுக்கு நூறு உண்மையான வார்த்தை, ஐயா! சிலபேர் சொல்லுகிறார்களே, உணவுப் பஞ் சத்தைத் தீர்த்து விட்டால் அப்புறம் ஒரே சொர்க்க போகந்தான்! பொருளாதாரப் பிரச்னையைத் தீர்த்து முடிவுகட்டி விட்டால் இந்தப் பூலோகமே புவர் லோகமாயிடும் என்று! இதெல்லாம் என்ன பேச்சு? இத்தனை பிரச்னைகள் தீர்த்த பிறகும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிரச்னை— ஏன் பல பிரச்னைகள்—இருக்கும். அது வல்லோ அடிப்படை உண்மை! அந்த மனுஷன் என்னமாத்தான் அதைச் சொன் னர்! அடாடா!" என்றார் குப்பண்ணா.

அப்படி இருவர் நடுத்தெருவில் நின்று பேசிக் கொண்டிருந்த போதே, இலக்கியப் பித்துப் பிடித்த ராமசாமி, அவர்கள் பேச் சைக் கேட்டுக்கொண்டே வந்து சேர்ந்தான்.

"அரசியலில்தான் அப்படி என்று நினைத் துக்கொண்டு விடாதீர்கள். இலக்கியத்தில் கூட அப்படித்தான்" என்றான் ராமசாமி.

"என்ன இலக்கியத்தில் கூட அப்படி? ரொம்ப இலக்கியம் கண்டமாதிரி பேசு கிறாயே!" என்றார் ராமண்ணா.


"நான் காணவிட்டாலும் பெரியவர்கள் கண்டிருக்கிறார்கள் அல்லவா? ரஸிகமணி டி. கே. சி. என்ன சொல்வார் தெரியுமா?"

"என்ன சொல்வார்?"

"'இலக்கியத்தில் நவரஸங்கள் உண்டு என்பார்கள். ஆனால் என்னைக் கேட்டால் ஒன்பதினாயிரம் ரஸங்கள் உண்டு' என்பார். அது எவ்வளவு அரிய உண்மை தெரியுமா? உதாரணமாக, ராமன் காட்டுக்குப் போகும் போது ஊர்ஜனங்கள் எல்லாம் அழுகிறார்கள்— இதைச் சோக ரஸம் என்று சொல்லு கிறோம்! பிறகு சுமந்திரன், ராம லக்ஷ்மணர் களைக் காட்டில் விட்டு விட்டுத் திரும்பி வரும் போது சீதையிடம் விடை பெற்றுக் கொள்ள வருகிறான். அப்போது சீதை 'என் தங்கை மார்களிடம், நான் வளர்த்த மைனாவையும் கிளியையும் ஜாக்கிரதையாகப் பாதுகாக்கச் சொல்' என்கிறாள். இதைக் கேட்டுச் சுமந் திரன் சீதை வனவாசத்தின் கஷ்டத்தைச் சற் றும் உணராமலிருக்கும் நிலையைக் கண்டு வருந்தி அழுகிறான். சுமந்திரன் அழும் கார ணத்தை அறிய மாட்டாமல் சீதையும்

---

## சர்வம் பிளாஸ்டிக் மயம்



வந்தவர்:—இப்பெல்லாம் 'பிளாஸ் டிக்' கிலே வராத சாமானே கிடை யாது. இந்தத் தட்டு, என்ன பிளாஸ் டிக்தானே?

கோமுட்டி:—அதில் இருக்கும் வெற்றிலையும் பிளாஸ்டிக்தான்.

அழுகிருளாம் ?—இது சோகமும் ஹாஸ்யமும் கலந்த ஒரு ரஸமாக விளங்குகிறது! இதை என்னவென்று சொல்வது? இப்படிப் பார்க்கப் போனால் நவரஸங்கள் என்று பொதுவாகச் சொல்லலாமே தவிர்த்து ஒன்பதனாயிரம் ரஸம் இருக்கும் என்று டி. கே. சி. சொன்னது எவ்வளவு அரிய உண்மை என்று பார்த்தீர்களா?" என்றான்.

மூன்று பேர் கூடி ஓரிடத்தில் நின்று பேசினால், கோதண்டராமன் எப்படியோ அங்கு வந்து சேர்ந்து விடுவான்! எப்படியோ அவனுக்கு மூக்கில் வேர்த்து விடும்!

"இவன் என்னவோ ரஸங்களைப் பற்றி வாய் வார்த்தையாக அளந்துவிட்டுக் கொண்டிருக்கிறான்! அங்கே அப்பாசாமி ஐயர் கமகம என்று என்ன அற்புதமான ரசம் கரண்டி கரண்டியாக, தொன்னை தொன்னையாக விட்டுக் கொண்டிருக்கிறார். ஆகா! ஆகா! என்ன ருசி! என்ன வாசனை! கடவுள் ஒரே ஒரு வயிறுதான் வைத்தாரே என்றிருக்கிறது!" என்றான் கோதண்டராமன்.

"எங்கே?" என்றார் குப்பண்ணா!

"நம்ம வக்கீல் சீனுவாசய்யர் வீட்டிலே! அவர் குழந்தைக்கு ஆண்டு நிறைவாம். சமையல் நம்ம அப்பாசாமி ஐயர் என்று கேள்விப்பட்டேன். சரி, அப்பாசாமி ஐயர் ரசம் சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு என்று, அழையா விருந்தாளியாகவே நுழைந்து வைத்தேன். அதனால் ஒன்றும் கெட்டுப் போகவில்லை. சம்பிரமாகச் சாப்பிட்டுவிட்டு வந்தேன்—ஆனால் ரசம்தான் இன்னொரு கரண்டி வாங்கிக் கொள்ள முடியாமல் போய் விட்டது" என்று அங்கலாய்த்தான்.

"ஏன்?"

"வயிற்றில் இடமில்லை" என்றான் கோதண்டராமன்-இல்லை-சாப்பாட்டு ராமன்.

"ஏன் ஸார், ஏதோ மைசூர் ரசம், மிளகு ரசம், தக்காளி ரசம் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால் இப்போதுதான் 'அப்பாசாமி ஐயர் ரசம்' என்று ஒன்றிருப்பதாகக் கேள்விப் படுகிறேன்" என்றார் ராமண்ணா—குப்பண்ணாவைப் பார்த்து!

"ஆமாம்; ரசம் வைக்கிறவர் கைக்குக் கை வித்தியாசம் இருக்கிறதல்லவா? ஆகவே நாம் சாப்பிடும் ரசம் வகையிலும் ஆயிரக்கணக்கான வகையுண்டு என்று நம்ம தண்ட சோற்றுக் கோதண்டராமன் ஆராய்ச்சி செய்து நமக்கு இன்றைக்குச் சொல்லுகிறான்!" என்றார் குப்பண்ணா.

வட்ட மேஜை

# பஜ கோவிந்தம்

சென்ற வாரக் 'கல்கி' பத்திரிகையில் ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் சங்கர பகவத் பாதர் அவர்களுடைய முதல் ஸ்தோத்திரத்தைப் பற்றி எழுதியிருந்ததைப் பார்த்து, படித்து, மகிழ்ச்சி யடைந்தேன்.

சங்கர பகவத் பாதர் இயற்றியுள்ள பல ஸ்தோத்திரங்களில், இந்த ஸ்தோத்திரத் தொகுதியின் கருத்துக்களை நமது தமிழ் மக்களுக்கு அறிவிக்க வேண்டியது அவசியம். இந்தக் கருத்துக்களைத் தமிழ் மக்களுக்கு நன்றாக மனத்தில் படும்படி அழகான முறையில் எழுதியவர்களில், ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அவர்களை விடத் தகுதியானவர் இல்லை. அவர் தமிழன்பு வாய்ந்தவர்; தமிழ்க் கல்வியில் ஈடுபட்டவர்; ஸம்ஸ்கிருத பாஷையையும் நன்கு கற்றவர்; ஸம்ஸ்கிருதக் கல்வியைச் சேர்ந்த உயர்ந்த நூல்களின் உட்கருத்தை உண்மையாக அறிந்து, அதைத் தெளிவாக வெளியிடச் சக்தியுள்ளவர். "கடோபனிஷத்" என்ற நூலின் கருத்துக்களை எளிய தமிழில் ஏற்கெனவே தமிழ் மக்களுக்கு அறிவித்துள்ளார். "உபனிஷதக் கதைகள்" என்ற அரிய நூல் எழுதியவர். மகாபாரதத்திலுள்ள அழகான கதைகளை மிகவும் சுருக்கமாயும் கோர்த்தியாகவும் தமிழ் மக்களுக்குப் பரப்பியவர். இவர் பஜகோவிந்தத்திலுள்ள 31 ஸ்தோத்திரங்களின் கருத்துக்களை நமக்கு வெளிப்படுத்த முன் வந்தது, தமிழ் மக்களின் பாக்கியமே என்பதில் ஐயமில்லை.

சங்கர பகவத் பாதர் தமிழ்க் கல்வியில் தோய்ந்தவர் என்பது அவருடைய "சௌந்தர்ய லஹரி"யின் உயர்ந்த ஸ்தோத்திரக் கருத்தைப் பார்த்தால் நமக்கு வெளியாகும். அதில் 75-வது சுலோகத்தில் ஞானப்பால் உண்டு தேவாரப் பாடலாக வெளியிட்ட சமயகுரவராகிய ஞானசம்பந்தர் அவர்களுடைய பெருமையைச் சங்கரபகவத் பாதர் புகழ்ந்து பேசியிருக்கிறார்.


तव स्तन्यं मन्ये धरणिधरकन्ये हृदयतः
पयः पारावारः परिवहति सारस्वतमिव ।
दयावत्या दत्तं द्रविडशिशुरास्वाद्य तव य-
त्कवीनां प्रौढानामजनि कमनीयः कवयिता ॥

நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தர் இன்னிசையால் தமிழ் பரப்பின பெருமையை மேற்படி சுலோகத்தில் ஸ்ரீ சங்கரர் பாராட்டுகிறார். இதிலிருந்து தேவாரம் முதலிய உயர்ந்த தமிழ் நூல்களை அறிந்து ஈடுபட்டுச் சந்தோஷ மடைந்தவர் சங்கர பகவத்பாதர் என்று தெரிகிறது.

சென்னை
27—11—51

கி. பாலசுப்பிரமணிய அய்யர்,
"ஆசிரமம்", லஸ், மயிலாப்பூர்.

# சுறுசுறுப்பான குழந்தைகளுக்கு அதிகப்படி போஷாக்கு அவசியம்!




எப்பொழுதும் ஓடி ஆடும் குழந்தைகளின் சக்தி விரயமாகிவருவதால், அதை ஈடுசெய்ய அவர்களுக்கு அதிகப்படி போஷாக்கு அவசியம்.

அவர்கள் ருசிமிகுந்த ஓவல்டினை மிகவும் விரும்புகின்றனர். எளிதில் ஜீரணமாகக்கூடியது. அவர்களின் வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்திற்கும் பெரிதும் உதவுகிறது. ஓவல்டினில் சுத்தமான பசுவின் ஏட்டுப்பால், பழுத்த பார்லிமால்ட், கொக்கோ, பாஸ்படைட்கள் பி & டி விடாமின்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அதிலிருக்கும் போஷாக்கு மற்றும் விடாமின் சத்துக்கள் இன்றியமையாதவை. ஓவல்டினை விடச் சிறந்தது வேறு கிடையாது


ஓவல்டின் சிறியோர் பெரியோர்களுக்கும் நல்லது. குடும்பத்திற்குகந்த சிறந்த உணவு பானம். டாக்டர்கள் எங்கும் சிபாரிசு செய்கின்றனர். போலிகளைத் தள்ளிவிடுங்கள்.

விநியோகஸ்தர்கள்: ஜேம்ஸ் டிரேடிங் கம்பெனி (இந்தியா) லிட்.




# ஓவல்டின்

## குழந்தைகள் விரும்பும் பானம்!



# ஹலோ பம்பாய்!

டி. வி. ராமானுஜம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

**ப**ஸ் போக்குவரத்து நிர்வாகத்தின் பூரண வெற்றி கீழ்க்கண்ட முக்கியமான கேள்விகளுக்கு அளிக்கப்படும் பதில்களையே பொறுத்திருக்கிறது.

**கேள்விகள் :**

1. சாதாரணமாகப் பிரயாணிகளுக்குப் போதிய பஸ்கள் இருக்கின்றனவா!

2. பஸ்கள் குறித்த காலத்தில் ஒழுங்காக ஓடிக் கொண்டிருக்கின்றனவா!

3 அவைகள் பொது ஜனங்களுக்கு வசதியாகவும் சௌகரியமாகவும் இருக்கின்றனவா!

4 பஸ் போக்குவரத்தினால் ஏற்படும் விபத்துகள் குறைந்து வருகின்றனவா!

5. போக்குவரத்துத் திட்டத்தினால் கார்ப்பொரேஷனுக்கு நஷ்டம் ஏற்படாமல் இருக்கிறதா!

6. அந்த ஸ்தாபனத்துக்காகப் போடப்பட்டுள்ள மூலதனத்துக்கு வட்டி ஒழுங்காகச் செலுத்தப்பட்டு வருகிறதா!

7. பஸ்கள் எல்லாம் இன்ஷூர் செய்யப்பட்டிருக்கின்றனவா!

8. பழைய வண்டிகளை அகற்றிவிட்டுப் புதிய வண்டிகளை வாங்குவதற்குப் போதிய அளவு வருமானத்திலிருந்து சேகரிக்கப்பட்ட தேவையான நிதி இருக்கிறதா!

9. பஸ் தொழிலாளர்கள் நன்கு நடத்தப்படுகிறார்களா!

10. தொழிலாளர்களுக்குத் திருப்திகரமான சம்பளம் கொடுக்க வேண்டும்; இன்ஷூரன்ஸ், தேவையான நிதிகள் இருக்க வேண்டும்; மூலதனத்துக்கு வட்டி கொடுக்கப்பட வேண்டும். வருமானத்திலிருந்து இத்தகைய செலவுகள் போக மிச்சம் ஏற்படுகிறதா!

11. அவ்வாறு ஏற்படும் மிச்சத் தொகைகள் தொழிலாளர்களின் நலன்களுக்காகவும் பிரயாணிகளின் வசதிகளை அதிகமாக்கவும் உபயோகப்படுகின்றனவா!

12. உண்மையில் பாராட்டத் தக்க மேற்படி வசதிகள் எல்லாம் பஸ் கட்டணங்களை உயர்த்தாமலே செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றனவா!

பம்பாய் மாநகர பஸ் போக்குவரத்து நிர்வாகம் சம்பந்தப்பட்ட வரையில், மேற்படி கேள்விகள் பெரும்பாலானவற்றுக்கும் திருப்திகரமான பதில்கள் அளிக்கலாம்.

*　*　*

**பதில்கள் :**

1. குறிப்பிட்ட இடத்தில் பிரயாணிகளின் போக்கு வரத்துக்கு எத்தனை பஸ்கள் வேண்டும் என்பதை யாராலும் அளவிட்டுச் சொல்ல முடியாது. இவ்விஷயம் பெரிதும் நிர்வாகத்தை நடத்துவோரின் புத்திசாலித்தனத்தையே பொறுத்திருக்கிறது.


பிரயாணிகளை ஏற்றிச் செல்வது சாமான்களை ஏற்றிச் செல்வது போல் அல்ல. சாமான்களைத் தாமதித்து ஏற்றிச் செல்லலாம். ஆனால் குறிப்பிட்ட இடத்தில் கூடிய பிரயாணிகளைக் குறிப்பிட்ட நேரத்துக்குள் ஏற்றிச் சென்றே தீர வேண்டும் அல்லவா! இதை யெல்லாம் மனதிற் கொண்டு பம்பாய் சர்க்கார் பஸ் போக்குவரத்து நிர்வாக ஸ்தாபனம் தேவையான பஸ்களுக்குத் தகுந்த ஏற்பாடு செய்திருக்கிறது

திட்டத்துக்கு மேல் அதிகப் பிரயாணிகளை ஏற்றுவது எவ்வாறு பிரயாணிகளுக்குக் கஷ்டத்தைக் கொடுக்குமோ, அதுபோலவே திட்டத்துக்குக் குறைவாகப் பிரயாணிகளை ஏற்றுவது நிர்வாகத்தை நடத்துவோருக்குக் கஷ்டத்தைக் கொடுக்கும்.

தேசியமயமாக்கும் — அதாவது நிர்வாகத்தைச் சர்க்கார் ஏற்று நடத்துவது என்ற முறையின் கீழ் பிரயாணிகளும் போக்குவரத்து நிர்வாகிகளும் ஒன்றுபட்டு விடுகிறார்கள்.

எனவே, நீர்க்காலோசனை செய்து பார்ப்பவர்கள், திட்டத்துக்குமேல் அதிக நபர்களைப் பஸ்களில் ஏற்றிக் கொள்வதைக் கண்டிப்பதுபோல், பஸ்கள் காலியாகவோ அல்லது திட்டத்துக்கு மிகவும் குறைந்த நபர்களை ஏற்றிக் கொண்டோ செல்வதையும் கண்டிப்பார்கள். ஏனெனில், அவ்வாறு பஸ்கள் ஓடுவதால் ஏற்படும் நஷ்டம் கடைசியில் பொதுஜனங்களைத்தான் பாதிக்கும்.

மேலே குறிப்பிட்ட இருவித விபரீதங்களையும் தவிர்ப்பதற்காக, போக்குவரத்து நிர்வாக அதிகாரிகள் நன்கு பரிசீலனை செய்த பிறகே குறிப்பிட்ட பாதையைத் தேர்ந்தெடுக்கிறார்கள். பஸ்கள் போக வேண்டிய ரஸ்தாக்களின் நிலைமை, போகும் வழியில் உள்ள ஒவ்வொரு கிராமம் அல்லது நகரத்தின் முக்கியத்துவம், பிரயாணி



தொழிற்சாலையில் பஸ் இன்ஜின்கள் சுத்தம் செய்யப்படுகின்றன

களின் உத்தேசமான தொகை முதலிய விவரங்களைச் சேகரித்துத் தீரப் பரிசீலனை செய்கிறார்கள். மேற்படி பரிசீலனையை அடிப்படையாகக் கொண்டும், பிரயாணிகளின் தொகைக்குத் தகுந்தவாறும் ஒவ்வொரு பாதையிலும் செல்லும் பஸ்களின் தொகையை நிர்ணயிக்கிறார்கள்.

அதன் பயனாக, பிரயாணிகளுக்குத் தொல்லையாக இருக்கும் இட நெருக்கடி தவிர்க்கப்படுகிறது; நிட்டத்துக்குக் குறைவாகப் பிரயாணிகள் செல்வதன் மூலம் பொது ஜனங்களுக்கு ஏற்படக் கூடிய நஷ்டமும் தவிர்க்கப்படுகிறது.


சென்ற மூன்று வருஷங்களில் பார்ப்போமானால், தினசரி ஒவ்வொரு பஸ்ஸிலும் மொத்தம் எத்தனை பிரயாணிகள் செல்ல முடியுமோ, அதில் சுமார் 82 சத விகிதம் சென்றிருக்கிறார்கள். விழாக்கள் முதலிய விசேஷ காலங்களில், தினசரிப் போக்கு வரத்துக்குக் குந்தகம் ஏற்படாமலும், வழக்கமாகப் போகும் பஸ்களின் தொகையைக் குறைக்காமலும் போக்குவரத்து இலாக்கா நிலைமையைச் சமாளித்து வந்திருக்கிறது.

2. சென்ற மூன்று வருஷங்களில் பஸ்கள் குறித்த காலத்தில் ஒழுங்காகப் புறப்படுவதும் வந்து சேருவதும் மிகவும் அபிவிருத்தியடைந்திருக்கின்றன. சிற்சில சமயங்களில் ரயில் கேட்டுகள், மழை, அதிகக் கூட்டம், டிக்கெட்டுப் பரிசோதனை முதலிய காரணங்களால் பஸ்கள் நேரம் தவறி வருவது உண்டு. எனினும் அத்தகைய அசம்பாவிதங்கள் தவிர்க்க முடியாதவை. குறிப்பாக ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் மழை காரணமாகப் பஸ்கள் குறித்த நேரத்தில் வர முடியாமல் தாமதித்து வரும்படி இருக்கும். இருந்தாலும் மொத்தத்தில் பஸ்கள் ஒழுங்காகக் குறித்த நேரத்தில் போவதும் வருவதும் இன்று மிகவும் திருப்திகரமாக இருக்கிறது.

3. பம்பாய் சர்க்கார் பஸ்கள் அகலமாகவும் நீளமாகவும் இருக்கின்றன. அவைகளில் மெத்தை ஆசனங்கள் போடப்பட்டிருக்கின்றன. உட்காருவதற்கும் காலை நீட்டிக் கொள்வதற்கும் வசதியாக அதிக இடம் இருக்கிறது. பிரயாணிகளின் சாமான்களில் பெரும்பாலானவையும் பஸ்களுக்கு மேல் புறத்தில் வைக்கப்படுவதால், பஸ்களின் உட்புறம் விஸ்தாரமாக இருக்கிறது. மேற்படி பஸ்கள் மிகுந்த காற்றோட்டமும் வெளிச்சமும் உள்ளவையாக இருக்கின்றன. மழையினால் நனையாத (Water-Proof) ஜன்னல் படுதாக்கள் போடப்பட்டிருக்கின்றன. எல்லா ரஸ்தாக்களும் ஒரே விதமாக இராதல்லவா! அந்தந்த ரஸ்தாவின் நிலைமைக்குத் தகுந்தவாறு வெவ்வேறு ரக பஸ்களை உபயோகித்து வருகிறார்கள். ரஸ்தாவில் இருக்கக் கூடிய மேடுபள்ளங்களில் பிரயாணிகளைத் தூக்கிப் போடாமல் இருப்பதற் கேற்றவாறு பஸ்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

4. 1949-ம் வருஷத்தைக் காட்டிலும் 1950-ல் பஸ்களின் தொகை இரட்டிப்பாகியும் கூட, விபத்துகள் குறைந்திருப்பது விசேஷமாகக் குறிப்பிடத்தக்கதாகும். அதிலும் மொத்தம் ஏற்பட்ட விபத்துகளில் 99 சதவிகிதம் ஜனங்களின் உயிருக்கோ, உடலுக்கோ சேதம் இல்லாத, சிறிய விபத்துகள் தான்.

5. பம்பாய் சர்க்காரின் பஸ் போக்குவரத்துத் திட்டம் நஷ்டமின்றி நடந்து வருகிறது; அது மாத்திரமல்ல, ஓரளவு லாபத்துடனும் நடந்து வருகிறது. மேற்படி லாபத்தைப் போக்குவரத்து அபிவிருத்திக்காகவே உபயோகிக்கிறார்கள். பம்பாய் சர்க்காரும் இந்திய சர்க்காருமாக ஆறு




1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பட்டுள்ள இடங்களைத் தவிர மற்ற இடங்களில் இன்று சர்க்கார் பஸ்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. மீதியுள்ள நாலு இடங்களிலும் இன்னும் இரண்டே வருஷங்களில் சர்க்கார் பஸ்கள் ஓடத் தொடங்கும்.

கோடி ரூபாய் மூலதனம் போட்டிருக்கிறார்கள். தனி நபர் ஒருவர்கூட அதன் பங்குதாரர் அல்ல. மேற்படி போக்குவரத்து கார்ப்பொரேஷனின் செலவுகள் எல்லாம், பம்பாய் சர்க்காருக்கோ இந்திய சர்க்காருக்கோ சிறிதும் பளுவின்றி முற்றிலும் வருமானத்தைக் கொண்டே ஈடு செய்யப்படுகின்றன.

6, 7, 8. இரு சர்க்கார்களும் போட்டுள்ள மூலதனத்துக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வட்டித் தொகை ஒழுங்காகக் கொடுக்கப்பட்டு வருகிறது. அதாவது மேற்படி கார்ப்பொரேஷனின் வருமானத்தைக் கொண்டு மூலதனத்துக்கு வட்டி, இன்ஷூரன்ஸ், தேய்மானச் செலவு முதலிய சகல செலவினங்களையும் ஈடு செய்து, லாபமும் கிடைக்கிறதெனில், பஸ் போக்குவரத்து நிர்வாகம் எவ்வளவு திறமையுடன் நடத்தப்பட்டு வருகிறது என்பதை உணர்ந்து கொள்ளலாம். கிடைக்கும் லாபத்தையும் நிர்வாகம் மேற்கொண்டு சிறப்பாக நடைபெறுவதற்காகவே செலவழிக்கிறார்கள்.

மேலே குறிப்பிட்ட செலவினங்கள் எல்லாம் போக மிகவும் அதிக லாபம் கிடைக்குமாயின், பிரயாணிகளுக்கு அதிகக் கட்டணம் விதிக் கிறார்கள் என்று ஏற்படும். ஆனால் ஒரு சிறந்த ஸ்தாபனம் எவ்வாறு நடைபெற வேண்டுமோ அவ்விதமே பம்பாய் பஸ் போக்குவரத்து ஸ்தா பனம் நடைபெறுகிறது. இந்த உண்மை புள்ளி விவரங்களை ஆதாரமாகக் கொண்டு நிர்ணயிக் கப்பட்டிருக்கிறது.

9 10. இந்த ஸ்தாபனத்தில் டிரைவர்கள், கண் டக்டர்கள், மெகானிக்குகள் முதலிய சகலரையும் சேர்த்து சுமார் 12,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். தனி நபர்களின் நிர்வாகத்தில் பஸ்கள் ஓடிக் கொண்டிருந்தபோது கனவிலும் நினைக்க முடியாத வசதிகளையும் சௌகரியங்களை யும் இப்போது இந்த 12,000 தொழிலாளர்களும் அடைந்து வருகிறார்கள்.

தனி நபர்களின் நிர்வாகத்தில் கொடுக்கப்படு வதைக் காட்டிலும் இந்தத் தொழிலாளர்களுக்கு அதிகச் சம்பளமும் பஞ்சப்படிகளும் கொடுக்கப் பட்டு வருகின்றன. எனினும் மனிதனுக்குக் கேவலம் சாப்பாடு மாத்திரம் போதுமா! வேலை செய்யும் இடத்தில் நாகரிகமாகவும் மனிதத் தன் மையுடனும் நடத்தப் பட வேண்டியது ஆயிரம் மடங்கு அதிக முக்கியம் அல்லவா!

தொழிலாளர்கள் தங்களுடைய தயவில் வாழ்வ தாக முதலாளிகள் நினைப்பதைத் தொழிலா ளர்கள் வெறுக்கிறார்கள். ஆனால் பம்பாய் சர்க் கார் பஸ் போக்கு வரத்து கார்ப்பொரேஷன் நிர்வாகிகள் தங்கள் கீழ் வேலை செய்யும் தொழிலா ளர்களை வெறும் சிப்பந்திகளாக மாத்திரம் கருத வில்லை; கடமையுணர்வுள்ள நாகரிக மனிதர் களாகக் கருதுகிறார்கள். மேற்படி ஸ்தாபனத் துக்கே தொழிலாளர்கள்தான் உயிர்நாடி என்று நினைக்கிறார்கள். ஸ்தாபன சிப்பந்தி நிலையங்களில் கண்டக்டர்களும் டிரைவர்களும் அந்த ஸ்தாப னத்தைச் சேர்ந்த சகல அதிகாரிகளுடனும் சரி சமானமாகப் பழகுவதை நேரில் பார்க்கலாம்.

பம்பாய் ஸ்தாபனத்தின் பிரதம நிர்வாக அதி காரி, கங்கலைக் காட்டிலும் தொழிலாளர்கள் தாழ்ந்தவர்கள் என்ற எண்ணத்தை வெறுப்பவர். அதனால்தான் அவர் "தொழிலாளர் க்ஷேம விடுதிகள்" என்ற பெயரைச் "சிப்பந்தி நிலை யங்கள்" என்று மாற்றிவிட்டார்.

தொழிலாளர்களின் குறைகளை அறிந்து பரிகாரம் செய்வதற்காகப் பல அதிகாரிகள் நிய மிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தொழிலாளர்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளவும் பொழுது போக்கவும் இப்போது சில பகுதிகளில் பல வசதிகளுடன் சிப்பந்தி நிலையங்கள் அமைக் கப் பட்டிருக்கின்றன. அவற்றில் விளையாடும் இடங்கள், ஹோட்டல், புத்தகசாலை, ரேடியோ முதலிய பல நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக் கின்றன. பம்பாய் மகாணத்தில் உள்ள எல் லாப் பகுதிகளிலும் அதே வசதிகளை அளிக்கத் திட்டம் போட்டிருக்கிறார்கள். தொழிலாளர்க ளுக்கு வசதியாகப் பந்தய விளையாட்டு கிளப்புகள் அமைப்பதற்குப் பம்பாய் சர்க்கார் பஸ் போக்கு வரத்து கார்ப்பரேஷன் நிர்வாகிகள் உதவித் தொகைகளும் கொடுத்து வருகிறார்கள்.

இவற்றைத் தவிர, கார்ப்பொரேஷன் போர் டார், தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற் காகப் பதினைந்து லட்சம் ரூபாய் அனுமதித்திருக் கிறார்கள். சமீபத்தில் பம்பாய் சர்க்கார் தொழில் மந்திரி புனாவில் தொழிலாளர் காலனி ஒயான் றுக்கு அஸ்திவாரக் கல் நாட்டினார். அங்கு தொழிலாளர்களுக்கு வசதியாக 2, 3, 4, 6 அறைகள் கொண்ட 159 வீடுகளை நாலு மாத காலத்துக்குள் நிர்மாணிக்கப் போகிறார்கள். அவைகளைக் கட்டி முடிக்க 15 32,181 ரூபாய் செலவாகும் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள். கடியாடியிலும் 17½ லட்சம் ரூபாய் செலவில் அவ் விதம் 230 வீடுகளை நிர்மாணிக்கும் திட்டம் ஆலோசனையில் இருந்து வருகிறது.

தாற்காலிகமாக நாசிக், புனா இந்த இரு பகுதி களிலும் தகுந்த டாக்டர்களைக் கொண்டு இலவச வைத்திய சாலைகளையும் ஆரம்பித்திருக்கிறார்கள். அதுபோல் கூடிய சீக்கிரம் மற்றப் பகுதிகளிலும் இலவச வைத்திய சாலைகளை ஆரம்பிக்க உத்தேசித் திருக்கிறார்கள். தொழிலாளர்களுக்கும் அவர்க ளுடைய குடும்பங்களுக்கும் இலவசமாக வைத்திய உதவி அளிப்பதே அந்த வைத்திய சாலைகளின் நோக்கமாகும்.

வேலை செய்யும்போது விபத்துக்கு உள்ளாகும் தொழிலாளர்களுக்கு இலவசமாக ஏ. டி. எஸ். ஊசி மருந்து குத்தவும் எல்லாப் பகுதிகளிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

1950 ஏப்ரல் மாதத்திலிருந்து பிராவி டண்ட் நிதித் திட்டமும் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. தொழி லாளருக்கு உதவியாக சிப்பந்தி உபகார நிதி என்றும் ஒரு திட்டம் ஆலோசனை யில் இருந்து வருகிறது.

சிற்சில பகுதிகளில் தொழிலாளர்க ளாலேயே நிர்வகிக்கப்படும் கூட்டுறவு சாண்டீன்கள் அமைக்கப்பட்டிருக்கின் றன. அந்தக் காண்டீன்களுக்கு கார்ப் பொரேஷன் நிர்வாகிகள் இலவசமாக இடங்கள் கொடுத்திருப்பதுடன் மற்ற வசதிகளும் அளித்து வருகிறார்கள்.

தொழிலாளர்கள் படிப்பதற்கு வகுப்பு களும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. நிபுணர்களைக் கொண்டு டிரைவர்களுக் கும், கண்டக்டர்களுக்கும் பயிற்சியளிக் கப்பட்டு வருகிறது. அது போலவே பஸ் தொழிற்சாலைகளில் நுணுக்கப் பயிற்சியும் அளித்து வருகிறார்கள்.




தார்டியோ பிரிவைச் சேர்ந்த பஸ் தொழிற்சாலை

சிப்பந்தி விடுதிகளில் நல்ல புத்தக சாலைகள் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. அங்கு செய்திப் பத்திரிகைகளும் வாங்கி வைக்கப் பட்டிருக்கின்றன.

வர்ணம் கொடுக்கும் தொழிலாளர்களுக்கு 'காஸ்' புகையினால் உடல் நலனுக்குப்பாதகம் ஏற்படாமல் இருப்பதற்காகத் தினசரி இலவசமாக அரைப் படியுண்டு பால் கொடுத்து வருகிறார்கள்.

தொழிலாளர்களுக்கு இலவச பாஸ்களும் குறைந்த கட்டணத்தில் டிக்கட்டுகளும் கொடுக்கப்படுகின்றன. அவர்களுக்குச் சாப்பிடுவதற்கு இடவசதி, குடி தண்ணீர் வசதி முதலியனவும் செய்து கொடுக்கப் பட்டிருக்கின்றன. தொழிலாளர்களுக்கு உதவியாகச் சில பகுதிகளில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. தினசரி தேவையான சாமான்களை லாபமின்றித் தொழிலாளர்களுக்கு அசல் விலைக்குக் கொடுப்பதற்காகப் புனேவில் நியாய விலைக் கடை ஒன்று திறக்கப்பட்டிருக்கிறது.



ஆசியாவிலேயே மிகப் பெரிதான பம்பாய் சர்க்கார் பஸ் போக்குவரத்து கார்ப்பொரேஷன் தொழிற்சாலை

கார்ப்பொரேஷன் ஸ்தாபனத்தின் தொழிற்சாலைகளிலேயே பஸ்களின் 'பாடி'களைத் தயாரிக்கிறார்கள். பஸ்களைப் புதுப்பிப்பது, பழுது பார்ப்பது முதலியனவும் அந்தத் தொழிற்சாலைகளிலேயே நடைபெறுகின்றன.

11. பம்பாய் சர்க்கார் பஸ் போக்குவரத்து கார்ப்பொரேஷன் பிரயாணிகளுக்கு வசதியளிக்க வேண்டிய அவசியத்தை மறந்து விடவில்லை. அவர்களுடைய வசதிக்காக 165 பஸ் ஸ்டேஷன்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அவ்விடங்களில் சுகாதார வசதிகள், சாப்பாட்டு வசதிகள் எல்லாம் இருக்கின்றன. சில ஸ்டேஷன்களில் பஸ்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கும் பிரயாணிகள் சிரம பரிகாரம் செய்து கொள்ளவும் வசதி செய்து கொடுக்கப் பட்டிருக்கிறது.

12. பஸ் கட்டணங்களை உயர்த்தாமலே மேலே கூறப்பட்ட சகல வசதிகளும் அளிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். பஸ் பாகங்களின் விலைகள், இறக்குமதி வரிகள், நிர்வாகச் செலவு முதலியன மிகவும் அதிகமாகியும்கூட கட்டணம் மாத்திரம் இன்னும் ஒரு மைலுக்கு ஒன்பது பைசா வீதமே இருந்து வருகிறது!

எனவே இது பம்பாய் பஸ் போக்குவரத்து கார்ப்பொரேஷனுக்கு ஒரு மகத்தான வெற்றி என்பதில் சந்தேகமில்லை.

மேலே கொடுக்கப்பட்டுள்ள உண்மையான விவரங்களும் புள்ளிகளும் பம்பாய் பஸ் போக்குவரத்துத் திட்டம் ஒரு மகத்தான பரிசோதனை என்பதையும், அது வெற்றிகரமாக நடந்து வருகிறது என்பதையும் விளக்குகின்றன. இத்தகைய நிர்வாகத்தைச் சர்க்கார் ஏற்றுக் கொண்டு திறமையாக நடத்துவதால் பொது ஜனங்களுக்கும் தொழிலாளர்களுக்கும் ஏற்படும் எண்ணிக்கையற்ற நன்மைகள் வெளியாகின்றன.

பொது ஜனங்களின் வசதிக்கு இன்றியமையாத இந்தத் திட்டம் யாதொரு குறையுமின்றி இன்னும் பரிபூரண வெற்றியுடன் நடைபெறுவதற்கு அவகாசம் வேண்டும், பொறுமை வேண்டும், பொது ஜனங்களின் ஒத்துழைப்பு வேண்டும்.

# மாலதியின் மனம்

சாடத்தில் உட்கார்ந்து ஆபீஸ் பைல்களைப் புரட்டிக்கொண்டிருந்தார் சங்கரய்யர். கீழே தரையில் உட்கார்ந்து விளையாடிக் கொண்டிருந்தனர் சுந்தரமும் மாலதியும். வாசலில் ஊதல் விற்பவன் ஊதிக் கொண்டே வந்து கொண்டிருந்தான். அதன் சத்தத்தைக் கேட்டதும் சுந்தரம் தன் தகப்பனிடம் ஓடி, "அப்பா! வாசலில் ஊதல் வந்திருக்கிறது. எனக்கு வாங்கித் தா, அப்பா!" என்று தொந்தரவு செய்தான்.

அதைப் பார்த்த மாலதி அவன் அருகில் வந்து, "ஏண்டா அப்பாவைத் தொந்தரவு பண்ணறே? அப்பா கிட்டேதான் பணமே இல்லையே?" என்றாள்.

"பார்த்தாயா, உன் தங்கையின் சமர்த்தை! அவன் ஊதல் வேண்டுமென்று உன்னைப் போல் அழுகிறாளா, பார்! நீ சுத்த அசடாயிருக்கிறாயே!" என்று கூறினார் அவர்.

சுந்தரம் வெகு நேரம் வாதாடினான். ஆனால் அவனுடைய எண்ணம் நிறைவேறவில்லை.

சிறிது நேரம் கழிந்தது. மாலதி தன் தந்தையின் பக்கத்தில் நெருங்கி வந்து, "அப்பா!" என்றாள்.

"என்ன மாலதி! என்ன வேண்டும்!" என்று கேட்டார் தந்தை.

"அப்பா! எனக்கு ஒரு பட்டுப் பாவாடை வாங்கித் தருகிறேன் என்று சொன்னாயே; அதை வாங்கித் தருகிறாயா, அப்பா!" என்று கொஞ்சும் குரலில் கேட்டாள் மாலதி. அதைக் கேட்ட சங்கரய்யர் அப்படியே ஸ்தம்பித்து விட்டார்.

—பி. என். மணி

## உயிரைக் காப்பாற்றிக்கொள்ள நல்ல வழி



அமெரிக்கன் மாடல் பிஸ்டல், லைசென்ஸ் அவசியமில்லை. டிராமா, சர்க்கஸ், பணத்தைக் காப்பாற்றிக் கொள்ள, உயிரைக் காப்பாற்றிக் கொள்ள இதற்கு மிஞ்சிய சிநேகிதனில்லை. சுட்டபொழுது நிஜமான பிஸ்டல் மாதிரி பயங்கரமான சப்தம் உண்டாகி நெருப்பு ரவைகள் வெளிவரும். விலை 8-8-0 போஸ்டேஜ் 1-8-0 தனி. தோல் பெட்டி 2-8-0. பிஸ்டலுடன் 25 குண்டுகள் இலவசம். தனியாக தோட்டாக்கள் வேண்டுமானால் 1 டஜன் 1-8-0.

## புது தினுசு அமெரிக்க ஸ்பிரிட் ஸ்டவ்



சிற்றுண்டி, தேனீர், வென்னீர் முதலியவை தயாரித்துக் கொள்ள மிகவும் உபயோகமானது. இந்த ஸ்டவ்விற்கு கொஞ்சம் ஸ்பிரிட் செலவு, ஸ்டாக் கொஞ்சமே கைவசமிருக்கிறது. விலை ரூ. 4-8-0. வி. பி. பி. யில் அனுப்ப கட்டணம் தனி ரூ. 1-8-0.

ஆங்கிலத்திலேயே கடிதங்களை எழுதவும்:

**SANSAR TRADING CO. (SPK)**
**Kanwariganj. ALIGARH. U. P. (India)**

## கொசு வலை

கொசுக்கடியின் உபத்திரவத்திலிருந்து எங்களது உயர்ந்த ரக வலையினால் காப்பாற்றிக் கொள்ளுங்கள். வெளியிடங்களில் ரூ. 15க்கு கூட கிடைப்பது கஷ்டம். விலை ரூ. 7-8-0. வி. பி. பி. சார்ஜ ரூ. 1-8-0 தனி.

## 14 பாஷைகள் 48 மணி நேரத்தில்

ஆங்கிலம், ஹிந்தி, மராத்தி, குஜராத்தி, பர்மீஸ், தமிழ் முதலிய பாஷைகளை 48 மணி நேரத்தில் கற்கலாம். விலை ரூ. 5. வி. பி. பி. சார்ஜ் அணா 12.

## எலக்ட்ரிக், ரேடியோ கைட்

மின்சார சக்தியின்றி இயக்கக் கூடிய ரேடியோவை ரூ. 15 செலவிலேயே தயாரியுங்கள். ரேடியோ ரிப்பேர், எலக்ட்ரிக் வயரிங் முதலியவைகளைக் கற்றுக்கொண்டு மாதம் ரூ. 200 சம்பாதியுங்கள். விலை ரூ. 4-4-0. வி. பி. பி. சார்ஜ்அணா 12 தனி.

## தொழில் புஸ்தகங்கள்

சோப் தயாரிக்கும் முறை ரூ. 3. வாசனை திரவியங்களுக்கானது ரூ. 3. தையல், கட்டிங் முறை ரூ. 3-8-0. போட்டோகிராபிக் ஆசான் ரூ. 3. டிராயிங், பெயிண்டிங் ரூ. 4. ரப்பர் தொழில் ரூ. 3. வி. பி. பி. சார்ஜ் தனி.

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுத வேண்டும்

**SUPREME TRADERS (K. L)**
**RANGMAHAL. ALIGARH. U. P.**

# ஆஸ்துமா சளி ஒரே நாளில் முற்றிலும் அகற்றப்பட்டது

மெண்டாகோ கண்டு பிடித்தது முதல் மூச்சுத் திணறல், சுவாஸ இழுப்பு, ஆஸ்துமாவினால் யாரும் அவதியுற வேண்டாம். மெண்டாகோ உபயோகித்தால் இன்ஜக்ஷனும் கெடுதலான புகையும் வேண்டாம். ருசியற்ற இரு மெண்டாகோ மாத்திரைகளை ஆகாரத்துடன் சாப்பிட்ட 10 நிமிஷத்தில் உடலிலுள்ள சளி உடனேயே கரைகிறது. சுலபமாக மூச்சு விடலாம். நரம்புகளுக்கு விச்ராந்தி, சுவாஸப் பைக்கு நன்மை, விருவிருப்பு ஏற்படும்.

### சிசுவைப் போல் அயர்ந்த நித்திரை

ஆஸ்துமாவினால் அவதியுற்ற ஆயிரக்கணக்கானவர்கள் மெண்டாகோ உட்கொண்டு முதல் நாள் இரவே ஆழ்ந்த நித்திரை செய்து சுகமடைந்தனர். நீட ஆரோக்யமும் 5 முதல் 10 வருஷம் இளமையடைந்ததாகவும் உணர்ந்தனர். காரணம் ஆஸ்துமாவினால் ஏற்படும் இடையூறுகளை மெண்டாகோ இயற்கையில் தவிர்க்கிறது. (1) சளி, கோழையை இளக்குகிறது. (2) சுவாச மார்க்கத்திலுள்ள சிறு தசைகளுக்குப் பலம் அளிக்கிறது. (4) தேகத்திற்கு விருவிருப்புடன் ரத்த புஷ்டியையும் அளிக்கிறது.

### ஐந்து வருஷமாக ஆஸ்துமா இல்லை

சுலபமாக சுவாசித்து நல்ல நித்திரையை அளிக்கிறது. மீண்டும் ஆஸ்துமா அண்டாது பண்படுத்துகிறது. மிஸ்டர் ஜே. ஆர். எழுதுகிறார்: "ஆஸ்துமாவினால் என் உயிரே போய் எடையில் 40 பவுண்டும் குறைந்து விட்டது. இழுப்பு, இருமல், மாரடைப்பினால் தூக்கமே இல்லை. சாவைத்தான் எதிர்பார்த்தேன். மெண்டாகோ முதல் இரவிலேயே எனக்கிருந்த பிடிப்பை விடுவித்தது. கடந்த இரண்டு வருஷங்களாக ஆஸ்துமாவே இல்லை." மிஸஸ். ஏ. டபிள்யூ எழுதுகிறார்: "கடந்த 25 வருஷமாக எனக்கு ஆஸ்துமா உண்டு. மெண்டாகோ உபயோகித்ததிலிருந்து இரவில் நல்ல தூக்கம். மீண்டும் ஆஸ்துமாவே இல்லை." மிஸஸ். ஜி. ஈ. வி எழுதுகிறார்: "மெண்டாகோ பற்றி கேள்விப்பட்ட நன்னாளை வாழ்த்துகிறேன். கடந்த 35 வருஷங்களாக இராத் தூக்கமறியாத என்போன்ற ஏழைகளுக்கு ஆண்டவன் அளித்த அமிர்தம் மெண்டாகோ. தூக்கமின்றி ஆஸ்துமாவால் உருகியே போனேன். அக்கஷ்டங்களை இப்போது மறந்துவிட வேண்டும் என உணருகிறேன்."

### கைமேல் காணும் பலன்

மெண்டாகோ முதல் வேளை சாப்பிட்டதுமே ரத்தத்துடன் கலந்து ஆஸ்துமாவை ஒழிக்கிறது. மெண்டாகோ யௌவன உணர்ச்சி, பலம் இவற்றை விரைவில் அளிக்கிறது. வாபஸ் உத்திரவாதத்தில் மெண்டாகோ உபயோகித்து தீர்ப்பளியுங்கள். சாப்பிட்ட பின் பூரண குணம் பெற்ற திருப்தியளிக்காவிடில் காலிப் பெட்டியை அனுப்பினால் முழுத் தொகையும் வாபஸ் செய்யப்படும். இன்றே மருந்து வியாபாரியிடமிருந்து மெண்டாகோ வாங்குங்கள். இன்றிரவு எப்படித் தூங்குகிறீர்கள். மறு நாள் காலை எவ்விதத் தெம்புணர்ச்சி ஏற்படுகிறதெனப் பாருங்கள். உத்தரவாதம் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது.

**Mendaco**
மெண்டாகோ

★ ஆஸ்துமா ★ மார்ச்சளி நோய் ★ ஹே ஜுரம் இவற்றை அறவே அகற்றுகின்றது




## 2. 'என்ன துணிச்சல்......?'

டாக்டர் பரசுராம் தன்னை ஒரு விதமாகச் சமாளித்துக் கொண்டு வெறுப்போடு மரகதத்தின் முகத்தைப் பார்த்தார். அவளுக்கு அந்தச் சமயத்தில் எப்படிப் பதில் சொல்ல முடியுமென்று அவருக்கு நன்கு தெரியும். ஆனால் எதையும் படபடப்போடு செய்துவிடும் சுபாவம் உள்ளவரல்ல அவர். அந்த இடமும் சூழ்நிலையும் அவரைச் சிறிது பின் வாங்கச் செய்தன. சட்டென்று அவர் தன் முகக்குறியை மாற்றிக் கொண்டு தணிவான குரலில், "அம்மணி! என்னை மன்னிக்கணும். இந்தப் பெண்ணுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில்தான் இதைச் செய்தேனே தவிர வேறு எவ்விதமான கெட்ட அபிப்பிராயமும் இல்லை" என்றார்.

"இப்படிப்பட்ட உதவியை உங்களிடமிருந்து நாங்கள் எதிர்பார்க்கவில்லையே! நீங்கள் செய்யக்கூடிய உதவியெல்லாம் முடிந்து விட்டது" என்று கோபத்தோடு பளிச்சென்று சொல்லி விட்டு, வேதாவைப் பார்த்து, "அழாதே! வீணாக அழுவதில் என்ன பயன்! துக்கத்தை அடக்கிக்கொண்டு போவதுதான் நல்லது. போ, செங்கம்மாவுடன் உன்னுடைய அறைக்குப் போ" என்றாள். அவளுடைய குரல் அடங்கியதாய் இருந்தாலும் அதில் அனுதாபத்தின் குறியே இல்லை.

வேதா செங்கம்மாவுடன் நடந்தாள். அவர்கள் அந்த அறையைத் தாண்டி இருளில் சென்று மறையும் வரையில் பார்த்துக் கொண்டிருந்து விட்டு மரகதம் டாக்டரை ஒரு தடவை ஏறிட்டுப் பார்த்தாள். "ஊாம்! உங்கள் வேலை முடிந்து விட்டது. நீங்கள் போகவேண்டியதுதான். ஆனால் மணி பதினொன்றுக்கு மேலாகி விட்டது. இந்த இரவில் நீங்கள் எப்படிப் போக முடியும்! இப்பொழுது வண்டி வசதியும் கிடையாது......" என்றாள்.

"ஆம்! அதைத்தான் நானும் யோசிக்கிறேன்" என்றார் டாக்டர் மெதுவான குரலில்.

அன்று சாயந்திரம் நந்தி துர்க்கத்திலிருந்து செங்கம்மா, அவரை ஒரு வண்டியில்தான் அழைத்து வந்தாள். அந்தப் பாதை காட்டுப் பாதை. வண்டியில் போவதாய் இருந்தால்கூட இரவு வேளையில் அந்தப் பாதையில் பிரயாணம் செய்ய யாரும் விரும்ப மாட்டார்கள்.

மரகதம் அவரிடம் சிறிது இரக்கம் காட்டுகிறவள் போல், "பாவம்! எங்களுக்காக உங்களுக்கு இவ்வளவு சிரமம். நீங்கள் இரவு இங்கு தங்குவதாய் இருந்தால் விடியற் காலையில் உங்களுக்காக வண்டி தயார்செய்து அனுப்பச் சொல்கிறேன்......" என்றாள்.

"அப்படிச் செய்வதுதான் உசிதம். வேறு வழி!" என்றார் டாக்டர். இரவு வேளையில் அந்த வீட்டில் தங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது டாக்டருக்குச் சிறிது உற்சாகத்தையும் ஆவலையும் கொடுத்தது. இரவு அங்கு தங்குவதனால் அந்த வீட்டைப் பற்றிய ரகசியம் ஏதேனும் புலனாகலாமல்லவா! அவர் தன் மனதிலிருந்த ஆவலைக் காட்டிக் கொள்ளாமலேயே இரவில் அந்த வீட்டில் தங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதற்காகச் சங்கடப் படுகிறவர் போல் முகத்தை வைத்துக் கொண்டார்.

மரகதம், "என்னோடு வாருங்கள்" என்று சொல்லி அவரை அழைத்துக்கொண்டு நடந்தாள். டாக்டர் தன் கைப்பெட்டியை எடுத்துக்கொண்டு அவளைப் பின் தொடர்ந்தார். அந்த இரவில் அந்தக் கட்டிடத்தில் அவர் மரகதத்தைப் பின் தொடர்ந்து நடந்தாரே தவிர எந்த இடமும் அவருக்குத் தெளிவாகப் புலப்படவில்லை. கடைசியில் அவர்கள் ஒரு அறைக்கு வந்து சேர்ந்தனர். அந்த அறையில் மங்கலாக ஒரு சிம்னி விளக்கு எரிந்து கொண்டிருந்தது. ஒரு கட்டில், மேஜை, நாற்காலி இவைகள்தான் இருந்தன. காற்று வசதிக்காக ஒரு ஜன்னல் இருந்தது. "நீங்கள் இந்த அறையில் இருக்கலாம். பாவம்! நீங்கள் ஒன்றுமே சாப்பிடவில்லை. செங்கம்மாவை விட்டுக் கொஞ்சம் காப்பி, பால் ஏதாவது கொண்டுவந்து தரச் சொல்லட்டுமா......!" என்றாள்.

டாக்டருக்கு அப்பொழுது அந்த நிலைமையில் பசியே இல்லை. எதுவும் சாப்பிடவும் பிடிக்கவில்லை. "வேண்டாம், எனக்கொன்றும் வேண்டாம். நான் இப்படியே படுத்துக்கொள்ளுகிறேன். நீங்கள் விடியற்காலையில் நான் கிளம்ப வேண்டியதற்கு வண்டி வசதி செய்து கொடுத்தால் போதும்" என்றார்.

"சரி! உங்களுக்கு இந்த இடம் சௌகரியமாக இருக்குமென்று நினைக்கிறேன். நான் காலையில் உங்கள் பிரயாணத்திற்கு வேண்டிய வசதிகளையெல்லாம் கவனிக்கிறேன்" என்று சொல்லி விட்டுப் போனாள் மரகதம்.

டாக்டர் அறைக் கதவைச் சாத்தி விட்டு வந்து தன் மேல் அங்கியையும் பாதரக்ஷையையும் கழற்றி ஒரு புறமாக வைத்துவிட்டு, அப்படியும் இப்படியுமாக உலாவிய வண்ணம் யோசிக்கலானார்.

அவருடைய வாழ்நாளில் அன்றைய தின நிகழ்ச்சி மிக விநோதமாயிருந்தது. எல்லாம் கனவுலகில் நடப்பது போல் தானிருந்தது. அந்தக் கட்டிடம் அதில் வசிக்கும் பெண்களின் மர்மம் எதுவும் அவருக்கு எளிதில் புலனாவதாக இல்லை. இறந்து போன சாரதா யார்! மரகதத்தின் அக்காவா, தங்கையா! வேதா சாரதாவின் பெண்தானா! அல்லது இவர்களுக்கு வேறு ஏதேனும் சம்பந்தம் இருக்குமா! அந்த ஸ்திரீகள் தங்கள் வாழ்வைத் தாங்களே குலைத்துக் கொண்டு வேதாவின் வாழ்வையும் குலைக்க எண்ணினர் என்பது மாத்திரம் தெளிவாக அவருக்கு விளங்கியது. ஆனால் அது ஏன், எதற்காக என்பது மாத்திரம் அவருக்கு விளங்கவில்லை. இளம் பிராயமுள்ள ஒரு அழகிய பெண்ணைச் சிறை வைப்பது போல மனித பழக்க வழக்கங்களையே ஆயுள் உள்ளளவும் அறந்து கொள்ள முடியாதபடி கோட்டை போன்ற ஒரு தனிமையான, பயங்கரமான வீட்டில் அடைத்து வைத்திருப்பது எவ்வளவு மதியீனம்! எவ்வளவு கொடுமை! பெண்களுக்கு இளகிய நெஞ்சம் என்பார்களே! இங்குள்ளவர்களும் பெண்கள் தானே! இல்லை, ராட்சதப் பிறவிகளா!

அன்று சாரதா மரணப் படுக்கையிலிருந்த போது சொல்லிய வார்த்தைகளெல்லாம் அவர் நினைவுக்கு வந்தது. வாழ்க்கையில் புத்தியற்ற தன்மையோடு தான் செய்து விட்ட பெரிய பிழையைச் சாவுப் பாதையில் அவள் நடக்கும் தருணத்தில்தான் உணர்ந்ததாக அவள் கூறிய வார்த்தைகளிலிருந்து தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிந்தது. சாரதா நல்ல நிலையில் இருந்த போது அவளும் மரகதத்தைப் போல் அழுத்தமான நெஞ்சம் படைத்தவளாகத் தான் இருந்திருக்க வேண்டும் என்பதை டாக்டர் உணர்ந்து கொண்டார். அவள் தன்னுடைய தவறை உணர்ந்து கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டாலும் அது அவளுடைய கடைசி மூச்சு நிற்கக் கூடிய விநாடியாகப் போய்விட்டது. அவள் இறந்து விட்டாள். ஆனால் மரகதம் அதை உணர்ந்து கொண்டாளா! தன்னுடைய முறை தவறானது என்பதை மரகதம் உணர்ந்ததாகத் தெரியவில்லையே! சாரதாவின் கடைசி வேண்டுகோளுக்கு அவள் மனது இளகியதாகத் தெரியவில்லையே! எது எப்படியோ! இப்படி இரண்டு ஸ்திரீகள் தங்கள் வாழ்க்கையைத் தாங்களே இருட்டடிப்புச் செய்து கொண்டதற்கும் இளம் பருவமுள்ள ஒரு பெண்ணின் வாழ்வைக் குலைக்க முனைந்ததற்கும் ஏதோ ஒரு காரணம் இருக்கத் தானே வேண்டும்! அந்தக் காரணம் என்னவென்று கண்டுபிடிக்க வேண்டுமென்பது தான் டாக்டர் பரசுராமனின் விருப்பம்.

அவர் தன் கைக் கடிகாரத்தைப் பார்த்தார். மணி ஒன்று! இரவு ஒரு மணி வரையில் அவர் என்றுமே கண் விழித்திருந்ததில்லை. தூங்குவதற்குப் பிரயத்தனம் செய்வதாய் இருந்தாலும் அந்த இடம் அவருக்கு வசதியானதாகப் படவில்லை. நாற்காலியில் அமர்ந்த வண்ணமே யோசிக்கலானார். எங்கும் ஒரே நிசப்தமாக இருந்தது. மரகதம், வேலைக்காரி, வேதா எல்லோரும் ஆழ்ந்த நித்திரையிலிருப்பார்கள். ஏன் நாம் இப்பொழுது இந்த வீட்டைச் சுற்றிச் சோதனை போடக்கூடாது என்று அவருக்குத் தோன்றியது. மெதுவாக எழுந்து அறைக் கதவைத் திறந்து வெளியே பார்த்தார். எங்கும் ஒரே இருள் மயமாக இருந்ததே தவிர ஒன்றும் தெளிவாக விளங்கவில்லை. சிறிது வெளிச்சத்தோடு போனால்தான் ஒவ்வொரு இடமும் தெளிவாகப் புலனாகும் என்று அவருக்குத் தோன்றியதால் அந்த அறையிலிருந்த கைச்சிம்னியை எடுத்துக் கொண்டு பூனை போல் அடிமேல் அடியாக வைத்து வெளியே வந்தார்.

அது ஒரு புராதன கட்டிடம் என்பதை அவர் வரும்போதே தெரிந்து கொண்டு விட்டார். அவர் அந்தக் கட்டிடத்திற்கு உள்ளே வந்து பார்த்ததும் தான் அந்தக் கட்டிடம் எவ்வளவு பழமையானது என்று தெளிவாக விளங்கியது. அந்தக் கட்டிடத்தின் வளைவுத் திருப்பங்கள், சுவர், ஜன்னல், மாடிப்படி, கதவு எல்லாம் அவருக்கு ஏதோ ஒரு புராதனமான கோட்டையைத் தான் நினைவுக்குக் கொண்டு வந்தன. சுற்றிலும் மனித வாசனையே இல்லாத இந்தத் தனித்த இடத்தில், இந்தப் பயங்கரமான பெரிய கட்டிடத்தில், இந்தப் பெண்கள் ஆண்களின் துணையின்றிப் பேய்களின் துணிச்சலோடு தான் உலாவி வந்திருக்க வேண்டுமென்று அவருக்குப் பட்டது.

அவர் கையிலிருந்த விளக்கின் மங்கலான ஒளி அதிக தூரம் பரவி ஒவ்வொரு பொருளையும் தெளிவாகக் காட்டுவதாய் இல்லை. இருந்தாலும் அது அவருக்கு வழி தெரிந்து நடக்கவும், எதிரில் என்ன இருக்கிறதென்று தெரிந்து கொள்ளவும் போதுமானதாய் இருந்தது. அவர் பூனை போல் அடிமேல் அடியாக எடுத்து வைத்து அந்தச் சிறிய வெளிச்சத்தில் கண்ணில் படுகிறவைகளையெல்லாம் கூர்ந்து கவனித்து வந்தார். அவர் அறையை



அடுத்தாற் போல் வரிசையாகப் பல அறைகள் இருந்தன. அவைகளில் சில பூட்டப்பட்டு இருந்தன. சில திறந்திருந்தாலும் அவைகளில் விசேஷமாக ஒன்றுமில்லை. நாற்காலி மேஜை போன்ற பலவிதமான தட்டு முட்டுச் சாமான்கள் தான் கிடந்தன. அவர் மாடியிலுள்ள மேல் வராந்தாவைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வரும்போது யாரோ எங்கிருந்தோ விசித்து விசித்து அழும் சப்தம் கேட்டது. அவர் அதைக் கேட்டுத் திடுக்கிட்டு நின்று அந்தச் சப்தம் எங்கிருந்து வருகிறது என்பதை ஊன்றிக் கவனித்தார். அவருக்குத் தெளிவாக ஒன்றும் தெரியவில்லை. அது மரகதத்தின் குரலாகவோ வேலைக்காரி செங்கம்மாவின் குரலாகவோ இல்லை. அது வேதா விசித்தழும் குரல்தான் என்று அவருக்குத் தெளிவாக விளங்கியது. ஏனென்றால் சில மணி நேரங்களுக்கு முன்னால் சாரதா இறந்த பொழுது அவள் விசித்து விசித்து அழுதது அவர் நெஞ்சில் ஒலிப்பதிவு செய்தது போல் பதிந்திருக்கிறதல்லவா! அவள் எங்கே இருக்கிறாள்! அவளைப் பார்க்க வேண்டுமென்று அப்பொழுது அவர் நெஞ்சம் துடித்தது. சிறிது நேரம் நின்று சப்தம் வரும் திசையைக் கண்டு பிடிக்க முயற்சித்தார். அவருக்குப் புலனாகி விட்டது. ஊன்றிக் கவனித்ததில் அவருக்கு வலது கைப் புறத்தில் சிறிது தூரத்திலிருந்து தான் அந்தச் சப்தம் வந்து கொண்டிருந்தது. மெதுவாக அங்கு சென்று விளக்கைத் தூக்கிப் பிடித்துப் பார்த்தார். அது ஒரு அறை! அந்த அறைக்குள்ளிருந்து தான் அந்தப் பொருமலின் சத்தம் வருகிறது என்று நிச்சயமாகத் தெரிந்து விட்டது. அந்த அறைக் கதவைத் தொட்டுத் தள்ளினார். அது தானாகவே திறந்து கொண்டது. அந்த அறையிலும் ஒரு சிறிய விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவர் தன் பதட்டத்தை அடக்கிக் கொண்டு மெதுவாக வாசற்படியைத் தாண்டி உள்ளே சென்றார். அறைக்கு நடுவே போய் நின்று நான்கு புறமும் ஒரு தடவை பார்த்தார். ஜன்னலுக்குச் சமீபமாகப் போடப்பட்டிருந்த கட்டிலில் படுத்துத் தன் தலையைத் தலையணையில் புதைத்த வண்ணம் வேதா விசித்து விசித்து அழுது கொண்டிருந்தாள். அப்பொழுது அவருக்கு அவளுடைய முதுகுப் புறம்தான் தெரிந்ததே தவிர முகம் தெரியவில்லை. அவள் உடுத்தியிருந்த புடவையிலிருந்தும் பிசிரம் பிசிரமாகச் சுருண்டு விழுந்திருக்கும் நீண்ட கரிய கூந்தலிலிருந்தும் அவள் வேதா தான் என்பதை எளிதாக உணர்ந்து கொண்டார்.

அவர் சிறிது நேரம் யோசித்தார். தயங்கினார். அவர் அறிவு அவருக்கு விளக்கம் காட்டியது. அந்த நிசி வேளையில் அவர் அங்கு வந்தது தவறு. ஒழுங்கு முறைக்குப் புறம்பானது. இது நம்முடைய வேலையல்ல என்று அவர் நெஞ்சமே அவருக்கு இடித்துக் காட்டியது. பருவ வயதையடைந்த ஒரு பெண் தனிமையில் இருக்கும் ஒரு அறையில் நடுநிசி வேளையில் திருடனைப் போல் நுழைவது வெட்கக் கேடான காரியமாகவும் கண்யக் குறைவான காரியமாகவும் அவருக்குப் பட்டது. அவர் வந்தது போலவே அந்த இடத்தை விட்டுத் திரும்பிப் போய்விட நினைத்தார். அந்தச் சமயத்தில் மரகதமோ அல்லது வேலைக்காரியோ வந்து பார்த்துவிட்டால் என்ன நேரும்! அவர் திரும்பிப் போய் விடுவதுதான் உசிதம் என்று முடிவு கட்டிய நேரத்தில் வேதா சட்டென்று திரும்பிப் பார்த்தாள். கையில் விளக்குடன் அறையில் டாக்டர் நிற்பதைக் கண்டதும் அவள் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்து மிரள மிரள விழித்தாள். அவளுடைய கண்களில் பயமும் எல்லையற்ற பீதியும் கலந்திருந்தன.



''என்னை மன்னித்துவிடு, வேதா! என்னால் உனக்கு எந்தவிதமான ஆபத்தும் நேராது. ஏதோ ஒருவிதமான சத்தம் வந்ததைக் கேட்டேன். நான் இன்று இரவு முழுவதும் இங்கே தங்கி இருக்கும்படி நேர்ந்து விட்டது......'' என்றார் தயக்கத்தோடும் தாழ்வோடும்.

அவள் அவருக்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை. அசையாமல் அவரைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தாள். அந்தப் பார்வையில் துக்கமும் பயமும் சூழ்ந்திருந்தாலும் ஒரு ஆவல் கலந்திருந்தது.

''நான் இதோ போய் விடுகிறேன். ஆனால் அதிகமாகத் துக்கப்படுவதினால் எவ்வித பலனுமில்லை. இறந்து போனவள் உன் உன் தாயார்தானே......!'' என்றார்.

அவளுடைய அழகிய அதரம் அசைந்தது. ''அவள் என் தாயாரில்லை. என் சித்தி. என் தாயையே நான் பார்த்ததில்லை. சித்தி ரொம்ப நல்லவள். எனக்கு அவள் இருந்த வரையில் ஆறுதலாய் இருந்தது. இனிமேல் அவளைப்போல் என்னிடம் அன்பாக நடக்கக் கூடியவர்கள்

யாரென்றுதான் தெரியவில்லை......'' என்றாள் வேதா, தன் நெஞ்சிலுள்ள துக்கம் தாங்காமல் நெகிழ்ந்த குரலில்.

டாக்டர் சிறிது தயங்கி நின்றபடி, ''மரகதம் உனக்கு என்ன வேண்டும்?'' என்றார்.

''அவள் என் பெரிய தாயார். மிகவும் கண்டிப்பானவள். பொல்லாதவள்......'' என்றாள்.

மரகதம் பொல்லாதவள், கண்டிப்பானவள் என்பதை டாக்டர் அவளைப் பார்த்ததிலிருந்தே தெரிந்து கொண்டிருந்தார். டாக்டர் பரசுராமனுக்கு வேதாவின் அடக்கமான குரலையும் ஆவலுள்ள கண் பார்வையையும் பார்த்தவுடன் அங்கு சிறிது நேரம் தாமதிக்கலாம் என்ற துணிவு ஏற்பட்டது. அவர் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு, ''ஹூம்! இதற்காக நீ அதிகமாகத் துக்கப் படாதே! உன் சித்தி இறந்தது உனக்குப் பெரிய துக்கந்தான். ஆனால் சாவு எப்பொழுதுமே கொடியது அல்ல. சில சமயத்தில் சிலருக்கு வாழ்வதை விடச் சாவதே மேலானதாகப் போய் விடுகிறது. உன் சித்தி சாரதாவுக்கு உன்மீது உள்ள அன்பையும் பாசத்தையும் நான் தெரிந்து கொண்டேன். பயப்படாதே. நீ சந்தோஷத்தோடு நன்றாக வாழவேண்டுமென்று அவள் விரும்பியதை உன் பெரியம்மாவால் செய்ய முடியா விட்டாலும் கடவுள் அதற்கு ஒரு வழி காட்டுவார்'' என்று சொல்லிக்கொண்டே கட்டிலில் அவள் பக்கத்தில் போய் அமர்ந்து மெதுவாக அவள் கரத்தை எடுத்துத் தன் கரத்தோடு பொருத்திக் கொண்டார். அவள் வெட்கத்தால் தலை குனிந்து உட்கார்ந்திருந்தாள். அவளுடைய அழகான கண்களில் துக்கம் சிறிது மறைந்திருந்தாலும் பயமோ வியப்போ என்று சொல்ல முடியாத நிலையிலிருந்தது கண்களில் மிதந்த உணர்ச்சி. அவளுடைய அழகான முகம் மங்கலான ஒளியில் பாதி கலைந்த இருளிடையே நான்கு புறமும் மேகத்தால் சூழப்பட்ட முழு நிலவு போலிருந்தது. டாக்டரின் நேர்மையான உள்ளத்திற்கு அப்பொழுது அந்தப் பெண்ணை நெருங்கித் தொடுவது தவறானதாகப் படவில்லையோ அல்லது அப்பொழுது அவர் தன் சுய உணர்வையே பறிகொடுத்து விட்டாரோ, தெரியாது. அந்தப் பயங்கரமான, இருண்ட தனித்த வீட்டில் சிறை வைக்கப்பட்டிருக்கும் இளமையும் அழகும், பேதமையும் நிறைந்த ஒரு பெண்ணின் பெரிய துக்கத்திற்கு ஒருவர்கூட இல்லாதபோது அவர் இருந்தது அவருக்கே ஒரு மனத்திருப்தியாக இருந்தது. ''வேதா! உன்னை எனக்குத் தெரியாது. நீ யாரோ, நான் யாரோ! நான் இன்று இரவுதான் முதன் முதலாக உன்னைப் பார்த்தேன். இதிலிருந்து தெரிந்து கொள். நான் உன் உயிராகி விட்டேன். நீ எனக்கு உயிராகி விட்டாய். என்னைவிட உயர்ந்தவர்கள் உனக்கு உலகத்தில் ஒருவரும் இல்லை என்பதை நீ தாராளமாக நம்பலாம். நான் எல்லா வகையிலும் உனக்கு உதவி செய்யத் தயாராய் இருக்கிறேன். உனக்கு உதவி செய்வதைவிட இந்த உலகத்தில் எனக்கு இன்பமான காரியமில்லை'' என்றார் ஆர்வமும் அன்பும் நிறைந்த குரலில். வெட்கத்தினால் குனிந்திருந்த அவள் முகத்தைத் தொட்டு நிமிர்த்தி ஆவலோடு அவள் முகத்தைப் பார்த்தார். அந்த வார்த்தைகள் அப்பழுக்கற்ற உள்ளத்திலிருந்து வெளிவந்தவை என்பதும் அவர் அவளிடம் அடக்க முடியாத காதல் கொண்டிருக்கிறார் என்பதும், ஆர்வத்தோடு அவர் அவளைப் பார்க்கும் பார்வையிலிருந்தும், உணர்ச்சி நிறைந்த வார்த்தைகளிலிருந்தும் நன்கு தெரிந்தன.

அவள் மிகவும் பரிதாபத்தோடும் அன்போடும் அவரைப் பார்த்தாள். ஆனால் கணநேரத்தில் அவளுடைய கண்களில் அளவற்ற பீதியும் பயமும் நிறைந்தன.

அவள் அவருடைய பிடியிலிருந்து மெதுவாகத் தன் கைகளை விடுவித்துக் கொண்டாள். ''நீங்கள் போய் விடுங்கள். பெரியம்மா மிகவும் கோபக்காரி. அவளுக்கு இதெல்லாம் பிடிக்காது. நான் உங்களோடு பேசுவது அவளுக்குத் தெரிந்தால் என்னைச் சரியானபடி தண்டிக்காமல் விடமாட்டாள்......'' என்றாள் நடுங்கும் குரலில்.

டாக்டர் மெதுவாகச் சிரித்துக் கொண்டே அவள் கையை மறுபடியும் எடுத்துத் தன் கையோடு பொருத்திக் கொண்டு ''ஏன் அவள் அப்படியெல்லாம் செய்கிறாள்......?'' என்றார்.

''அவள் அப்படித்தான் செய்வாள். ஆமாம்! எனக்குத் தெரியும். அவள் அப்படித்தான் செய்வாள். நீங்கள் தயவுசெய்து உடனே போய் விடுங்கள்'' என்று சொல்லி மெதுவாக அவருடைய தோளைப் பிடித்துத் தள்ளினாள்.

இதே சமயத்தில் படாரென்று கதவு திறக்கும் சப்தம் கேட்டது. டாக்டர் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தார். ''ஹா! இதென்ன துணிச்சல்—'' என்ற மரகதத்தின் இடிபோன்ற குரல் டாக்டரை நடுங்க வைத்தது. அவர் வேதாவின் தோள்மீது வைத்திருந்த கையை மெதுவாக எடுத்து விட்டுக் கட்டிலிலிருந்து எழுந்து நின்றார்.

மரகதம் கையில் ஒரு விளக்குடன் நின்று கொண்டிருந்தாள். அவள் முகத்திலும் கண்களிலும் கோபம் தீயைப் போல் கொழுந்து விட்டெரிந்தது. அவளுக்குப் பின்னால் வேலைக்காரி செங்கம்மா கையில் ஒரு நீண்ட தடியுடன் நின்று கொண்டிருந்தாள். (தொடரும்)



எஜமான்:—என் பணப்பெட்டியை நீ ஏன் திறந்தாய்?

வேலைக்காரன்:—நான் திறக்கவே இல்லை, எஜமான்!

எஜமான்:—சத்தியமாகச் சொல்வாயா, திறக்கவில்லை என்பதை?

வேலைக்காரன்:—சத்தியமாகச் சொல்லுகிறேன். இந்தச் சாவி அதற்குப் பிடிக்கவே இல்லை!

# அழகு ராஜா

அனந்தன்

அந்த அழகன் செவந்திநாதன் ஒரு அலங்காரப் பிரியன். கண்ணாடியில் அடிக்கொருதரம் தன்னைப் பார்த்துக் கொண்டு 'மேக்கப்' செய்து கொள்வதில் (பெண்களைப் போல) அதிக சிரத்தை காட்டுபவன்.

செவந்திநாதனின் அழகைக் காணும்போதெல்லாம் நான் பெருமூச்சு விடுவேன்; அவனைப்போல் அழகாக நான் இல்லையே என்ற ஏக்கத்தால் அல்ல; அவன் அழகாக இருக்கிறானே என்ற பொறாமையாலும் அல்ல; அவன் அழகு அவனிடம் நிரந்தரமாக இருக்க வேண்டுமே என்பதால்தான். அவனது யௌவன சௌந்தர்யத்தில் எந்த விதமான கவலைக் கீற்றும் விழாது இருக்க வேண்டுமே என்பதால்தான்.

மேலும் அவன் ஒரு நாடக எழுத்தாளன்; சிறந்த ரசிகன்கூட. கலைக்காகப் பிறந்தவன்—கலைக்காக வாழ்பவன் — கலைக்காகவே தன் உள்ளம், உயிர், காதல் யாவையும் திரஸ்கரிக்கத் தயார் என்று சொல்பவன்.

கலையைப் பற்றி விவாதிக்கவே அவன் வீடு செல்வது என் வழக்கம். அன்றும் அவனைத் தேடிக்கொண்டு அவன் வீடு சென்றேன். வீட்டுக்குள் நுழைந்த என்னை, "வாப்பா, சந்துரு! உன் வீட்டுக்குத்தான் நான் இப்போது வரவேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தேன். அதற்குள் இந்த ஏகம்பன் வந்து விட்டான். நேரமாகி விட்டது" என்று புன்சிரிப்போடு செவந்திநாதனை என்னை எதிர்கொண்டழைத்தான்.



அப்பா :—உன்னை வேலைக்கு வைத்துவிட்டு நான் 'ரிடையர்' ஆகலாம் என்று பார்க்கிறேன். நீ என்னடா என்றால் இப்படிச் சோம்பேறியாகக் காலங் கழிக்கிறாயே?

மகன் :—அதற்கு என்ன அப்பா, இப்பொழுது அவசரம்? இன்னும் கொஞ்ச நாளைக்கு நீ வேலை பார்த்து வா. அப்புறம் இரண்டு பேரும் சேர்ந்து 'ரிடையர்' ஆகிவிடலாம்.

அவனது புன் சிரிப்பும், வார்த்தைகளிலுள்ள இனிமையும் என்னைச் சிலிர்க்கச் செய்தன. "செவந்தி! ஏகம்பனை வென்றுமானாலும் கேள். ஆண்களின் மதியைக்கூட மயக்கும் பூலோக மன்மதன் நீதான்" என்று கூறி அவனை அணைத்துக் கொண்டேன்.

செவந்திநாதன் கலகலவெனச் சிரித்தான். "நான் அலங்காரம் செய்து கொள்ளும்போது இந்த ஏகம்பன் என்ன சொன்னான், கேள்" என்று அவன் சொன்னவுடன் நான் ஏகம்பனைப் பார்த்தேன். ஏகம்பன் ஆரம்பித்தான்:

"ஊற்றைச் சரீரத்தை ஆபாசக் கொட்டிலை
ஊன் பொதிந்த
பீற்றல் துருத்தியை—சோறிடுந் தோற்பையை,
[பேசரிய
காற்றிற் பொதிந்த நிலையற்ற பாண்டத்தைக்
காதல் செய்தே......"

"அப்பா! கச்சி ஏகம்பனே! போதும் நிறுத்து. ஆண்டவன் வசிக்கக் கூடிய நம் உள்ளத்தையும், உடலையும் சுத்தமாக வைத்துக் கொள்வது தவறா? நீயே சொல்லேன், சந்துரு" என்ற செவந்திநாதனின் கோப வார்த்தைகள் எங்கள் இருவரையும் திகைக்கச் செய்தன. அவனது முகத்தில் சுருக்கம் நின்றது. அதைக் காணச் சகிக்காத நான், "செவந்தி! வீணாகக் கோபத்தைக் காட்டாதே! உன் அழகு அமரத்துவம் பெற்றிருக்க வேண்டுமென்றே நான் விரும்புகிறேன். அதற்கு ஏதாவது விபரீதம் செய்து கொள்ளாதே! உன் இளமை என்றும் பதினாறாகவே இருக்க வேண்டும்" என்றேன்.

ஏகம்பன் குறும்பாகச் சிரித்தான். "சந்துரு! இதே வார்த்தைகளை நீ நேற்றுச் சொல்லியிருந்தால் உன் வாக்குப் பலிக்க 'ததாஸ்து' சொல்லியிருப்பேன். ஆனால் இன்று......" என்று நீட்டினான்.

"ஏன்?" என்றேன் நான்.

"எதற்காகச் செவந்தி உன் வீட்டுக்குக் கிளம்பினான் என்று கேட்டால் தெரிகிறது" என பதட்டமில்லாமல் சொன்னான் ஏகம்பன்.

அதைக் கேட்ட செவந்திநாதன் தன் முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டான்.

"செவந்தி! என்ன சமாசாரம்?" என்று அவனது கைகளைப் பிடித்துக் கொண்டு போய்ச் சோபாவில் உட்கார வைத்தேன்.

"என்ன சமாசாரம்! எல்லாம் 'லவ் மேட்டர்' தான்" எனக் கண் சிமிட்டிய ஏகம்பனும் எங்கள் அருகில் தன் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டான்.

ஏகம்பனது வார்த்தைகள் என்னை ஒரு குலுக்குக் குலுக்கின. அதைக் கவனிக்

காதது போல, "நான் ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளப் போகிறேன்" என்றான் செவந்திநாதன்.

"கலியாணம் செய்து கொள். ஆனால் இரட்டைப் பின்னல் பின்னிக்கொண்டு, முகம் நிறைய வெள்ளைப் பொடியை அப்பிக் கொண்டு, கையில் சில்லறை இல்லாத தோல் பை சகிதம் அலைகிறாளே, அந்த ரகப் பெண் வேண்டாம் உனக்கு" என்றேன் நான்.

"ஏன் சந்துரு?"

"ஏனென்றால் அவர்கள் குடும்பத்திற்கு லாயக்கில்லை."

"அப்படித்தான் இருக்க வேண்டுமென்று யார் விரும்புகிறார்கள்?"

"செவந்தி! நீ பேசுவது எனக்குப் பிடிக்கவில்லை. முதலில் யாரைக் கலியாணம் செய்து கொள்ளப் போகிறாய் என்று சொல்லேன்" என்றேன் பதட்டத்தோடு.

"ஒரு நாடக நடிகையை!"

என்னை அறியாமலேயே என் உடல் நடுங்கிற்று. "செவந்தி! நிஜமாகவா?" என்றேன்.

"ஆம்......"

"பெயர்?"

"குயிலி!"

"கேட்டதில்லையே..."

"கேட்டிருக்க முடியாதுதான், சந்துரு. அவள் நல்ல அழகு; ரொம்பவும் கெட்டிக்காரி."

"பெண்கள் எல்லோருமே ரொம்பவும் கெட்டிக்காரர்கள்தான் செவந்தி. ஆண்களை விட அவர்களுக்கு அழகு அதிகம். அறிவும் அதிகம். எந்தக் காரியங்களையும் மேல் உதட்டின் இனிமையான வார்த்தைகளைக் கொண்டும், மை பூசிய கண்களின் வீச்சுக்களைக் கொண்டும் சாதித்துக்கொண்டு விடுவார்கள்."


"சந்துரு! நீ சொல்வது எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவள் என்னைத் தன் மனக் கோவிலில் வைத்துப் பூஜிக்கிறாள்."

"அது கிடக்கட்டும். இந்த அழகு மோகினியை எங்கே கண்டு பிடித்தாய்?"

"சந்துரு! என்னைப் பரிகாசம் செய்யாதே. இந்த விஷயத்தைச் சொன்னால் நீ ஏளனம் செய்வாயோ என்று தான் இதுவரை சொல்லாமல் இருந்தேன். நாங்கள் இருவரும் மணம் செய்து கொள்வது என்று இப்போது தீர்மானித்து விட்டதால் தான் சொல்லத் துணிந்தேன்."

"பலே! பலே! இந்த மட்டும் மணமான பின்பு சொல்லாமலிருந்தாயே!" என்று ஏகம் பண் வெறுப்போடு அப்பால் சென்றான்.

அவனையே பார்த்துப் பெருமூச்சு விட்ட செவந்திநாதன் மேலே தொடர்ந்தான்: "சந்துரு, சென்னை நாடகக் கலா மன்றத்தில் விழா நடக்கிறதே, தெரியுமா? ஒரு மாதமாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நாடகம் போடுகிறார்களே, தெரியுமா?"



"தொழிலாளர்களுக்காக என் தகப்பனார் மிகவும் பாடுபட்டார்!"

"அப்படியா? அவர் என்ன பொதுவுடைமை வாதியா?"

"அதெல்லாம் இல்லை, அவர்கள் வேலைக்குப் போக முக்கியமான உதவி செய்தார். தொழிற்சாலை கடிகாரத்தை அடிக்கடி ரிப்பேர் செய்து வந்தார்!"

"ஓ! தெரியுமே!" என்றேன் நான்.

"அங்கு தான் என் விலையிலா மாணிக்கத்தைக் கண்டு பிடித்தேன். எதேச்சையாக அன்று நான் நாடகத்திற்குச் சென்றிருந்தேன். தேவராஜ் நாடகக் கோஷ்டியாரின் சாகுந்தல நாடகம் நடந்து கொண்டிருந்தது. சகுந்தலை வேஷம் தரித்த குயிலி எவ்வளவு அபூர்வமாக நடித்தாள், தெரியுமா? சந்துரு. இது மாதிரி நடித்தவர்களை நாம் பார்த்ததில்லை; பார்க்கப் போவதுமில்லை. கவிஞனது கனவுகளுக்கெல்லாம் அவள் உருக் கொடுத்தாள். புலவனின் உணர்ச்சிகளை அவள் உணர்ந்து உள்ளபடி நடித்தாள். அவள் மேடைக்கு வந்தவுடன் காலரியில் உட்கார்ந்து 'விசில்' அடித்துக் கொண்டிருந்த சோதாக்களின் கும்பல்கூட அப்படியே சிலை போல இருந்தது. அவள் குரல் இனிமையாயிருந்தது. காட்டிலுள்ள குயிலின் குரல் நயத்தை அவள் தன் குரலில் காட்டினாள். அந்த நேரத்தில் நான் உலகையே மறந்தேன். ஏன், சாகுந்தலம் தீட்டிய புலவனையும் மறந்தேன். நாடகம் முடிந்தபின் கஷ்டப்பட்டுக்கொண்டு போய் நாடக கோஷ்டித் தலைவர் தேவராஜ் அவர்களையே சந்தித்தேன். அவரைப் பாராட்டினேன். சகுந்தலை வேஷம் தரித்த அவர்கள் நாடக சபா நடிகையின் நடிப்பு அபாரமானது எனப் புகழ்ந்தேன்.

பின்னர் சகுந்தலையாக நடித்த குயிலியையும் நேரில் சந்தித்துப் புகழ்ந்தேன். இரண்டாம் நாள் நடந்த அவர்கள் சிலப்பதிகார நாடகத்திற்கும் சென்றேன். குயிலி கண்ணகி வேஷத்தில் தோன்றிச் சபையோரை கலங்க அடித்தாள். மேடையில் அவள் கண்ணீர் சொரிந்த போது சபையில் நாங்கள் கண்ணீர் வடித்தோம். அவள் வாழ்வில் ஏற்பட்ட கோர முடிவின்போது நாங்கள் அலறினோம்."

அந்தக் கடைசி வாக்கியத்தைக் கேட்ட போது என் உடம்பே வெடவெடவென நடுங்கிற்று. "பயப்படாதே, சந்துரு!" என என்னைத் தட்டிக் கொடுத்த செவந்திநாதன் "சந்துரு! கவிஞனது கனவுகளை உணர்ந்து உணர்ச்சியோடு நடிக்கும் அவளைத்தான் நான் மணக்கப் போகிறேன். அவ்வாறு முடிவும் செய்து விட்டேன்" என்றான்.

"விட்டிலைப்போல மயங்காதே, செவந்தி. நாடகக்காரிகளெல்லாம்......"

சட்டென என் வாயை மூடினான் செவந்திநாதன். "சந்துரு! என் குயிலி புனிதமானவள். தன் வாழ்வில் மாசுமறு அற்றவள். அவளைப் பற்றி ஏதாவது உளறினால்......" அவன் குரலில் தொனித்த கடுமை என்னை வெலவெலக்கச் செய்துவிட்டது. நான் பயந்து சோபாவில் சாய்ந்து விட்டேன். மறுபடியும் குழந்தையைப் போலச் செவந்திநாதனே தொடர்ந்தான்.

"சந்துரு! என்னைக் கோபிக்காதே. அவள் உத்தமி. என்னைத் தவிர வேறு எந்த ஆடவனையும் மனதினால் கூட எண்ணாதவள். அவளை நான் நேரில் சந்தித்தபோது அவள் எவ்வளவு இனிமையாகக் கலையைப் பற்றிப் பேசினாள், தெரியுமா? அவள் நடிப்பை நான் மெச்சியபோது அவள் என் அழகை மெச்சி எனக்கு 'அழகு ராஜா' என்று பெயர் சூட்டியிருக்கிறாள். 'அழகு ராஜா! உங்களிடமே நான் எப்போதும் இருக்கும்படி செய்யுங்கள். உங்களை விட்டுச் சிறிது நேரம் பிரிந்திருந்தால்கூட என் உள்ளம் துடிக்கிறது' என்றாள். அழகு ராஜா, கலையரசியை மணப்பதில் தவறு ஏதாவது உண்டா, சந்துரு?" என்று கேட்டான்.

இளமை மாறாத அவனது சௌந்தரிய முகத்தில் இரண்டொரு சஞ்சலக் கோடுகள் தெளிவதைக் கண்ட நான் துள்ளினேன்.

"செவந்தி! சஞ்சலப்படாதே. உன் முகத்தின் அழகைக் கவலை குலைத்துவிட நான் பார்க்க மாட்டேன். நீ அவளையே மணந்து கொள்" என்றேன்.

செவந்திநாதனின் முகம் பிரகாசமாக மலர்ந்தது. "சந்துரு! நீதான் என் உண்மை நண்பன். நாளைக்கு என்னுடன் வா. போன வாரம் நடந்த சாகுந்தல நாடகத்தையே மறுபடியும் நாளைக்கு நடிக்கிறார்கள். என் குயிலி எப்படி நடிக்கிறாள் என்பதை நீயே பார். அப்புறம் நீ சொல்லுவாய். அவளை நான் மணந்து கொண்டால் என் நாடகங்களுக்கு எவ்வளவு புகழ் கிடைக்கும், தெரியுமா?" என்றான் உற்சாகத்தோடு.



செவந்திநாதனின் உணர்ச்சிகளை உணராத ஏகம்பனோ மௌனமாக இருந்தான்.

* * *

மறுநாள் நாங்கள் நாடகக் கொட்டகைக்கு ஐந்து மணிக்கே போய் விட்டோம். குயிலியிடம் என்னைப் பற்றிச் செவந்திநாதன் அறிமுகம் செய்து வைத்தான். செவந்திநாதன் சொல்லியதைப்போல குயிலி நல்ல அழகி தான். வயது பதினேழு, பதினெட்டுத் தான் இருக்கும். களங்கமற்ற அவள் முகம் செவந்தியைக் கண்ட போது குபீரெனச் சிவந்ததைக் கண்ட நான் அவளது உண்மையான காதலை உணர்ந்தேன்.

நாங்கள் முன்னால் போடப்பட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்தோம். நாடகம் ஏழு மணிக்கு ஆரம்பமாயிற்று. நல்ல கூட்டம். திரை தூக்கப்பட்டு குயிலி மேடைக்கு வந்தவுடன் எங்கும் நிசப்தம் நிலவியது. அவள் சகுந்தலை வேஷத்திலிருந்தாள். துஷ்யந்தன் அவளைச் சந்திக்கும் காட்சி. அவர்களிடையே காதல் பேச்சு நடக்கும் கட்டம்... "என் தேவா! உங்கள் அழகு என் உள்ளத்தைக் கவர்கிறது. நீங்கள் எனக்குத்



திகட்டாத தேன்...வாழ்வில் ஒளி கொடுக்க வந்த முழு மதிச் சந்திரன்" என்று பல காதல் மொழிகளைத் திக்கித் திக்கிக் கொண்டு குயிலி கொட்டினாள். வார்த்தைகள் வெளி வந்தனவே ஒழிய அவற்றில் உணர்ச்சியும் இல்லை; இனிமையுமில்லை. பள்ளி மாணவி சொல்லுவது போல இருந்தது.

நான் ஏமாற்றத்துடன் செவந்திநாதனின் முகத்தைப் பார்த்தேன். அவன் முகத்தில் ஆத்திரம் ஜ்வலிக்க மேடையைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

குயிலியின் நடிப்பு உணர்ச்சியைக் கொடுக்காததால் எங்கும் 'ஹோ' வென்ற சப்தம் எழுந்தது. குழப்பம் ஏற்படாதிருக்க நாடக சபையார் எங்கும் பெரிய பெரிய விளக்குகளை ஏற்றி ஏற்றி அணைத்தார்கள். திரை விழுந்தது.

மறுபடியும் துஷ்யந்தன் சகுந்தலையிடம் காதல் மொழிகளைக் கொட்டிக் கொண்டு கணையாழியைக் காட்டினான். குயிலி உணர்ச்சியற்ற பொம்மையைப் போல நின்றாள். முன்பின் நடித்துப் பழக்க மில்லாத வளை மேடையில் ஏறி நடிக்கச் செய்தால் எப்படி யிருக்குமோ, அப்படித் தான் இருந்தது அன்று அவள் நடித்த நடிப்பு.

"அடாடா! நடிப்பு பிரமாதம்! இதைத் தான் ரொம்பவும் வர்ணித்தாயோ, செவந்தி?" என்று கேட்டேன்.

செவந்திநாதன் கண்களில் தீப்பொறி பறக்கப் பல்லைக் கடித்துக்கொண்டு என்னைப் பார்த்தான். நான் நடுங்கி விட்டேன்.

"பரவாயில்லை. நடிப்பு இல்லாவிட்டால் என்ன? உனக்கு மனைவியாக வந்த பின் நடிக்கவா அனுப்பப் போகிறாய்?" என்று நான் வேறுபுறம் திரும்பிக் கொண்டேன்.

செவந்திநாதன் அதற்கும் பேசவில்லை. நாடகம் முடிந்தவுடன் வேகமாகக் குயிலி தன் வீடு போய் விட்டாள். நானும் செவந்திநாதனும் கூட எங்கள் காரில் அவள் வீட்டுக்குச் சென்றோம்.

நான் வெளியே தயக்கத்தோடு நின்று விட்டேன். செவந்திநாதன் மாத்திரம் உள்ளே சென்றான். சிறிது நேரத்துக்கெல்லாம் குயிலியுடன் அவன் பேசும் பேச்சுக்கள் தெளிவாகக் காதில் விழுந்தன.

"குயிலி!"

"அழகு ராஜா!"

"சீ! வாயை மூடு! என்னை அப்படிக் கூப்பிட உனக்கு என்ன அருகதை? ரொம்பவும் பிரமாதமாக நடித்துவிட்டாய் என்ற எண்ணமோ? உன் நடிப்பைக் காட்ட என் நண்பனையும் அழைத்து வந்தேனே!"

"செவந்தி! நான் நன்றாக நடிக்கவில்லையென்றுதானே உங்களுக்குக் கோபம். இனி நான் நன்றாக நடிக்க முடியாது. நடிக்கவும் போவதில்லை."

"குயிலி!"

"ஆம், செவந்தி! அதற்குக் காரணம் நீங்கள்தான்."

"நானா?"

"ஆம். நீங்கள் என் வாழ்வில் குறுக்கிடுவதற்கு முன் நடிப்புத்தான் என் தொழிலாக, கலையாக இருந்தது. நாடகக் கொட்டகையே உலகம் என்று எண்ணிக் கொண்டு, நடிப்பை வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டேன். உலகத்தில் நடக்கும் உண்மை எனக்குத் தெரியாது. என் அழகு ராஜா! நீங்கள் தோன்றி என் கலை மறைத்திருந்த மாயையை நீக்கினீர்கள். நாடகக் கொட்டகை, அதில் காட்டும் இருள், ஒளி, சந்திரச் சாயை எல்லாம் பொய்; சொல்லும் வார்த்தைகள் எல்லாம் நடிப்பு; காதல் கட்டங்கள் எல்லாம் கருத்தின்றி நடிப்பவைகள் என்பதை விளக்கினீர்கள். நான் உங்களை மனமார நேசிக்கிறேன். நீங்கள் நண்பரோடு கூடச் சபையில் உட்கார்ந்திருந்தபோது பிற ஆடவனுடன் ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் காதல் பேச்சைப் பேச என் நா மறுத்தது. உள்ளத்தில் என்றுமே அறியாத வெட்கம் புதிதாகப் புகுந்து கொண்டது. உங்களிடம் பேசும் பேச்சுக்களை நான் எப்படி வேறு ஒருவனுடன் பேசுவது? அழகு ராஜாவை என் மன மாளிகையில் வைத்து ஆனந்திக்கும்

நான் எப்படிச் சோகமாக நடிக்க முடியும்? எனக்குக் கலையைவிட நீங்கள்தான் பெரிது. உங்களுக்காக நான் எதையும் தியாகம் செய்யத் தயார்."

"சீ, கலையை விட உனக்கு நான் பெரிது. எனக்கு உன்னை விட, உன் காதலை விடக் கலைதான் பெரிது. கலையில்லாவிட்டால் நீ ஒரு பெண்தானே!"

"ஹா!"

"ஆம், என் மேலுள்ள காதலால் நீ கலைத் திறனைத் தியாகம் செய்து விட்டாய். அது என் மனதில் உன்னைப் பற்றிக் கொண்டிருந்த உயர்ந்த எண்ணங்களை எல்லாம் கொன்றது. இனி என் முகத்தில் விழிக்காதே."

அடுத்த கணம் அறையில் மடார் என்ற சப்தம் கேட்டது. சட்டென நான் உள்ளே நுழையவும், "வா, சந்துரு! இனி அங்கே போக வேண்டிய தேவையில்லை" என்று செவந்திநாதன் என் கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டு வெளியே இறங்கினான்.

"செவந்தி! செவந்தி!" என ஓடி வந்த குயிலி நாங்கள் காரில் ஏறிக் கொண்டு கிளம்பியதைக் கண்டவுடன் கண்களில் நீர் ததும்ப வீதி விலக் கதவைப் பிடித்துக் கொண்டே சிலையைப் போல நின்றாள். என் மனம் தான் சுக்குநூறாகத் தகர்ந்தது. குயிலியின் புனிதக் காதலை செவந்தியின் கோபம் தணிந்த பின் சொல்ல எண்ணினேன்.

இரவு எனக்குத் தூக்கமில்லை. குயிலி புனிதமானவள். அவளிடம் செவந்திநாதன் கடுமையாக நடந்து கொண்டது தவறு. அவளிடம் அவனை மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும்படி செய்ய வேண்டும். நான் செய்ய வேண்டிய கடமையை மறந்து நண்பனுக்குப் பரிந்து கொள்ளக் கூடாது என்றெல்லாம் என் மனம் அலறிற்று. விடிந்ததும் விடியாததுமாகச் செவந்திநாதன் வீட்டுக்கு ஓடினேன்.

என்னைக் கண்டவுடன் ஓடி வந்து என் கைகளைப் பிடித்துக் கொண்ட செவந்திநாதன், "சந்துரு! இரவே உன் வீட்டுக்கு வரலாமா என்று எண்ணினேன். என் மனம் குழம்பியிருக்கிறது. ஏதாவது வழி சொல்லேன்" என்றான் விம்மலோடு.

"செவந்தி! அழாதே! இரவு கோபத்தைக் காட்டியிருக்க வேண்டாம்..."

"குயிலியிடம் தானே சந்துரு! ஆம், நீ சொல்வது உண்மை. கலை மீதுள்ள காதலால் அதிகக் கோபத்தைக் காட்டி அவள் மனதைத் துன்புறுத்தி விட்டேன். பாவம்! 'செவந்தி செவந்தி' என்று கண்களில் நீர் தேங்க அவள் ஓடி வந்த காட்சி என் மனத்தை நேற்று இரவு முழுதும் வேதனைப் படுத்தியது" என்றான்.

செவந்திநாதனின் பரிதாபகரமான நிலையைக் கண்ட என் மனம் இன்னும் பலமாகக் குழம்பி விட்டது. "செவந்தி! இப்போது என்ன நடந்து விட்டது? ஏன் வீணாக அலட்டிக் கொள்ளுகிறாய்? எல்லோருடைய இளமையின் அழகையும், பொலிவையும் கவலையென்ற கரையான் அரித்து விடுவதைப் போல உன் அழகும் சிதைபட நான் பார்க்க மாட்டேன். வா, உடனே போவோம். குயிலி நல்லவள். உன்னிடம் அளவற்ற அன்பு உடையவள். நடந்ததையெல்லாம் மறந்து உன்னை ஏற்றுக் கொள்வாள்" என்றேன்.


செவந்திநாதன் முகத்தில் மலர்ச்சி மிளிர்ந்தது. "சந்துரு! நான் எண்ணியதையே நீயும் சொன்னாய். நீ தான் என் உத்தம நண்பன். குயிலி நல்லவள்தான். என்னை மன்னித்து விடுவாள். நானும் என் காதல் தெய்வத்திடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். வா, இருவரும் போவோம்!" என்றான்.

அடுத்த விநாடி அறைக்குள் நுழைந்த ஏகாம்பரத்தை நாங்கள் இருவரும் பார்த்தோம். "செவந்தி! செவந்தி! உனக்கு விஷயம் தெரியுமா?" என்ற அவனது வார்த்தைகளில் படபடப்புத் தொனித்தது.

"என்ன?" என்று இருவரும் கேட்டோம்.

"குயிலி இறந்து போய் விட்டாள், செவந்தி! உன்னையும், உன்மேல் குயிலிக்கு உள்ள காதலையும் நான் உணரவில்லை. குயிலியை நீ எவ்வளவு நேசித்தாய் என்று இப்போதுதான் தெரிந்தது. ஆனால் தேவராஜ் நாடகக் கம்பெனியாரின் பிரபல பிரதம நடிகை குமாரி குயிலி நேற்று அவள் வீட்டில் மாரடைப்பால் இறந்து விட்டாள் என்ற செய்தியை இன்று காலையில் வெளி வந்துள்ள எல்லாப் பத்திரிகைகளும் பிரசுரித்து இருக்கின்றன" என்றான் மிகத் துயரத்துடன்.

இதைக் கேட்டதும் செவந்திநாதன் மூர்ச்சையுற்றுக் கீழே சாய்ந்தான்.



"என்ன பிரதர்! உங்களை நம்ம நாராயணசாமி கேட்டதாகச் சொல்லச் சொன்னார்!"

"அவன் கிடக்கிறான் அற்பப் பயல்! எப்பவோ ஆறு மாசத்திற்கு முன்னால் அறுபது ரூபாய் கடனாகக் கொடுத்தான்! சும்மா கேட்டுக் கொண்டேயிருக்கிறான்!"

# தமிழ் இசைச் சங்கம், சென்னை

## ஒன்பதாவது தமிழ் இசை விழா: 1951-52

சென்னை, எழும்பூர் மியூஸியம் தியேட்டரில்

**தொடக்க விழா: 24-12-51 மாலை 5-15 மணி**

திறப்பாளர்: யாழ்ப்பாணம், திரு. க. நடேச பிள்ளை அவர்கள்

★

| | | |
|---|---|---|
| **1**<br>24—12—1951<br>திங்கட்கிழமை<br>மாலை 4-30 மணி | தமிழ் இசைக் கல்லூரி மாணவர்கள் | — பாட்டு |
| | ராமச்சந்திர ராவ் | — பிடில் |
| | வயலூர் வைத்தியநாத ஐயர் | — மிருதங்கம் |
| மாலை 6 மணி | எம். எம். தண்டபாணி தேசிகர் | — பாட்டு |
| | லால்குடி ஜெயராமன் | — பிடில் |
| | மதராஸ் ஏ. கண்ணன் | — மிருதங்கம் |
| | டி. என். வில்வாத்திரி ஐயர் | — கடம் |
| **2**<br>25—12—51<br>செவ்வாய்க்கிழமை<br>மாலை 5-30 மணி | எம். கே. தியாகராஜ பாகவதர் | — பாட்டு |
| | மைசூர் டி. குருராஜப்பா | — பிடில் |
| | குத்தாலம் சிவவடிவேல் பிள்ளை | — மிருதங்கம் |
| | ஆலங்குடி ராமச்சந்திரன் | — கடம் |
| **3**<br>26—12—51<br>புதன்கிழமை<br>மாலை 5-30 மணி | கே. பி. சுந்தராம்பாள் | — பாட்டு |
| | ராமநாதபுரம் எம். என். கணேச பிள்ளை | — பிடில் |
| | புதுக்கோட்டை தட்சிணாமூர்த்தி ஆச்சாரி | — மிருதங்கம் |
| | ஆலங்குடி ராமச்சந்திரன் | — கடம் |
| **4**<br>27—12—51<br>வியாழக்கிழமை<br>மாலை 5-30 மணி | மதுரை மணி ஐயர் | — பாட்டு |
| | கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை | — பிடில் |
| | பழநி சுப்பிரமணிய பிள்ளை | — மிருதங்கம் |
| **5**<br>28—12—51<br>வெள்ளிக்கிழமை<br>மாலை 6 மணி | ஔவையார் — நாடகம்<br>டி. கே. எஸ். சகோதரர்கள் | |
| **6**<br>29—12—51<br>சனிக்கிழமை<br>மாலை 6 மணி | ஸ்ரீ சரபேந்திர பூபால குறவஞ்சி (நாட்டிய நாடகம்)<br>பங்கெடுத்துக் கொள்பவர்கள்: பாலசரஸ்வதி, ஹேமமாலினி, சாந்தாராதா, நிர்மலா, இந்திரா, உமா, வசந்தா, கீதா.<br>இசை: ஜெயம்மாள், சரோஜினி குமாரசுவாமி, சாவித்ரீ ஸ்ரீநிவாசன். | |
| **7**<br>30—12—51<br>ஞாயிற்றுக்கிழமை<br>மாலை 5-30 மணி | எம். எஸ். சுப்புலக்ஷ்மி | — பாட்டு |
| | திருவாலங்காடு சுந்தரேச ஐயர் | — பிடில் |
| | மாவேலிக்கரை கிருஷ்ணன் குட்டி நாயர் | — மிருதங்கம் |
| | உமையாள்புரம் கோதண்டராம ஐயர் | — கடம் |
| **8**<br>31—12—51<br>திங்கட்கிழமை<br>மாலை 6 மணி | குமாரி ராதா — பரதநாட்டியம், அபிநயம்<br>எம். எஸ். சுப்புலக்ஷ்மி பதம் பாடுவார்கள். | |

( நிகழ்ச்சிகள் மாற்றத்திற்குரியன )

**கட்டணம்: ரிஸர்வ்டு வகுப்பு ரூ. 25/- முதல் வகுப்பு ரூ. 15/-**

சீசன் டிக்கட்டுகள் தமிழ் இசைச் சங்கக் காரியாலயத்தில் (8/9, சிங்கண்ணா நாயக்கன் தெரு, ஜார்ஜ் டவுன், சென்னை) கிடைக்கும்.

மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு முழுக் கட்டணம் வசூலிக்கப்படும்

# மத்திய கேந்திரம்

ஸ்ரீ ஜெயமணி

## துருக்கி—2

கிரிமியா யுத்தத்துக்குப் பிறகும் ஜார் சக்கரவர்த்தியின் பேராசை தணியவில்லை. மறுபடியும் துருக்கிமீது படையெடுக்க எப்போது சமயம் வரும் என்று காத்துக்கொண்டிருந்தார். எனினும் அவர் எதிர்பார்த்த சந்தர்ப்பம் சீக்கிரத்தில் கிடைக்கவில்லை. இருபத்தொன்று வருஷங்களுக்குப் பிறகு 1877-ல் தான் அந்தச் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்போது மறுபடியும் ருஷ்யா துருக்கி மீது போர் தொடுத்தது. அந்தப் போரில் துருக்கி தோல்வியுற்றதெனினும், அதை ருஷ்யா முற்றிலும் ஆக்கிரமித்துக் கொள்ள முடியாமல் இங்கிலாந்து முதலிய நாடுகள் தடுத்து விட்டன. எனவே கான்ஸ்டாண்டிநோபிளைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஜார் சக்கரவர்த்தியின் சூழ்ச்சி அந்தத் தடவையும் பலிக்கவில்லை!

மேற்படி போரில் துருக்கி தோல்வியடைந்ததால், அதன் விதியை நிர்ணயிப்பதற்காக 1878-ம் வருஷம் பர்லினில் சரித்திரப் பிரசித்தி பெற்ற மகாநாடு நடந்தது. பிஸ்மார்க், டிஸ்ரேலி போன்ற மற்றும் பல ஐரோப்பிய ராஜதந்திரிகள் அந்த மகாநாட்டுக்கு வந்திருந்தனர். அப்போது இங்கிலாந்துக்கும் ருஷ்யாவுக்கும் ஏற்பட்ட கடுமையான தகராறு காரணமாக இரு நாடுகளுக்கும் யுத்தம் ஏற்படலாம் என்று கூடத் தோன்றியது! எனினும் இறுதியில் ருஷ்யா சமயோசிதமாக விட்டுக் கொடுத்ததால் அந்த நெருக்கடி ஒருவாறு தணிந்தது.

பர்லின் மகாநாட்டில் தயாரிக்கப்பட்ட உடன்படிக்கையை அனுசரித்து, பல்கேரியா, செர்பியா, ருமேனியா முதலிய நாடுகள் துருக்கியின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றுச் சுதந்திரம் அடைந்தன. துருக்கி சாம்ராஜ்யத்துக்கு உட்பட்டிருந்த சில பிரதேசங்கள் ஆஸ்திரியாவுக்குக் கிடைத்தன.

ருஷ்யா துருக்கியை ஆக்கிரமித்துக் கொள்ள முடியாமல் தடுக்க பிரிட்டன் உதவி புரிந்ததல்லவா? அந்த உதவிக்குக் 'கமிஷனாக' பிரிட்டன், துருக்கியை அடுத்து மத்திய தரைக் கடலில் இருக்கும் சைப்ரஸ் தீவைத் தன் நிர்வாகத்தில் எடுத்துக் கொண்டது

துருக்கி - ருஷ்யாவின் பகை அத்துடன் தீர்ந்து விடவில்லை. மேலே குறிப்பிட்ட யுத்தம் நடந்த முப்பத்தாறு ஆண்டுகளுக்குப் பின் 1914-ல் மறுபடியும் ருஷ்யாவுக்கும் துருக்கிக்கும் போர் மூண்டது!

* * *

இதன் மத்தியில் துருக்கியிலே காலத்தை அனுசரித்துப் பல மாறுதல்கள் உருவாகிக் கொண்டிருந்தன. ருஷ்யாவின் படையெடுப்புகளால் அதிர்ச்சியடைந்த துருக்கியர்கள் தங்களுடைய இராணுவத்தைப் பலப்படுத்திக் கொள்ள முற்பட்டார்கள்.

ஆனால் யுத்தச் செலவுக்காக துருக்கி மேல் நாடுகளிடமிருந்து கடன் வாங்கியிருந்ததால், அந்த நாடுகளின் தயவில்லாமல் துருக்கியினால் தன் இஷ்டப்படி எந்தச் சீர்திருத்தமும் செய்ய முடியவில்லை.

இந்தச் சமயத்தில்தான் துருக்கி சுல்தானின் எதேச்சாதிகாரத்தை எதிர்த்து அந்த நாட்டில் ஜனநாயக இயக்கமும் உருவாகிக் கொண்டிருந்தது.

ஜனநாயக லட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு துருக்கி இளைஞர் கட்சி ஒன்றும் அமைக்கப்பட்டது. அந்தக் கட்சியினர் துருக்கி இராணுவத்தின் பெரும் பகுதியையும் தங்கள் வசப்படுத்திக் கொண்டார்கள். எனவே அவர்களின் கோரிக்கைக்கு இணங்குவதைத் தவிர துருக்கி சுல்தானுக்கு வேறு வழி இராமற் போயிற்று.

1908-ல் நிகழ்ந்த மேற்படி புரட்சிக்கு என்வர் பே என்பவர் தலைமை வகித்தார். அப்போது முஸ்தபா கெமால் அந்தப் புரட்சித் தலைவர்களில் ஒருவராக இருந்தார். இவர்தான் பிறகு துருக்கியின் ரக்ஷகராகத் திகழ்ந்து உலகப் பிரசித்தி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் என்வர் பே காலத்தில் கெமால் ஒரு சாதாரணத் தலைவராகவே இருந்து வந்தார்.

துருக்கி இளைஞர் கட்சியின் கோரிக்கைக்கு சுல்தான் அப்துல் ஹமீத் ஓரளவு இணங்கினார் என்றாலும், அவர் உள்ளூற அந்தக் கட்சியை வெறுத்தார்; அவர்களுக்கு இடைவிடாமல் தொல்லை விளைவித்து வந்தார்.

எனவே அதன் விளைவாக பெரும் கலகங்கள் ஏற்பட்டு சுல்தான் முடி துறக்கவும் நேர்ந்தது. முடியிழந்த சுல்தானின் ஸ்தானத்தில் வேறொருவர் பட்டத்துக்கு வந்தார்.

1876-ம் வருஷம் பட்டத்துக்கு வந்த அப்துல் ஹமீத் கடைசியில் எல்லோருடைய கண்டனத்துக்கும் ஆளாகி முடி துறக்க நேர்ந்தது. அவரது ஆட்சியில் பல்கேரியா, அர்மீனியா முதலிய இடங்களில் நடந்த படுகொலைகள் காரணமாக எல்லோரும் அவரை மிகவும் வெறுக்கலாயினர்.

சுல்தான் அப்துல் ஹமீத் முடி துறந்த சமயத்தில் துருக்கியின் பொருளாதாரக் கஷ்டங்கள் உச்ச நிலையை அடைந்தன. அதற்கு அன்னிய நாடுகளுடனும் பலவிதமான தகராறுகள் ஏற்பட்டன.


‘ஐரோப்பாவின் நோயாளி’யான துருக்கியின் மரணத்தை ஏற்கெனவே பல நாடுகள் எதிர் பார்த்துக் கொண்டிருந்தன அல்லவா? கழுகுகளைப் போல் காத்துக் கொண்டிருந்த அந்த அண்டை நாடுகள் இதுதான் சமயம் என்று துருக்கியின் மீது பாய முற்பட்டன. வடக்கு ஆப்பிரிக்காவில் துருக்கி சாம்ராஜ்யத்துக்குச் சொந்தமாக இருந்த திரிபோலியை இத்தாலி பலாத்காரமாகக் கைப்பற்றிக் கொண்டதுடன், துருக்கிமீது போர் தொடுக்கவும் ஆரம்பித்தது. ஆஸ்திரியாவும் துருக்கியிடமிருந்து பிடுங்கிய வரையில் ஆதாயம் என்று விபரீத நடவடிக்கைகளில் ஈடுபட்டது. அப்போது துருக்கியிடம் சரியான கடற்படை இராததால், இத்தாலியின் நிபந்தனைகளுக்கெல்லாம் அது ஆட்சேபணையின்றி இணங்க நேர்ந்தது.

அதே சமயத்தில் துருக்கியை மற்றொரு ஆபத்தும் சூழ்ந்து கொண்டது. துருக்கியிடமிருந்து பிய்த்துக் கொண்டு சுதந்திரம் பெற்ற பல்கேரியா, கிரீஸ் முதலிய பால்கன் நாடுகள் ஐரோப்பாவிலிருந்து துருக்கியின் ஆதிக்கத்தை அடியோடு ஒழித்துவிட எண்ணின. அந்த நோக்கத்துடன் அவை 1912-ல் துருக்கியைத் தாக்க முற்பட்டன.

அவ்வமயம் துருக்கி சோர்ந்தும், ஒற்றுமையின்றியும் அல்லல் பட்டுக் கொண்டிருந்ததால், பால்கன் சூழ்ச்சியை எதிர்த்து நிற்க அந்த நாட்டுக்குச் சக்தி இல்லை. எனவே அது முற்றிலும் சீர்குலைந்ததுடன், ஏராளமான கஷ்டநஷ்டங்களுக்கும் இலக்காயிற்று. கான்ஸ்டாண்டி நோபிளைத் தவிர ஐரோப்பாவைச் சேர்ந்த பிரதேசங்கள் யாவும் துருக்கியிடமிருந்து மற்ற நாடுகளால் பலாத்காரமாகக் கைப்பற்றப்பட்டன.

கொள்ளையிட்ட சொத்துக்களைப் பங்கிட்டுக் கொள்ளும்போது கொள்ளைக்காரர்களிடையே சச்சரவு ஏற்படுவது உண்டு அல்லவா? அது போலவே துருக்கியிடமிருந்து கைப்பற்றிய பிரதேசங்களைப் பங்கிட்டுக் கொள்வதில் பால்கன் நாடுகளுக்குள் சச்சரவு ஏற்பட்டது. அந்தச் சச்சரவு இறுதியில் போரிலும் வந்து முடிந்தது.

அதன் விளைவாக, பல்கேரியா தனக்குக் கிடைத்தப் பிரதேசங்களையெல்லாம் இழந்தது. ருமேனியா, கிரீஸ், செர்பியா முதலிய நாடுகளுக்கு அதிகப் பிரதேசங்கள் கிடைத்தன. துருக்கியும் தான் முதலில் இழந்த மிகப் பழமையான அட்ரியாநோபிள் நகரை மீண்டும் பெறுவது சாத்தியமாயிற்று.



துருக்கியின் பழைய தலைநகரான இஸ்தான்புல்லில் உள்ள மாபெரும் மசூதி

பால்கன் நாடுகள் தொடுத்த போர்களினால் துருக்கி சாம்ராஜ்யம் தேய்ந்து மறையும் தறுவாய்க்கு வந்துவிட்டது எனலாம். ஒரு காலத்தில் ஈடு இணையற்ற செல்வாக்குடனும் சக்தியுடனும் விளங்கிய துருக்கி சாம்ராஜ்யத்துக்கு நேர்ந்த கதியைக் கண்டு ஐரோப்பிய நாடுகளில் ஜெர்மனி மாத்திரம் அனுதாபம் காட்டியது. அப்போது ஜெர்மனிக்கு மத்தியகேந்திரப் பிரதேசத்தில் தன் செல்வாக்கை வியாபிக்கச் செய்ய வேண்டும் என்ற ஆசையும் இருந்தது. எனவே கதியற்று இருந்த துருக்கி ஜெர்மனியின் அன்பையும் ஆதரவையும் பெற முயற்சித்தது. ஜெர்மனியும் துருக்கியின் நட்பைப் பெற ஆர்வம் கொண்டது.

இந்தச் சமயத்தில்தான் துரதிர்ஷ்ட வசமாக முதலாவது மகாயுத்தம் ஆரம்பமாயிற்று. அதாவது பால்கன் நாடுகள் தொடுத்த போர்களால் ஏற்பட்ட கஷ்டநஷ்டங்களைத் துருக்கி சமாளிப்பதற்குள், முதலாவது மகாயுத்தம் அந்த நாட்டைச் சூழ்ந்து கொண்டது.

முதலாவது உலக மகா யுத்தத்தினால் அடியோடு மறைந்த நாலு சாம்ராஜ்யங்களில் துருக்கியும் ஒன்றாகும். அந்த யுத்தத்தில்தான் ருஷ்ய, ஆஸ்திரிய, ஜெர்மன் சாம்ராஜ்யங்களும் மறைந்தன.

அப்போது துருக்கி நேச தேசங்களுடன் தனியாக சமாதான உடன்படிக்கை செய்து கொண்டது. ஒருகாலத்தில் சிங்கம் போல் கம்பீரமாக கர்ஜித்துக் கொண்டிருந்த துருக்கி சாம்ராஜ்யம், முதலாவது மகாயுத்தத்துக்குப் பின் புழுவைப் போல் துடிக்கலாயிற்று!

# உள்ளத் தெளிவு

எஸ். வைத்தியநாதன்

பெஞ்சியின் மீது விடப்பட்டிருந்த குழந்தை நகர்ந்து ஓரத்திற்கு வந்துவிட்டது. இன்னும் ஒரு கணம் சென்றிருந்தால் குழந்தை கீழே விழுந்திருக்கும். தற்செயலாகக் கூடத்துக்கு வந்த கனகம் அதைப் பார்த்துப் பதறிப் போய்ப் பாய்ந்தோடி வாரி எடுத்துக் கொண்டாள். பிறகு உள்ளே சென்று "ஏண்டி ரங்கநாயகி! உனக்குப் புத்தி இருக்கிறதாடி? குழந்தையை அவ்வளவு உயரத்தில் பெஞ்சியின்மேல் விட்டு விட்டு நீபாட்டில் உள்ளே வந்து புஸ்தகம் படிக்கிறாயே! நான் சமயத்துக்கு வந்திரா விட்டால் அது இந்நேரம் கீழே உருண்டு விழுந்து மண்டை உடைந்திருக்குமே! இவ்வளவு அலட்சியமாயிருக்கலாமா? நீயும் ஒரு பெண்தானா?" என்று படபடப்புடன் மருமகளை நோக்கிக் கேட்டாள்.

மாமியாரை ஒரு தரம் நிமிர்ந்து அலட்சியமாகப் பார்த்தாள் ரங்கநாயகி. தான் செய்தது தவறான காரியந்தான் என்பதை உணர்ந்ததன் அறிகுறி ஏதும் அவள் முகத்தில் தென்படவில்லை. "பகவான் எல்லோருக்கும் புத்தியை வைத்துத்தான் படைத்திருக்கிறார். அப்படி புத்தியில்லாத முட்டாளாகப் போய் விடவில்லை இங்கே யாரும்!" என்று கோபத்துடன் முணுமுணுத்தாள்.

"என்னடி, முணுமுணுக்கிறாயே! செய்தது தப்பான காரியம் என்பதை உணரவில்லையே நீ! நல்ல பெண்!"

இதற்கு ரங்கநாயகி ஒன்றும் மறுமொழியே கூறவில்லை. அதற்குமேல் மாமியாருடன் பேசிக் கொண்டிருப்பது தன் கௌரவத்துக்கு ஒவ்வாத காரியம் என அவள் கருதியதாகத் தோன்றியது. என்னும் கொன்னும் வெடித்துக் கொண்டிருந்த தன் முகத்தை 'வெடுக்'கென்று திருப்பிக் கொண்டாள்!

• • •

ரங்கநாயகி கனகத்தின் மாட்டுப் பெண்ணாக அந்த வீட்டிற்கு மூன்று வருஷங்களுக்கு முன் வந்தாள்.

ரங்கநாயகியைக் கண்டிக்கும் தோரணையில் கனகம் சில வார்த்தைகள் கூறியது அன்றுதான் முதல் தடவை. அதுவும் அவள் வேண்டுமென்றே கூறியதன்று. பொறுப்பற்ற விதமாய்க் குழந்தையை அப்படி பெஞ்சியின்மேல் விட்டு விட்டு உள்ளே போய் விட்டாளே, குழந்தை கீழே விழுந்திருந்தால் ஆபத்தாய்ப் போயிருக்குமே என்ற பதற்றத்தினாலும், ஆதங்கத்தினாலும்தான் அவ்விதம் கூறினாள். எனினும் அதைக் கூட நாம் ஏன் சொன்னோம் என்று பிற்பாடு மிகவும் வருத்தப் பட்டாள்.

* * *

மாமியார் தன்னைக் கண்டித்ததைக் கண்டு ரங்கநாயகி மிக்க ஆத்திரங் கொண்டாள்.

சற்று நேரம் சென்ற பின்னர் ரங்கநாயகியின் ஆத்திரமெல்லாம் அழுகையாக மாறியது! மாலை மாலையாகக் கண்ணீர் பெருக்கிய வண்ணம் தாழ்வாரத்திலேயே உட்கார்ந்து விட்டாள். மாமியார் செய்தது மன்னிக்க முடியாத குற்றமாகத் தோன்றியது அவளுக்கு. நிமிஷத்துக்கு நிமிஷம் அவள் கோபமும், துயரமும் அதிகரித்து வந்தன.

மாலை ஆபீஸிலிருந்து திரும்பிய ராமானுஜம் அழுதழுது வீங்கிப் போயிருந்த மனைவியின் கண்களையும், துயரமே உருவமாய்த் தோற்றமளித்த அவள் வதனத்தையுங் கண்டு திடுக்கிட்டுப் போய்விட்டான். "என்ன ரங்கம்! உன் முகம் கலங்கியிருக்கின்றதே! அழுதாயா என்ன? என்ன விஷயம்? என்னிடம் சொல்லு!" என்று பதற்றத்துடன் மூச்சு விடாமல் கேட்டான்.



"நீ எழுதின கதையைப் பத்திரிகையில் படித்தேன். நன்றாக இருந்தது! வேறு யாரேனும் உனக்கு எழுதிக் கொடுத்தார்களா?"

"உனக்குத்தான் படிக்கத் தெரியாதே! வேறு யாரேனும் படித்துச் சொன்னார்களா?"

கனிவும், அனுதாபமும் நிறைந்த கணவனின் சொற்களைக் கேட்டு ரங்கநாயகி, "நான் என் பிறந்தகத்திற்குப் போகிறேன்! என்னைக் கொண்டுபோய் விட்டு விடுங்கள்!" என்று அழுகைக்கும் விம்மலுக்குமிடையே திணறிக் கொண்டே கூறினாள்.

அவளுடைய துயரத்தைக் கண்டு ராமானுஜத்திற்கு இதயமே வெடித்து விடும்போலாகி விட்டது.

"என்ன விஷயம் என்பதைச் சொல்லேன் ரங்கம்! திடீரென்று பிறந்தகம் போகிறேன் என்று கூறினால் என்ன புரிகிறது?" என்று கெஞ்சும் தோரணையில் கேட்டான்.

"புத்திசாலிகள் நிறைந்த இந்த வீட்டில் புத்தியே லவலேசமுமில்லாத நான் இருப்பது தகாது. ஏதோ தெரியாத்தனமாக இவ்வளவு நாளிருந்து விட்டேன். நல்லவேளையாக என் மௌடீகத்தனத்தை உங்கள் அம்மா மத்தியானம் உணர்த்தினார். அப்புறமும் இங்கே இருக்கலாமா?"

"அம்மா என்ன சொன்னாள் என்பதை விவரமாகச் சொல்லேன்."

"என்ன சொன்னார்? எவ்வளவு சொல்லலாமோ அவ்வளவும்சொல்லி விட்டார். நான் புத்தியில்லாத முட்டாளாம். என்னைப் போல் மட்டமானவள் உலகத்திலேயே கிடையாதாம்! அதுமட்டுமா? நான் ஒரு பெண்தானா என்பதிலேயே அவருக்குச் சந்தேகமேற்பட்டு விட்டது! நான் ஏதாவது மிருக வர்க்கத்தைச் சேர்ந்தவள் என்று முடிவு கட்டி விட்டார் போலிருக்கிறது."

"அம்மாவா அப்படிச் சொன்னாள்? அவ்வாறு ஏதும் கூறக் கூடியவளல்லவே! அவள் சொல்லியிருப்பாள் என்பதை என்னால் நம்ப முடியவில்லையே!"

ரங்கநாயகியின் கண்ணீர் பன்மடங்கு அதிகமாயிற்று. "நீங்களும் உங்கள் அம்மா பக்கம் சேர்ந்து கொண்டு விட்டீர்களா? என்ன கொடிய வார்த்தைகள் கூறிவிட்டீர்கள்! நம்ப முடியவில்லை என்கிறீர்களே! அப்படியானால் நான் கூறுவதவ்வளவும் பொய்யா? ஒரு கணத்தில் எவ்வளவு கேவலமாக மதித்து விட்டீர்கள் என்னை! ஆமாம், அப்படியே வைத்துக் கொள்ளுங்கள். நான் பொய் சொல்லுகிறவள். மாய்மாலக்காரி. மிக்க உத்தமர்களாகிய நீங்களும், உங்கள் அம்மாவும் இருக்கிற வீட்டில் நான் இருப்பதற்கு லாயக்கில்லை. அதனால் தான் என்னைப் பிறந்தகத்தில் கொண்டு போய் விட்டு விடுங்கள் என்று கூறினேன். தயவு செய்து இன்றிரவே என்னைக் கொண்டு போய் விட்டு விடுங்கள். உங்களுக்குப் புண்ணியமுண்டு" என்று கூறிக் கொண்டு விசித்து விசித்து அழ ஆரம்பித்துவிட்டாள்.



"நீங்க திரும்பி வரும்போது ஒரு 'லேடி வெட்டர்னரி' டாக்டரை அழைத்து வாருங்கள்!"
"லேடி வெட்டர்னரி டாக்டரா?"
"ஆமாம், நம்ப பசு மாட்டுக்குன்னு உடம்பு சரியாயில்லை?"

ராமானுஜம் வேதனையால் தவித்தான். கெஞ்சும் குரலில் "என்ன ரங்கம்! இப்படிக் கோபித்துக் கொண்டு விட்டாயே! நான் என்ன சொல்லி விட்டேன் இப்போது? அம்மா அப்படிச் சொல்லிருக்க மாட்டாளே என்று சொன்னதற்காகவா இவ்வளவு கோபம்? நீ சொன்னதை நான் நம்புகிறேன். சரிதானே? அப்படியே அம்மா சொல்லியிருந்தாலும் அவளை நான் போய் விசாரித்துக் கொண்டிருப்பதோ, கண்டிப்பதோ அவ்வளவு நன்றாயிராது. என்ன இருந்தாலும் அவள் வயதானவளல்லவா? என்னைக் குழந்தையிலிருந்து அன்பைச் சொரிந்து போஷித்து வளர்த்தவளல்லவா? சிறு வயதிலேயே தந்தையை இழந்துவிட்ட துர்ப்பாக்கியசாலியான நான் முன்னுக்கு வந்ததும், நாலு பேருக்குச் சமமாய்க் கௌரவத்துடன் உலாவுவதும் அவளால் அல்லவா? ஆகவே என் பொருட்டு நீ அவள் சொன்னது ஒன்றையும் பொருட்படுத்தாமலிருக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன். அவள் உன் மனத்தை நோகும்படி செய்து விட்டதற்காக அவள் சார்பாக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். விஷயத்தை இத்துடன் விட்டுவிடு. பிறந்தகம் போகிறேன் என்ற வார்த்தைகளை மீண்டும் கூறாதே!" என்று பலவாறாக அந்த தேவியின் ரௌத்ராகாரமான கோபத்தைச் சமாதானப்படுத்த முயன்றான்.



மனைவி (சமுத்திரக் கரையில்):— என்ன அப்படியே பித்துப் பிடித்தாற்போல் உட்கார்ந்து யோசிக்க ஆரம்பித்து விட்டீர்களே! இந்த அலைகளெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக எவ்வளவு அழகாக வந்து கொண்டிருக்கின்றன? இதை நீங்கள் பார்க்கவே இல்லையா?

கணவன்:—பார்த்துக் கொண்டு தான் இருக்கிறேன். அலைகளைப் பார்த்ததும் எனக்கு வீட்டுச் செலவுகள் ஞாபகத்துக்கு வந்து விட்டன! அலைகளும் இப்படித் தானே வருகின்றன?

சமையலறையில் உட்கார்ந்து ஜபத்தில் ஈடுபட்டிருந்த கனகத்தின் காதுகளில் வெளியே நடந்து கொண்டிருந்த இந்தச் சதிபதிகளின் சம்வாதம் முழுதும் விழுந்தது. ராமானுஜம் கடைசியாகக் கூறிய வார்த்தைகளைக் கேட்டதும் உள்ளே யிருந்து விரைந்து கூடத்துக்கு வந்தாள். "அப்பா, ராமானுஜம்! எனக்காக நீ மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அவளைக் கெஞ்ச வேண்டாண்டா! நானே கேட்டுக் கொண்டு விடுகிறேன். நான் செய்தது தப்புத்தான். பெஞ்சியின் மேல் குழந்தையைப் போட்டு விட்டு உள்ளே போய்விட்டாள். அது கீழே விழுந்து விடுவதற்கிருந்தது. 'ஏண்டி இப்படி அலட்சியமாயிருக்கலாமா? உனக்குப் புத்தி இருக்கா? நீயும் ஒரு பெண்தானா?' என்று எனக்கேற்பட்டிருந்த பதற்றத்திலும், குழந்தையின்மீதுள்ள அன்பினாலும் கேட்டு விட்டேன். அப்படிக் கேட்டிருக்கப் படாது தான். தவறுதான். அதற்காக அவள் பிறந்தகம் போகிறேன் என்பதும், நீ அவளைக் கெஞ்சுவதும் — எதற்காக இதெல்லாம். குற்றவாளி நானல்லவா? நான் செய்ததற்கு பிராயச் சித்தமாக நானே இந்த வீட்டை விட்டுக் கிளம்பி விடுகிறேன். என் தம்பி ராகவன் அவன் வீட்டிற்கு நான் வருவதே இல்லையென்று வெகு நாட்களாகக் குறைப் பட்டுக் கொண்டிருக்கிறான். அங்கே இன்றிரவே கிளம்பி நான் போய் விடுகிறேன்.'

தாயார் கூறிய வார்த்தைகளைக் கேட்டு ராமானுஜம் இடி விழுந்தவன் போலானான். "அம்மா! என்ன இது? வயசான காலத்தில் உன்னை விரட்டி விட்டேன் என்ற பழியல்லவா வந்து சேரும் எனக்கு? நீ எங்கும் போக வேண்டாம்! உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். இங்கேயே இரு" என்று திகைப்புடன் வேண்டிக் கொண்டான்.

அவன் எவ்வளவோ மன்றாடியும் கனகம் அன்றிரவே பிடிவாதமாகத் தம்பியின் ஊருக்குக் கிளம்பி விட்டாள்.

மாமியார் போய் விட்டதைக் கண்டு ரங்கநாயகி அசாத்திய மகிழ்ச்சி யடைந்தாள். ஆனால் ராமானுஜத்திற்கோ, தன் வேண்டுகோளை மீறித் தாயார் கோபித்துக் கொண்டு போய் விட்டதில் மிக மன வருத்தந்தான். தள்ளாத காலத்தில் தாயார் மனக்கிலேச மடையும்படி ஆகிவிட்டதே என்பதை எண்ணுந்தோறும் அவனுக்குத் துக்கம், துக்கமாக வரும். மாமா வீட்டிற்குப் போய் மீண்டும் ஒரு முறை தாயாரை வேண்டிக்கொண்டு அழைத்து வர முயற்சிக்கலாமா என்று பன்முறை அவன் யோசித்தது உண்டு. ஆனால் ரங்கநாயகியை மீறி எதையும் செய்யவும் அவனுக்கு யோசனையா யிருந்தது.

இப்படியே ஆறுமாதங்கள் சென்றன.

ரங்கநாயகி தனக்கு ஒத்தாசைக்காகத் தன் தாயாரை ஒன்றிரண்டு மாதங்கள் வந்து இருந்து விட்டுப் போகும்படி எழுதினாள். அவளும் உடனே புறப்பட்டு வந்தாள்.

ரங்கநாயகியின் தாயார் வந்து ஐந்தாறு தினங்கள் ஆயின. ஒரு நாள் மாலை ஏழு மணியிருக்கும். ராமானுஜம் மொட்டை மாடியில் ஈஸிசேரில் சாய்ந்துகொண்டு காற்று வாங்கிக் கொண்டிருந்தான். அப்பொழுது கீழே அவனுடைய மாமியார் ரங்கநாயகியிடம் ஏதோ கூறிக் கொண்டிருந்தாள். ராமானுஜம் காது கொடுத்துக் கவனித்தான்.

"ஏண்டி ரங்கம்! இப்படிப் பொறுப்பில்லாமல் காரியம் செய்யலாமா? அவ்வளவு பாலையும் பூனை குடித்து விட்டுப் போய் விட்டதே! பார்த்துச் சரியாய் மூடி வைக்க வேண்டாமா? நீயும் ஒரு பொம்மனாட்டி தானா? கொஞ்சமாவது புத்தி வேண்டாமா?" என்று ரங்கத்தின் தாயார் கூறினாள்.

"இல்லையம்மா! அவசரத்தில் சரியாய்க் கவனித்து மூடாமல் போய் விட்டேன் போலிருக்கிறது. உன் மாப்பிள்ளையை ஸ்டோருக்குப் போய் மீண்டும் ஒரு சேர் பால் வாங்கிவரச் சொல்லுகிறேன்" என்று கூறி விட்டு மாடியேறி வந்தாள் ரங்கநாயகி.

கீழே நடந்த சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்த ராமானுஜத்திற்கு மின்னல் வேகத்தில் ஒரு யோசனை தோன்றியது. ரங்கநாயகி வரட்டும் மாடிக்கு என்று காத்துக் கொண்டிருந்தான்.

"என்ன விஷயம் ரங்கம்? உன் அம்மா ஏதோ கோபித்துக் கொண்டாள் போலிருக்கிறதே" என்று அவன் வந்ததும் கேட்டான். "ஒன்றுமில்லை! பாலைச் சரியாய் மூடிவைக்கா

திருந்து விட்டேன். எல்லாவற்றையும் பூனை குடித்து விட்டது. அதற்காகத்தான் அம்மா கோபித்துக் கொண்டாள்.''

"'நீயும் ஒரு பெண்ணு? கொஞ்சமாவது புத்தி வேண்டாமா?' என்று உங்கம்மா ரொம்பக் கடுமையாகக் கோபித்துக் கொண்டாள் போலிருக்கிறதே! அதனால் உனக்கு மனத்தாங்கல் ஏற்பட வில்லையா?''

"என்னை யார் கோபித்துக்கொண்டு விட்டார்கள்? சொந்தத் தாயார் தானே? அவளுக்கு என்னைக் கடிந்து கொள்ள உரிமையில்லையா? யாரேனும் இதற்காக மனத் தாங்கல், அடைவார்களா?''

ராமானுஜம் புன்னகை புரிந்தான். பிறகு "ரங்கம்! நான் சொல்லப் போவதை தயவுசெய்து வருத்தப் படாமல், கோபமுறுமல், கொஞ்சம் பொறுமையாகக் கேட்டுவிட்டு பிற்பாடு நன்ருக யோசனை செய்து பார்'' என்று ஆரம்பித்தான்.

"என்னத்துக்கு இவ்வளவு பூர்வ பீடிகைப் போடுகிறீர்கள். எதையாவது சொல்ல வேண்டுமானுல் சொல்லுங்களேன்'' என்ருள் ரங்கநாயகி.

"அன்று என் தாயார் இங்கே யிருந்து கிளம்பி மாமா வீட்டுக்குப் போனுளே, அன்று நடந்த சம்பவம் ஞாபக மிருக்கிறதா? அன்று உன்னைக் கடிந்து கொண்டு என் தாயார் உன்னை சில வார்த்தைகள் கூறினுளே அது என்ன என்பது உனக்கு ஞாபக மிருக்கிறதா? 'நீயும் ஒரு பெண்ணுடி? உனக்குப் புத்தி யிருக்கிறதாடி?' என்ற—உன் தாயார் சற்று முன் பிரயோகித்த—இதே மொழிகளைத்தானே அவளும் கூறினுள்? அதற்காக நீ அன்று எவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்தாய்? உன்னை அவள் அவமதித்து விட்டதாகக் கூறி ரகளை செய்தாய். ஆனுல் இன்று உன் தாயார் கூறியதைப் பொருட்படுத்தவே இல்லை நீ! இதேபோல் அன்றும் உன் மாமியார் கூறிய மொழிகளைச் சகஜபாவத்தில் எடுத்துக் கொண்டு, 'மாமியார் கண்டித்தால் என்ன பிசகு? அவருக்கு அதற்கு உரிமையில்லையா?' என்று நீ நினைத்திருந்தாயானுல் எவ்வளவு நன்ருயிருந்திருக்கும்? என் அம்மா—உன் மாமியார்—தள்ளாத வயதில் மனம் நொந்து இங்கிருந்து போகும்படி நேர்ந்திருக்குமா? நன்ருய்ச் சிந்தித்துப் பார்'' என்று கூறிவிட்டு ஆவலுடன் தன் அருமை மனைவியின் முகத்தை நோக்கினுன்.

அவன் எதிர்பார்த்த மாறுதல்கள் அதில் தோன்றின! ரங்கநாயகின் மனம் தெளிவடைய வாரம்பித்தது. கணவனுக்குச் சற்று நேரம் மறுமொழி கூருமல் யோசித்த வண்ணம் நின்று கொண்டிருந்தாள்.



"தேர்தலுக்கு நிக்கிற பேர்வழியைப் பாரு! படுத்துக்கொண்டு விட்டாயே!''

"அடே! இத்தனை நாழி நின்றுகொண்டு தான் இருந்தேன்! இப்பொழுதுதான் சற்றுப் படுத்தேன்!''


ரங்கநாயகியின் உள்ளம் ஒரு தடவை குழம்பியது. பழைய சம்பவத்தையும் இந்த நிகழ்ச்சியையும் சேர்த்துச் சிந்திக்கத் தொடங்கியது. அவள் உள்ளத்தில் ஒரு தெளிவு ஏற்பட்டது.

இவர் கூறுவது அனைத்தும் உண்மைதான்? நான் ஏன் இவ்வளவு அறிவற்றவளாகப் போய்விட்டேன்! அன்று மாமியார், அம்மா கூறிய இதே வார்த்தைகளைத் தானே கூறினுர்? என்னை அவர் அன்று கண்டித்ததற்கு வேண்டிய காரணமும் இருந்ததல்லவா? என்னைக் கண்டிப்பதற்கு உரிமை கிடையாதா அவருக்கு? அதைச் சரியான முறையில் சகஜமாக எடுத்துக் கொள்ளாமல் முட்டாள்தனமாய்க் குதித்தேனே! இந்த மனந்தான் எவ்வளவு விசித்திரமானது! ஒரே விதமான வார்த்தைகளை இருவர் கூறினுர்கள். ஒன்றைச் சகஜமாய் எடுத்துக் கொள்கிறது இம்மனம்; இன்னொருவர் கூறியதை விகற்பமாய் எடுத்துக்கொண்டு அசாத்திய கோபத்தை அடைகிறது! எல்லாம் நம் மனம் செய்கிற விபரீதந்தான். காமாலைக் கண்ணன் பார்க்கிற விடமெல்லாம் மஞ்சளாய்த் தெரியும் என்றபடி, மாமியார்மேல் நம்மனசில் துவேஷமிருந்த படியால்தான் அவர் செய்தது குற்றமாகப் பட்டது நமக்கு, தள்ளாத காலத்தில் அவர் வயிறு எரிந்தால் நாம் நன்ருயிருக்க முடியுமா? முதலில் அவர் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டு இங்கு திரும்பவும் அழைத்துக் கொண்டு வரவேண்டும்?- பச்சாத்தாபத்தால் துடித்தாள் ரங்கநாயகி. நீர் நிரம்பிய கண்களால் கணவனை நோக்கியவாறு "இன்றிரவே இருவருமாகக் கிளம்பிப் போய் என் மாமியை அழைத்துக் கொண்டு வருவோம். பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை உடனே பண்ணுங்கள்'' என்ருள்.

உலகெங்கும், வெற்றிபெற்ற மனிதர்கள்

# ஜில்லெட்

உபயோகிக்கிறார்கள்...






ஒரு தனவந்தர் ப்ளு ஜில்லெட்டை விட உயர்ந்தரக பிளேடை வாங்க முடியாது. ஆயினும் இதன் விலை மிகவும் சரசமாயிருக்கிறது. இந்த புகழ்பெற்ற பிளேடுகள் நீடித்தகாலம் உழைப்பதால் ஒவ்வொரு மனிதனும் சமமான சுகபோகத்தை அனுபவிக்க முடியும். ப்ளு ஜில்லெட் பிளேடுகளையே வாங்குங்கள். (மின்சாரத்தால் கெட்டியாக்கப்பட்டதும் பிரத்தியேகமாக பதப்படுத்தப்பட்டதுமான ஸ்டீல் தயாரித்தது). உங்கள் நாகரீகமான தோற்றத்தினால் வாழ்க்கையில் வெற்றிபெற்ற மனிதர்களிடையே நீங்களும் இடம் பெறுங்கள்.

# ப்ளு ஜில்லெட் பிளேடுகள்


5 பிளேடுகளுக்கு 14 அணா


'கோலினஸ்'
புன்னகையில்
ஆரோக்யம்
ததும்புகிறது!
இந்தியாவில் தயாரிப்பாளர்கள்:—
ஜியாப்ரே மானர்ஸ் & கோ. லிட்., பம்பாய் 1
கிளைகள்:- கல்கத்தா - மதராஸ் - டில்லி


தலைமயிர்
கொட்டுகிறதா?
வைடெக்ஸ்
மயிரை வளர்க்கிறது
Pearline Paris Ltd.
P.O. Box 493
Bombay.

# ஈயைக் கொல்லுங்கள்

## —அவை டைபாய்ட், வயிற்றுக் கடுப்பு, காலரா, வயிற்றுப் போக்கு, க்ஷயம், ஆந்த்ராக்ஸ் முதலிய நோய்க் கிருமிகளை எடுத்துச் செல்லுகின்றன




• ஒரு தடவைக்கு 120 முட்டைகள் இடுகின்றன. ஒரே ஜோடி ஈக்களிலிருந்து சில மாசங்களுக்குள் லட்சக்கணக்கான சந்ததிகள் ஏற்பட்டுவிடக்கூடும்.

முட்டை இவைகளிலிருந்தே ஈ எருக்குழி, அழுகிய உணவுப் பதார்த்தங்கள், குப்பை கூளங்கள் இவற்றிலேயே வாழ்கிறது. அதனுடம்பிலுள்ள சிறுசிறு ரோமங்கள் வழியாக இந்த அசுத்தங்களைப் போகுமிடமெல்லாம் எடுத்துச்செல்கிறது. ஒரே ஈயில் 60,00,000க்கு மதிகமான ரோகக்கிருமிகள் காணப்பட்டுள்ளன!

ஞாபகமிருக்கட்டும்: ப்ளிட்டிலிருக்கும் 5 கொடிய கீடாஸினிகள், ஈக்களையும் மற்ற எல்லாப் பூச்சிகளையும் துரிதமாகவும் நிச்சயமாகவும் கொல்லுகின்றன.

• உங்களிடையே நோயைப் பரப்புமுன் அதைக்கொல்லுங்கள்!




ஸ்டாண்டர்ட் வாக்குவம் ஆயில் கம்பெனி
(கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)


உறுதியான
தேகதிடம்
நீங்களும்
பெறுக
வாட்டர்பரீஸ்
காம்பவுண்ட்
WATERBURY'S
COMPOUND
வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்
NAS 743


டிரக்குகள்
மற்றும்
பஸ்ஸுகளுக்கு
சிவப்பு வளையத்தைக் கவனித்து வாங்கவும்
சூப்பர் இந்தியா

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

REGD. No. M. 4392

*Registered as a newspaper in Ceylon*

